பருவ வெளியீட்டுப்பகுதி
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

272

மார்கழி
2025

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்




# 2025 ஐப்பசி மாத

## ஜீவநதி வெளியீடுகள் சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2025 - மார்கழி (01.12.2025)

# பொருளடக்கம்

1. கண்ணீரிற் பிறக்கும் கடல் - சந்திரா இரவீந்திரன்

2. காதலின் கார் காலம் - கே.எம்.செல்வதாஸ்

3. போர் ஆற்றில் நனைந்த பெண் - வெற்றி துஷ்யந்தன்

4. யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் வாய்மொழி வரலாறு - அர்ச்சுனன்

5. ஒட்டாண்டிகள் - யோண்சன் இராஜ்குமார்

6. இரு உலகம் பல மனிதர் - சு.இளந்தமிழன்

7. விசுவாசம் ஜெகநாதன் - கீர்த்திகா ஜெயபாலசிங்கம்

8. இரு கப்பிகள் - கந்தையா பத்மானந்தன்

9. நேரகாலம் - நா.சிவசிதம்பரம்

10. அலியார் பீர் முகமது வாய்மொழி வரலாறு - தீரன் ஆர்.எம்.நௌசாத்

11. உணர்வெழுதும் கவிதை - அர்ச்சுனன்

12. தென்றலின்சிறகுகள் - அர்ச்சுனன்

13. உருமாறும் பழமொழிகள் -திக்குவல்லை கமால்

14. மணம் கமழும் எமது முற்றத்து மலர்கள் - தாமரைச் செல்வி

15.சிதம்பரபிள்ளை திருச்செந்திநாதன் வாய்மொழி வரலாறு - ஆதிலட்சுமி சிவகுமார்

16.மழைக்கால மேகம் - இ.இராஜேஸ்கண்ணன்

17. புயலுக்குப் பின் - அர்ச்சுனன்

18 காற்றுக்கும் வேர்த்தது - இ.சு.முரளிதரன்

19. உலக இலக்கிய தத்துவவெளி - ந.இரவீந்திரன்

20. மணம் கமழும் எமது முற்றத்து மலர்கள் பாகம் 2 - ரஞ்ஜனி சுப்ரமணியம்

21. படைப்பியல் நோககில் பார்வையும் விமர்சனங்களும் - குலசிங்கம் வசீகரன்

22.மாடிவிடும் ஒரு தென்னை மரமும் - ஈழக்கவி

23. அவலை நினைத்துக்கொண்டு - அர்ச்சுனன்

24. ஈழமண்ணில் இந்திய இராணுவம் நூல் வழிப்பதிவுகள் - ஐங்கரன் விக்கினேஸ்வரா

25. நா.யேகேந்திரநாதன் வாய்மொழி வரலாறு - கந்தர்மடம் அ.அஜந்தன்

26.அவளுக்கென்று ஓர் உலகம் - கௌசி

27. இடுக்கண் வருங்கால் - யசோதரா சாந்தகுமார்

28.நினைவழியா நூல்கள் - அர்ச்சுனன்

29. பூரித்த பொன் வனம் - பாலமுனை பாறூக்

30 .இலக்கியஉலா - மாத்தளை சோமு

31. பல்வித கவிதைச் சொலை - புலோலியூர் வேலி நந்தகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PL

# ஜீவநதி

**2025 மார்கழி இதழ் – 272**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## ஜீவநதியின் சாதனைகளில் இதுவுமொன்று!

ஜீவநதி பதிப்பகம் ஈழத்து படைப்பு இலக்கியவாதிகளின் படைப்புகளை மிகுந்த விருப்புடன் வெளியிட்டு வருகின்றது. ஈழத்து பதிப்புத்துறையில் படைப்பிலக்கியம் சார்ந்த அதிக நூல்களை வெளியிட்ட பெருமையும் ஜீவநதி பதிப்பகத்தையே சாரும். ஈழத்தில் ஐப்பசி மாதத்தை வாசிப்பு மாதமாக கொண்டாடி வருகின்றார்கள். இது தொடர்பான பதிவுகளை எமது முன்னைய இதழ்களில் விரிவாக குறிப்பிட்டுள்ளோம். ஜீவநதி பதிப்பகம் சென்ற ஆண்டு(2024) ஐப்பசியிலும் ஒவ்வொரு நாளும் ஒரு நூலை பதிப்பித்து முகநூலூடாக புத்தகம் தொடர்பான விளம்பரத்தை பதிவு செய்து, 31 நூல்களை பிரசவித்தது. சதாரமாக ஒரு நூலை போடுவதற்கு பலர் படுகின்ற சிரமத்துக்கு மத்தியில் ஜீவநதி 31 நூல்களை வெளியிட்டு தனது இலக்கிய பாதையில் தனித்துவமாக சென்று கொண்டு இருப்பது பல விமர்சகர்கள் கண்களுக்கு தெரிவதில்லை. எல்லாவற்றிலும் மேலாக ஜீவநதி பதிப்பகத்தின் நூல்கள் கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ச்சியாக பல விருதுகளை பெற்று வருகிறது. கடந்த மூன்றாண்டுகளாக ஜீவநதியின் நாவல்கள் தேசிய சாகித்திய விருதை பெற்றுள்ளன.

2025 ஆம் ஆண்டும் ஓர்மத்துடன் ஜீவநதி பதிப்பகம் தன் வழியில் 31 நாளும் 31 நூல்களை வெளியிட்டுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு நல்கிய எழுத்தாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றி. எனது உவ்வொரு மணித்துளியையும் பயன்பாடாக அமைய வேண்டும் என்ற நோக்குடையவன் நான். அந்த வகையில் 31 நாட்களும் நித்திராதேவிக்கு விடை கொடுத்து இந்த நுல்களை பதிப்பித்துள்ளேன். இதில் சிலர் முதல் நூலை வெளியிட்டு மகிழ்ந்துள்ளார்கள். இ3த 31 நூல்கள் பற்றிய விமர்சனங்களை தாங்கி இந்த சிறப்பிதழ் வெளி வருகின்றது. வழமை போல சிலர் ஒப்புக் கொண்டு சில நூல்கள் தொடர்பான விமர்சனத்தை தரவில்லை, இருந்தாலும் அவற்றையும் சிறு குறிப்புகளுடன் இணைத்து இந்த இதழை முழுமைப்படுத்தி உள்ளேன்.

– க.பரணீதரன்

ஜீவநதி கிடைக்கும் இடங்கள் / விற்பனையில்உதவும் நல்லுள்ளங்கள்
பரணீ புத்தகக்கூடம் - நெல்லியடி
புத்தகக் கூடம் - திருநெல்வேலி
பூபாலசிங்கம் - யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் - செட்டித்தெரு, கொழும்பு
அ.யேசுராசா, நா.நவராஜ், சி.ரமேஷ், கந்தர்மடம் அ.அஜந்தன்,
புத்தகப்பண்பாட்டுப் பேரவை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரா இரவீந்திரன்(லண்டன்)

# "கண்ணீரிற் பிறக்கும் கடல்" பெண்ணியக் கவிதைகள்




இருபத்தியொரு பெண் கவிஞர்கள் எழுதிய, 38 கவிதைகளை உள்ளடக்கிய 80 பக்கங்களைக் கொண்ட ஒரு கவிதைத் தொகுப்பு இது. பரணீதரனை ஆசிரியராகக் கொண்டு இலங்கையில் வெளிவந்து கொண்டிருக்கும் ஜீவநதி இதழின் ஜீவநதி வெளியீடாக இந்நூல் வந்திருக்கிறது.

இத்தொகுப்பில் எழுதப்பட்டிருக்கும் கவிதைகள் அனைத்தும், காலம் காலமாய் எமது சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும், சமத்துவமற்ற மனிதத்துவத்தை, ஆணாதிக்கத்தின் எழுதப்படாத சட்டங்களை அனுசரித்தும், சகித்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களின் வாழ்வியலை, பல்வேறு உணர்வுகளின் வழியாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

காலம் எவ்வளவு தூரம் கடந்து போனாலும், அதிநவீன உலகம் எம்மைச் சுற்றி வேகமாக உருவாகிக் கொண்டிருந்தாலும், இன்னமும் பல சமூகங்களில் பெண்களுக்கிடப்பட்ட அடிமை விலங்குகள் அறுபடாமலே இருக்கின்றன என்பதை இக்கவிதைகள் பெருங் குரலெடுத்துப் பறைசாற்றுகின்றன.

ஒரு சிறுபருவப் பெண்ணிலிருந்து வயதான குடும்பப் பெண்கள் வரை, அவர்களுக்குள் உழன்று கொண்டேயிருக்கும் தீராத மனக்குமைச்சல்கள், ஊமை வலிகள், ரகசியக் குமுறல்கள், சிந்த முடியாத கண்ணீர், பேச முடியாத வார்த்தைகள், வெளிப்படுத்தி விட முடியாத கோபங்கள், விசனங்கள், கேள்விகள் எனப் பல்வேறு உணர்வுகளின் கொந்தளிப்பாக ஒவ்வொரு கவிதைகளும் ஒவ்வொரு வடிவத்தில் இங்கு வடிக்கப் பட்டிருக்கின்றன.

இவற்றில் சில கவிதைகள் நெருப்பாய் எரிகின்றன. சில அதிர்வுகளோடு வெடித்துச் சிதறுகின்றன. சில வாழ்வின் மீதான வெறுப்பைக் காறி உமிழ்கின்றன. சிலவோ கண்ணீர்த்துளிகளை ரகசியமாய் துடைத்து விட்டுப் போகின்றன. சில உமிழ்நீரை மென்று விழுங்கித் தமக்குத் தாமே ஆறுதல் சொல்லிவிட்டு, அதே திசையில் போகின்றன. சில விரக்தியின் விளிம்பில் நின்று அடுத்த சந்ததியினருக்கு தம் அனுபவங்களைப் போதனைகளாக்கிச் செல்கின்றன.

இத்தொகுப்பிலிருக்கும் 38 கவிதைகளில், கருத்தாழம், கவிநயம், சொற்செறிவு எனச் சிறந்த கவிதைகளுக்குரிய தேர்ந்த அம்சங்களுடன் அமைந்திருக்கும் சில கவிதைகள் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லாமல் நான் கடந்து சென்றுவிடமுடியாது.

தொகுப்பில் முதலாவது கவிதையாக இடம் பெற்றிருக்கும் ஆதிலட்சுமி சிவகுமார் எழுதியிருக்கும் "பெண்ணிடமிருந்து பெண்ணுக்கு" என்ற கவிதையும் "கண்ணீரிற் பிறக்கும் கடல்" என்ற கவிதையும் குறிப்பிட்டுக் கூறப்படவேண்டியவை. இதில் ஆதிலட்சுமி எழுதிய "கண்ணீரிற் பிறக்கும் கடல்" என்ற கவிதையின் தலைப்பே இத்தொகுப்பின் தலைப்பாகவும் வந்திருப்பதை நாம் காணலாம். இவரது "பெண்ணிடமிருந்து பெண்ணுக்கு" என்ற கவிதை ஆழமான ஒரு செய்தியை எமக்கு அழுத்திச் சொல்லி விட்டுச் செல்கிறது.

சாரங்கா எழுதிய "ஆதிக்கடலின் பாடல் எனது" என்ற கவிதையும் கடந்து சென்றுவிட முடியாத ஒரு முக்கியமான கவிதை.

தாட்சாயிணியின் "பறத்தல்" என்ற கவிதை சுதந்திரத்தை விரும்பி தன்னிச்சையாய் பறக்கத்துடிக்கும் ஒரு பெண்ணின் மனக்கிடக்கையை ஓர் அழகான குறியீட்டுக் கவிதையாகத் தந்திருக்கிறார் அவர்.

கலாநிதி ஜீவகுமாரன் எழுதிய "இதுக்குத்தானா?" என்ற கவிதையும், "அவள் பெயர் அஸ்தி" என்ற கவிதையும் இந்தத் தொகுப்பின் மிக முக்கியமான கவிதைகள் என்று சொல்வேன். இந்தக் கவிதைகள் சொல்லும் சேதி ஒவ்வொருவர் நெஞ்சிலும் சம்மட்டியால் தாக்குவது போன்ற உணர்வினையும், அதீத வேதனை உணர்வையும் ஏற்படுத்தக்கூடியது. இவ்விரண்டு கவிதைகளுமே சமூகத்திடம் காத்திரமான பல கேள்விகளை மறைமுகமாகக் கேட்கின்றன.

சங்கரி சிவகணேசன் எழுதிய "பெண் எனும் பெருமை" என்ற குடும்ப வாழ்வில் சிக்கித் திணறும் பல பெண்களது வாழ்வை அழகாகச் சொல்லிச் செல்கிறது.

மற்றும், பிரியாந்தி அருமைத்துரையின் "தேவியின் ஆயிரம் நாமங்கள்" கவிதை பெருஞ்சேதியை சொல்லிச்செல்லும் மிகச்சிறிய அழகான கவிதை.

ரஜிதா எழுதிய இருகவிதைகள் "என்னத்தைக் கண்டன்", "தெய்வம்". இந்த இந்த இரு கவிதைகளுமே எடுத்து வைத்துப் பேசப்படவேண்டிய கவிதைகள்.

மற்றும் நிவேதா உதயராஜனின் "சிறகுகள் வலு இழக்கலாமா", தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா எழுதிய "வீரமங்கை", பொலிகையூர் கோகிலாவின் "பேரிடை அழகி" போன்ற கவிதைகளும் வாசிக்கப்பட வேண்டிய கவிதைகள்.

இந்தத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் 38 கவிதைகளும் எமக்குச் சொல்லிச் செல்லும் செய்திகளுக்கு வலுச்சேர்ப்பதும், வலு நலிதலும் அவை சொல்லப்படும் விதத்தில், சொல்லப்படும் நயத்தில் வெவ்வேறு தளங்களாய் தரம் பிரிந்து நிற்கின்றன. அவற்றை ஆழ்ந்து வாசித்து, அனுபவித்து, உள்வாங்கிக் கொள்வதும், கடந்து செல்வதும் வாசகர்களைப் பொறுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எம்.செல்வதாஸ்

# காதலின் நினைந்துருகலைச் சொற்களால் பொழிந்திருக்கும் காதலின் கார்காலம்



"ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும்
தம்முள் கூடுகின்ற காலத்துப் பிறந்த
பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னே
இவ்வாறு என்று யாண்டும் கூறப்பெறாததாய்
உள்ளத்தால் உணர்ந்து கொள்ளும் பொருள் அகம்"
-நச்சினார்க்கினியார்-

"காதல்" ஓர் அழகிய உணர்வு. இந்த உலகம் இன்றளவும் இற்றுப்போகாமல் இயங்கிக் கொண்டிருப்பது காதல் என்னும் ஒற்றைப் புள்ளியில்தான்.

"... செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே..."

என்று குறுந்தொகையில் பாடப்பட்ட காதலை "பூவின் மணமெனப் புனிதத் தமிழனுக்கு ஆவியாகும் அகப்பொருள் இயல்பே" எனப் பெருமை செய்துள்ளார். தண்டபாணி சுவாமிகள் மலருக்கு நறுமணம் இன்றியமையாதது அதுபோலத் தூய தமிழுக்கு காதலெனும் அகப்பொருள் இலக்கணம் இன்றியமையாதது என்பது அதன் பொருள்.

"சாதல் அஞ்சேன் அஞ்சுலன் சாலில் பிறப்புப்
பிறிதாலெது ஆயின் மறக்குவன் கொல்
என் காதலன் எனலே..."

என்கிறாள். நற்றிணையில் தலைவி, தோழி, நான் சாவுக்கு அஞ்சவில்லை. ஆனால் வேறொன்றிற்காக அஞ்சுகிறேன். அது மறுபிறப்பென்று ஒன்றிருப்பின் அதில் தலைவனை மறந்து விடுவேனோ என்பதுதான் என்கிறார் அந்தத் தலைவி.

இத்தகு காதலின் நயமிகு பக்கங்களை அதன் மென்மையும் இன்பமும் மாறா இயல்போடு காதலின் கார்காலத் தொகுப்பினூடாக வாசகர்களைச் சந்தித்திருக்கிறார் கவிதாயினி சங்கரி சிவகணேசன்.

சங்கத்தமிழில் சொல்லப்பட்ட அழகிய காதல் காட்சிகளை சமகாலத் தமிழில் ஏற்றி அழகு பார்த்திருக்கிறார். மொழி இவருக்கு வசப்பட்டிருக்கிறது.

"இந்த மழையும்
இந்தப் பொழுதுகளும்
நம்மைப் பற்றித்தான்
நினைத்துக் கொண்டிருக்கின்றன
ஆதலால்தான்
உன்னை நனைத்த அதேமழை
என் வாசல் வந்து பொழிகிறது"
(பக்கம் 52)

இயற்கையைச் சாட்சியாக்கி காதலர்களுக்கிடையிலான பிணைப்பை அன்பின் ஆழத்தை இங்கு காணமுடிகின்றது.

"வளைவதும் நெளிந்தும்
நகரும் குளிர்காற்றின்
லாலகமாய்
நானும் எடையற்று
மிதக்கின்றேன்
உன் நினைவுகளில்

நான் பறவையாகின்றேன்
நீ வானமாகிறாய்"
(பக்கம் 54)

நினைவுகள் என்றும் இதமானவை. காதலில் நினைவுகள் தரும். சுகம் சொற்களுள் கட்டுண்டு போகாதது. அத்தகு நினைவிடைத் தோய்தலை சொல்லிறுக்க மின்றி லாவகமான முறையில் இங்கு சொல்லிச் சென்றிருக்கிறார்.

"காதல் பாடலில் கலந்து களித்து
நெகிழ்ந்து பிரிந்து
மொழிகளை எல்லாம்
தின்று தீர்த்த பின்னும்
ஏதேதோ பேசிக்கொண்டுதானிருக்கிறது..."
(பக்கம் 11)

கலந்து களிந்து நெகிழ்ந்து பிரிந்து என மகிழ்தல் - பிரிதல் - துயருறுதல் என காதல் வாழ்வின் அத்தனை பக்கங்களையும் சங்கத்தமிழில் பொழிந்திருக்கிறார் சங்கரி.

"என் பிரியமே...!
நேற்றைய நிலவில்
சுயாதீனமாய் நாம்
மிதந்து கொண்டிருந்தோம் என்பதை
நினைத்து இன்றும்
பிரமித்துக் கொண்டிருக்கிறேன்
இந்த இரவு முழுவதும்

நீயென்றும் நானென்றும்
யாதொன்றும் அறியாத தேசத்தில்
குளித்துக் கொண்டிருந்தோம்
நிலவு முகில்களால்
துவட்டிக் கொண்டிருந்தது.."
(பக்கம் 43)

"நிலவொளியில் வளர்கிறது காதல்" எனும் கவிதை இது. காதலின் மென்மையைக் குழைத்து உணர்வுச் சாறாகப் பிழிந்து இக்கவிதை ஆக்கப் பெற்றிருக்கின்றது. காதலை அதன் உணர்வு நிலை குன்றாது சாரலாய்ப் பொழிந்திருக்கும் காதலின் கார்காலத்தில் நனைந்து அனைவரும் இன்புறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி துஷ்யந்தன்

# ஊழிக்குள் உலவிய உன்னதங்களை பாடும் "போர் ஆற்றில் நனைந்த பெண்" கவிதை தொகுதி




ஈழத்து நவீன இலக்கிய செல்நெறியில் கவிதை இலக்கியத்திற்கான தனித்துவம் என்பது அளப்பரியது. நல்லதொரு கவிதை வாசக மனப்பரப்பை வருடவும் செய்யும், திருடவும் செய்யும், அழுதுவிடவும் செய்யும் ,எழுந்துவிடவும் செய்யும். அப்படியாக உணர்வியல் சார்ந்து இயங்குகின்ற பல கவிதைகள் எங்கள் மண்ணின் போர்க்கால இலக்கியங்கள் என்கின்ற வகையறாக்குள் அன்றுதொட்டு இன்றுவரை எழுந்து கொண்டே வருகின்றது.

முப்பதாண்டு கால தமிழ் மக்களின் உரிமைப் போரியல் நீட்சியில் இலக்கிய வடிவங்கள் காலம் தோறும் செய்திருந்த பங்களிப்புக்கள் எண்ணிலடங்கா தவை.

பல படைப்பாளிகள் இந்த வகையறா சார் எழுத்துப் பங்களிப்போடு இந்த மண்ணின் விடுதலைக்கு பணியாற்றினார்கள் எழுத்து மூலம்.

குறிப்பாக பல பெண்படைப்பாளிகள் இந்த தளத்தில் தமது படைப்பாற்றலை வெளிக்கொணர்ந் தார்கள். அவை அக்காலத்தில் உரிய முறையில் உயர் பீடங்களினூடாக வெளிவந்தன.

மிகுந்த வாசிப்பிற்கான சூழலையும் அவை வரித்துக்கொண்டன.

குறிப்பாக அந்த வரியுடைகளின் வலிமைமிகு வரிகள் இன்றும் தனித்து மறுவாசிப்பிற்கு உரியானவை யாக இருக்கின்றன.

ஆயினும் போர் மௌனிப்பின் பின்னரான இந்த சமகாலத்தில் மிக அண்மையில் கைக்குள் கிடைத்த தொகுப்பாக போர் ஆற்றில் நனைந்த பெண் என்னும் ஈழத்தின் மிக முக்கியமான பதினொரு பெண் கவிதாயினி களின் கவிதைகளை தாங்கி வந்திருக்கின்றன.

ஈழத்தில் புத்தக வெளியீட்டினை வியாபார உத்தி கருதாது அதி உன்னத இலக்கிய பிரியத்தின் காரண மாகவும், படைப்பாளுமைகளை எந்த வேறுபாடுமன்றி ஊக்குவித்து வருகின்ற ஜீவநதி பதிப்பகத்தின் வெளி யீடாக அதன் பிரதம ஆசிரியர் கலாமணி பரணீதரனின் தொகுப்புருவாக்கமாக இந்த நூல் வெளியாகியிருக் கின்றது.

இந்தக் கவிதைகளை அரிதாரம் பூசப்பட்டிருக் கின்ற சொற்களின் குவியலென்றோ ,அல்லது ஆடை அணிகலன்களை அணிந்து கொண்டு வெளித்தெரியும் கவிதைகள் என்றோ யாரும் சொல்லிவிட முடியாது.

இந்த மண்ணின் விடுதலை வேள்வியில் ஆண் களுக்கு சமமாக பெண்கள் அனைத்து துறைகளிலும் அதி உச்சமாக மிளிர்ந்தார்கள்.

வலிமைமிகு பேனாவை ஏந்திய அதே கரங்கள் சமகாலத்தில் சுடுகலங்களையும் சுமந்து கொண்டு போர்முனைக்குள் அக்கினித்தாண்டவம் புரிந்தது.

அப்படியாக பெண்களின் வீர சாகசங்கள் எண்ணிலடங்காதவை.

இந்த தொகுதியும் போரும் பெண்களும் என்னும் உப தலைப்பையும் தாங்கி வந்திருக்கிறது. ஆகவே கையிலெடுத்த போதே இவை போரியல் சார் கவிதைகள் என்ற முன் முடிவிற்கு வரக்கூடியதாக இருந்தது. இந்தத் தொகுதியில் கவிதைகளை யாத்திருக் கின்ற படைப்பாளுமைகள் பலர் முன்னாள் போராளி களாக இருந்திருந்திருக்கின்றார்கள், நேரடியாக களங் களோடு சம்மந்தப்பட்டிருந்தவர்களாக இருக்கின்றார் கள், போர்க்கள வாழ்வுக்குள் சிக்குண்டவர்களாக இருந் திருக்கின்றார்கள்.

ஒவ்வொரு கவிதைகளும் நிறைய அகம்சார் விடயங்களை பேசியிருக்கின்றது. போர்க்கால வாழ்வு எப்படி இருந்தது, எங்கள் பெண்கள் அதற்குள் எப்படி சன்னதங்கள் புரிந்தார்கள், கைகளுக்குள் வழங்கப் பட்டிருந்த பெரும் பொறுப்புக்களை எப்படி கையாண் டார்கள் என்பன பற்றியும் இப்போது அதில் பங்கு பற்றுனர்களாக இருந்த பெண்களின் மனோநிலையில் இந்த சமூகம் எப்படியிருக்கின்றது என்பன பற்றியதான தெளிவான வெளிப்படுத்துதல்களை கவிதைகள் காட்டி யிருக்கின்றன.

குறிப்பாக ஈழத்தின் மிக முக்கியமான கவிதா யினிகளில் ஒருவரான வெற்றிச் செல்வியின் சூரியச் சிறகு என்கின்ற கவிதையில்,

விமர்சனங்கள் இருக்கலாம்
வீம்புக்கும் சொல்லலாம்
எனக்கான கூட்டை கட்ட
எனக்கேற்பட்ட நியாயங்களை
பலருக்காகவும் நான் சிறகுவலிக்க
பறந்த பறப்புகளை,
என்னிடம் கேட்டாலன்றி
உங்களுக்கெப்படி புரியும் சொல்லுங்கள்.

என்கின்ற வரிகள் சமகால கடின சூழலில் வாழ்தலுக்கு போராடும் ஒரு களத்தின் பயணியின் ஆழ்மன வெளிச்சத்தை காட்டுகிறது.

படைப்பாளி பிரபா அன்புவின் காவல் தேவதை கள் மற்றும் வீர வித்துக்கள் என்கின்ற இருக்கவிதைகளும் பெண் போராளிகளின் வீரத்தையும் அர்ப்பணிப்பையும் நேரடியாகவே சொல்கிறது குறிப்பாக வீர வித்துக்கள் கவிதையில்

மலராக மலர்ந்து
களங்களில்
மின்னலாக மின்னியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்தீ சுமந்த
மேனியர்
பெண்களின் வலிமைக்கு
சின்னமாய் மின்னியோர்

என்றவாறு பெண் போராளிகளை அவர்களின் வீரதீரங்களை நேரிடையாக வர்ணிக்கின்றது.

இந்த மண்ணில் எங்கள் வாழ்வில் திணிக்கப்பட்டிருந்த போர் எத்தனை விடயங்களை எங்களிடமிருந்து கொன்று தீர்த்திருக்கின்றது. வயது வேறுபாடுகள் அன்றி எல்லோரையும் காவு கொண்டிருக்கின்றது. அப்படியான ஒரு சூழலில் தன் குழந்தையை தேடும் ஒரு தாயின் உள்ளுணர்வாக ஈழத்தின் மிக ஆளுமை மிக்க பெண் படைப்பாளியாகிய ஆதிலட்சுமி சிவகுமாரின் எங்கே என் குழந்தை என்னும் கவிதையின் முடிவு என்னை ஒரு தரம் அதிர்வித்து அழுதுவிட செய்தது. இது வெறும் கவிதையென்று சொல்லமுடியாது அவரின் ஆழ்மனம் எவ்வாறு அந்தரித்துக் கொண்டிருக்கின்றது என்பதற்கான உண்மை வெளிப்பாடேயன்றி வேறொன்றுமில்லை.

போர் ஆற்றில் நகரும் பெண்ணுடல் என்கின்ற சாரங்காவின் கவிதை பெண் போராளிகள் நடை முறை சிக்கல்கள், அவற்றை எதிர்கொண்டு அவர்கள் புரிந்த வீரதீரம், போர் மௌனிப்பின் பின்னர் புனைவுகளுக்குள் அந்தரிக்கும் அவர்களின் வரலாறு போன்றவற்றை பதிவு செய்கின்ற அதே நேரம், ஊடக வியாபரத்திற்கு அவர்கள் மலினம் செய்யப்படும் அவலம் போன்ற இன்னோரன்ன காரணிகளை அடித்து துவைத்திருக்கின்றது.

லதா உதயணனின் ஒற்றைச் சிறகு கவிதை வீரர்களை நினைவேந்தும் கார்த்திகை நாளில் கல்லறை முன்னிருந்து ஏங்கும் ஒரு மனத்தின் ஏக்கத்தை பின்வருமாறு சொல்கிறது

ஒவ்வொரு கார்த்திகை மாதத்தின்
கனத்த மழைத்துளிகளில்
உனது வீரக் கல்லறையில்
ஒளிரும் ஒற்றை தீபத்தில்
விழிகள் சிந்தும் கண்ணீரில்
உனது திருமுகம் காண
தவமாக தவித்திருப்பேன்

என்றவாறு ஓராயிரம் உறவுகளின் ஏக்கத்தவிப்பை கல்லறைக்குள் ஒளிரும் தீபத்தின் வலிமையை பிரிவின் தகிப்பாக ஒட்டுமொத்த சனத்தின் ஆழ்மனத்து உணர்வை மிகத் துல்லியமாக யாத்திருக்கின்றார்.

இந்த தொகுதியின் ஒவ்வொரு கவிதைகளும் பெண் போராளிகளின் ஒவ்வொரு விதமான விடயங்களையும், சமகால சூழல்களையும் அற்புதமாக வெளிக்கொணர்ந்திருக்கின்றது.

இந்த தொகுதிக்கென இந்த கவிதைகள் யாவும் புதிதாக படைப்பாளிகளால் எழுதப்பட்டு தொகுக்கப்பட்டிருப்பது தான் அதி விசேடம்.

இன்றைய நிலையில் போர்க்கால இலக்கிய படைப்புக்கள், போர் சார்ந்த விடயங்கள் பலருக்கு அலர்ஜியை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் சூழலில் போர் ஆற்றில் நனைந்த பெண் என்னும் மிகத்தரமான கவிதை தொகுப்பொன்றை காலத்தேவை கருதி துணிந்த தொகுத்து வெளியீடு செய்திருக்கும் ஜீவநதி படைப்பகமும் க.பரணீதரனும் போற்றப்பட வேண்டியவர்களே.

இந்த தொகுப்பாக்க முயற்சி அடுத்தடுத்த பாகங்களாக விரிந்து வியாபகம் பெற்று இன்னும் கவிதைகள் உள்வாங்கப்பட்டு அதனூடாக ஒரு வீரயுகத்து தேவதைகளின் பங்களிப்புக்கள் நூலுருவாக்கம் பெற்று தலைமுறைகள் கடந்தும் அவை வாழவேண்டும் என்கின்ற அவாவை இந்த தொகுதி தந்துநிற்க்கின்றது.

# யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் வாய்மொழி வரலாறு

அர்ச்சுனன்



ஜீவநதி வெளியீடு செய்து வரும் வாய்மொழி வரலாற்று வரிசையில் 6 ஆவது வெளியீடாக யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் வாய்மொழி வரலாறு வெளியாகியுள்ளது. இதுவே ஈழத்தில் முன்முதலில் நூலுருப்பெற்று வெளிவந்த பெண் எழுத்தாளரது வாய்மொழி வரலாறாக அமைகின்றது. பரணீதரனால் 2017 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாய்மொழி வரலாறு தி.கோபிநாத், க.பரணீதரன் முயற்சியில் நூலுருப்பெற்றுள்ளது. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் ஈழத்தின் மூத்த பெண் படைப்பாளர்களில் ஒருவராக திகழ்பவர். அவர் பற்றிய முழுமையான தகவல்களை அறிந்து கொள்வதற்கு இச்சிறு நூல் உதவியாக அமைந்துள்ளது. யோகேஸ்வரி அவர்களது பிறப்பு முதல் அவரது வாழ்வியல் நகர்வுகளின் ஒவ்வொரு தரிசனத்தையும் படிப்படியாக ஒழுங்குமுறையயாக இவ்வாய் மொழிவரலாறு வெளிப்படுத்தியுள்ளது. வங்கி முகாமையாளராக இருந்த யோகேஸ்வரி அவர்கள் போர்க்காலத்தில் வங்கியின் செயற்பாடு எவ்வாறு அமைந்தது என்பதைக்கூட இங்கு பதிவு செய்துள்ளார். அரச உத்தியோகம் புரிந்து கொண்டு இக்கட்டான காலத்திலும் தொடர்ச்சியாக பல படைப்புகளை தந்துள்ளார் யோகேஸ்வரி. அந்த அனுபவங்கள் கூட இவ்வாய்மொழி வரலாறு மூலம் வெளிப்பட்டுள்ளது. ஆரம்ப கால வாழ்வு தந்தை வளர்ப்பு தாயின் அரவணைப்பு என ஒரு காலகட்டத்து அனுபவங்களை அறிந்து கொள்வதற்கு கூட இவ்வாய்மொழிவரலாறு பெரிதும் உதவுகிறது. மேலும் யோகேஸ்வரி அவர்களது நூல்கள் தொடர்பான அறிதலுக்கும் இந்நூல் உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோண்சன் ராஜ்குமார்

# குழந்தை ம. சண்முகலிங்கத்தின் ஓட்டாண்டிகள் – ஒரு பார்வை




ஈழத்தில் வலுவான தமிழ் நாடகப் பாரம்பரியத்தினை உருவாக்குவதற்குப் போராடியவர் குழந்தை ம. சண்முகலிங்கம். நாடக அரங்க கல்லூரியின் உருவாக்கமே அரங்கை கற்றறிந்து ஆளுமைத் திறன்களை வளர்த்து பிரக்ஞைபூர்வமான நாடகத்தினை உருவாக்கும் படைப்பாளர்கள் உருவாக வேண்டும் என்பதற்காகவே. எனவே வாழ்நாள் முழுவதையுமே ஆரோக்கியமான அரங்க உருவாக்கத்திற்காகவும், சமூக மேம்பாட்டுக்காகவும் வாழ்ந்து, பட்டங்கள், விருதுகள், மாலைகள், கௌரவங்கள் என அனைத்தையும் நிராகரித்து ஒரு கலைஞன் எவ்வாறு இருக்கவேண்டுமென்று "மாதிரி" ஒன்றினை உருவாக்கி மறைந்த குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள், பேராசிரியர் கா.சிவத்தம்பியினால் வர்ணிக்கப்பட்ட "சமகால நாடகப் புரட்சியின் தாய்" என்ற பொருளிற்கு மிகவும் பொருந்தி நிற்பவர். நடிகர், நாடக எழுத்தாளர், அரங்கியல் ஆசிரியர், விரிவுரையாளர், நாடகத் தயாரிப்பாளர், நெறியாளர், விமர்சகர், மொழி பெயர்ப்பாளர்... என்ற பன்முக ஆளுமைகளுக்குள் அவரை நாம் பார்த்திருந்தாலும், நாடக எழுத்தாளன் என்ற பாத்திரமே அனைத்திற்கும் அடித்தளமாக உள்ளது. நேர்த்தியான காத்திரம் மிக்க நூறுக்கும் மேற்பட்ட நாடக எழுத்துருக்களை அவர் தந்து சென்றிருக்கின்றார். காலங்கடந்தும் அவர் நினைவு கூரப்படுவதற்கு சாட்சிகளாக அவரது எழுத்துருக்களே வாழப்போகின்றன. அவரது மறைவின் பின்னர் அவரது பல எழுத்துருக்கள் படிப்படியாக அச்சுவாகனம் ஏறுகின்றன. இப்பணியை பொறுப்பேற்ற நவராஜ் அவர்கள் நேர்த்தியாக இப்பணியை மேற்கொள்ளுகின்றார். அவரது பயன் நோக்காத பெரும் பணி தொடரப்பட வேண்டும்.

அந்தவகையில் 2025 அக்டோபர் மாத வாசிப்பு மாதத்தில் ஜீவநதி வெளியீடாக வெளிவந்திருக்கின்ற "ஓட்டாண்டி" என்னும் நாடகப் பனுவல் பற்றிய ஒரு பார்வையை இக்கட்டுரை தருகின்றது. இந்நாடகமானது பதிப்பாசிரியர் நவராஜ் அவர்களின் கருத்துப்படி 1979 இல் எழுதப்பட்டுள்ளது. குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் தொடக்க கால நாடக எழுத்துருக்களின் பண்புகளை இதில் காணக்கூடியதாக உள்ளது. ஆரம்ப கால அவரது நாடகங்கள் முன்னாயத்தமின்றிய புதிதளித்தல் முறைகளில் உருவாக்கப்பட்டவை. இந் நாடகமும் அவ்வாறான முறையிலேயே உருவாக்கப் பட்டுள்ளது. இது ஒரு அரசியல் நாடகமாகும் சிறப்பாக அறுபதுகளுக்குப் பின்பு எதிர் அரசியல் நாடகங்கள் வெளிவரத் தொடங்கின. மாவை மு. நித்தியானந்தனின் "திருவிழா", "ஏணிப்படிகள்", போன்ற நாடகங்களின் பேசுபொருளுடன் மிகவும் நெருங்கியதாக இந்நாடகத்தின் பேசுபொருளும் காணப்படுகின்றது. அரசியல்வாதிகளின் பொய்மைத் தன்மைகளும் தேர்தலை நோக்கிய அவர்களின் திருகு தாளங்களும் மிக அழகாக சிலேடையாக இங்கே சித்திரிக்கப்படுகின்றன. சண்முகலிங்கத்தின் ஆரம்பகால எழுத்துருக்களில் பயன்படுத்தப்பட்ட உரைஞர்கள் இருவர் நாடகத்தினை நகர்த்திச் செல்லுகின்றனர். ஒருவர் விளக்கமற்றோராகவும் மற்றவர் விளக்குபவராகவும், உரைஞர் என்பதற்கு அப்பால் சமூக வகைமாதிரி பாத்திரங்களாகவும் அவர்கள் வருகின்றனர். இரண்டாமவர் அப்பட்டமான குழந்தை. ம.சண்முகலிங்கமே என்பதனை வாசிக்கும் போது அவருடன் பழகியவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

குழந்தை சண்முகலிங்கத்தின் நாடக ஆக்க முறையில் அவரை தனித்துவப்படுகின்ற மிகமுக்கியமான விடயம் அவரிடமிருந்த சிலேடைப்பாங்கான சொல்லாடல் நகையுணர்வை வெளிப்படுத்தக்க கூடிய தர்க்க/குதர்க்க நிலைப்பட்ட கருத்து வெளிப்பாடுகளும் கொண்ட ஆக்கங்களாகும். அந்த பண்புகள் அனைத்தையும் மிக நிறைவாகக் கொண்டிருக்ககூடிய நாடக எழுத்துருவாக இது காணப்படுகின்றது. நாடகத்தின் பேசுபொருளானது தேர்தல் கால அரசியல் பற்றியே பேசுகின்றது. அதாவது அரசியல் வாதிகள் தேர்தல் காலத்தில் மக்களைத் தேடிவருவதும் வாக்கு கேட்பதும், தேர்தலில் வென்ற பின்னர் மக்களின் பிரச்சனைகள் எதனையும் நோக்காது தலைநகரிலேயே தங்கிவிடுவதும், அவர்களுக்கு வாக்களித்தவர்கள் நலிந்து நொந்துபோவதும். தலை நகரில் தங்கியிருந்துவிட்டு மீண்டும் அடுத்த தேர்தலுக்கு அதே உத்திகளுடன் மக்களை ஏமாற்ற வருவதும், அவர்களுக்கு உதவுகின்ற அவர்களின் தொண்டர்கள் பற்றியும் பேசுவதுடன் மக்கள் அவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிப்பதுமே பேசு பொருளாகும். நாடகத்தின் மையப்பொருளை விளக்கு கின்ற வகையில் ஓட்டுப்போட்டு ஆண்டிகளான மக்களை (ஓடுதாங்கி இரப்போர்) குறிக்கின்ற அழகான பெயரை "ஓட்டாண்டிகள்" என பொருத்தமான நாடகப் பெயராக வைத்துள்ளார்.

போலி அரசியல் வாதிகளின் மேல் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் கொண்டிருந்த கோபத்தினை அதாவது அறச் சீற்றத்தினை நாடகம் சிறப்பாக வெளிப் படுத்துகின்றது. இந்தப் பிரச்சனையை முழுக்க முழுக்க அவர் நகையுணர்வோடுகின்ற, எள்ளல் பண்பு மிகுந்த குறியீடுகள் மூலமாக சித்திரிக்கின்றார். அதாவது பாராளுமன்றம் கைலாசமாக வர்ணிக்கப்படுகின்றது. கிராமங்கள் கோவிலாக வர்ணிக்கப்படுகின்றன. வேட்பாளர்கள் சாமிகள் போல சித்திரிக்கப்படுகின்றனர், தேர்தல், திருவிழாவாக சித்திரிக்கப்படுகின்றது. மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்களாகவும், ஓட்டுப்போடுதல் உண்டியல் குலுக்குவதுடனும் தொடர்பு படுத்தப்படுகின்றது. வேட்பாளர்களின் தொண்டர்களில் மக்களுக்கும் வேட்பாளருக்கும் இடையில் நிற்பவரை “இடைக்காடர்” என்ற பாத்திரமாக உருவாக்கியதோடு, அவரது பிரதான மான தொண்டர்கள் இருவரும் “வலம்புரி நாதர்” என்றும் “இடம்புரிச்சிங்கம்” என்றும் அழைக்கப்படுகின்றனர். நாடகத்தினை நகர்த்துபவர்களாகவும் முரண் நிலைகளை வலுப்படுப்படுத்துபவர்களாகவும் உரைஞர்கள் காணப் படுகின்றனர்.

நாடகத்தின் தொடக்கத்தில் மக்கள் மழை யினால் வெள்ளம் பெருகுவதனையும் கோவிலுக்குள் வெள்ளம் வந்து விட்டது எனவும் முறையிடுகின்றனர். அதற்கு பெரியவராக வர்ணிக்கப்படும் அரசியல் வேட் பாளர்” வெள்ளத்தை நான் என்ன உறிஞ்சிறதோ..” என்ற பொறுப்பற்ற தட்டிக்களிக்கும் வார்த்தையுடன் நாடகம் ஆரம்பமாகின்றது. அதனைத் தொடர்ந்து பெரியவர் கைலாசம் (பாராளுமன்றம்) செல்வதும் அவருக்கு நெருக்கமாக இடைக்காடர், என்ற பிரதிநிதி, அவரது வலது இடது கைகளான வலம்புரி நாதர், இடம்புரிச் சிங்கம் ஆகியோர் செய்யும் பொறுப்பற்ற அரசியல்கள் சிலேடையாக சொல்லப்பட்டு கைலாசம் கலைக்கப்பட (பாராளுமன்றம்) பெரியவர் மீண்டும் கிராமத்திற்கு வருகிறார், வாக்கு கேட்பதற்காக, பழைய முறையிலேயே மக்களை ஏமாற்றி ஓட்டுக்கேட்க முற்படும் போது மக்கள் “என்னை என்ன உறிஞ்ச சொல்லுறியளோ?” என்ற வினாவோடு தெளிவடைந்த மக்களின் குரலுடன் நாடகத்தினை நிறைவு செய்கின்றார்.

சண்முகலிங்கத்திடமிருந்த மிகச்சிறந்த சிலேடை களை இந்த நாடகத்தில் காணலாம் அவர் வார்த்தைகளை பிரயோகித்து, பிரயோகித்த வார்த்தைகளை உடைத்து விடுகிறார் உடைக்கும் போது அது சிலேடையாகவும் இருவேறு அர்த்தங்களைத் தருவதாகவும் அமைகின்றன. எடுத்துக்காட்டாக

ஆசனம் - ஆ..சனம்

நெல் உயரக்குடி உயரும் - ம்...குடி உயரும்

சனம் சாசனமோ - சாகிற சனம் தானே

இது அநியாயம் - வேற என்ற நியாயத்தைக் கண்டனீர

வரப்புயர நீர் உயரும் - ம் முதல்ல நீர் உயரும்

கதிரை - கதிரைதானே பின்ன என்ன குதிரையே

உரைஞர்களின் உரையாடல்கள் முழுவதும் இத்தகைய தர்க்கங்களால் நிறைந்துள்ளது நாடகத்தின் சிறப்பு.

மொத்தத்தில் ஓட்டாண்டிகள் சண்முக லிங்கத்தின், பலரும் அறியாத நாடகப்பிரதி, இதுவரை மேடையேற்றப்படவுமில்லை என்பதனை பதிப்பாசிரி யர் கூறுகின்றார். இதில் நியம நாடக முறைமைகளை அதிகம் காண முடியாது. அதிகம் சொல்லாடலில் தங்கியுள்ளது. அதனால் அரங்கியல் சாத்தியங்கள் சற்றுக்குறைவாக இருந்தாலும் கற்பனை மிகுந்த நெறி யாளனால் அளிக்கையாக்ககூடிய பிரதி. எல்லா வற்றுக்கும் மேலாக இன்றும் பொருந்தக் கூடிய பிரச் சினையை நாடகம் பேசுகின்றது. அரங்க ஆரவலர்கள் அனைவரும் வாசிக்கவேண்டிய பிரதி சண்முக லிங்கத்தின் ஆரம்பகால புதிதளித்தல் ஆளுமையை தரிசிக்கக்கூடிய பிரதி.

சு.இளந்தமிழன்

# ஆகசி கந்தசாமியின் இரு உலகம் பல மனிதர்




சில சொற்களால் மனதைத் தொடக்கூடிய ஆகச் சிறந்த கலைவடிவம் கவிதை. ஆழமான கருத்துகளை ஆணித்தரமாக ஒரு வரியிலேயே உணர்த்தவல்ல இயலுமை கவிதைகளுக்கே உண்டு. மொழியின் இனிமையையும் இசையின் ஒலியையும் உணர்ச்சியின் ஆழத்தையும் ஒருங்கே இணைக்கும் ஓர் இலக்கிய வகை கவிதை. மாந்தனின் அக உணர்ச்சிகளை, சிந்தனைகளை, கனவுகளை, கற்பனைகளை அழகிய சொற்களின் வழியாக வெளிப்படுத்தக்கூடிய கலை வடிவம் அது. பலரின் கவிதைகள் வாசிக்க இரசனை தரும். ஒரு சிலரின் கவிதைகளே சிந்திக்கவும் தூண்டும். இந்நூலின் ஆசிரியர் ஆகசி. கந்தசாமி அவர்களின் கவிதைகள் அத்தகைய தன்மை பொருந்தியவை.

கவிஞர் ஆகசி. கந்தசாமி அவர்கள் தனது இளமைக்காலத்தில் இரசியச்சார்பு கம்யூனிச சித்தாந்தத்தை ஏற்று அக்கட்சியில் செயற்பட்டு வந்தவர். ஓர் இடதுசாரிச் சிந்தனையாளர் சமூகத்திலுள்ள அநீதி களுக்கு எதிரான நிலைப்பாடும், அந்த அநீதிகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் கோபமும் ஆசிரியரின் கவி வரிகளில் உயிர்ப்போடு பாயும். வறுமை, அதிகார வர்க்கத்தின் சுரண்டல், கொடுமை, துரோகம், ஏற்றத் தாழ்வு போன்றவற்றைச் சொற்களால் எதிர்க்கின்ற அதேநேரம் அவரின் அதே சொற்கள் மனிதநேயம், ஒற்றுமை போன்றவற்றை விதைக்கவும் தவறுவதில்லை. சமூக அநீதிக்கெதிரான கருவியாகக் “கவிதை” என்னும் ஆயுதத்தை ஏந்திய ஒரு புரட்சிகரச் சிந்தனையாளராகத் திகழ்கின்றார் இந்நூலின் ஆசிரியர் ஆகசி. கந்தசாமி அவர்கள்.

ஆகசி. கந்தசாமி அவர்கள் ஓர் ஆங்கில ஆசானாகவும் திறம்பட தனது சேவைதனை ஆற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வுக் காலத்தில் மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திற்கும் தனது தொண்டினையும் பங்களிப்பினையும் செய்த ஒருவர். ஆனால் அன்று தொடக்கம் இன்றுவரை தன்னை ஒரு கவிஞராக அடையாளப்படுத்திச் சமூகத்தின் துடிப்பை உணர்த்தக் கூடியதான கருத்தாழம்மிக்க தனது கவி வரிகள் மூலம் இலக்கிய உலகிலும் வலுவாகத் தடம் பதித்துள்ளார். பல கவியரங்கங்களில் பங்கு கொண்டவர்; கவியரங்க நடுவராகப் பல அரங்குகளை நிறைத்து மக்களை மகிழ்வித்தவர்.

அவர் எமது மாறாம்புல மண்ணின் மைந்தர் என்பதில் நாம் பெருமை கொள்வதோடு அவரின் கவிதைகள் தொகுப்பாக நூலுருப்பெற்று வருவதில் நாமும் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்திகா ஜெயபாலசிங்கம்

# "விசுவாசம் ஜெகநாதன் வாய்மொழி வரலாறு" நூல் அறிமுகக் குறிப்பு




காகிதத்தில் எழுதப்படாத, மனித மனங்களில் வாழ்கின்ற விடயங்கள், அனுபவங்கள், சமூக நிகழ்வுகளை வெளிக்கொணருவதாக வாய்மொழி வரலாறுகள் அமைகின்றன. அந்தவகையில் "விசுவாசம் ஜெகநாதன் வாய்மொழி வரலாறு" என்ற நூல் ஜீவநதி பதிப்பகத்தின் வாய்மொழி வரலாற்று நூல் வரிசையின் 9வது நூலாக 2025ம் ஆண்டு ஐப்பசி மாதம் வெளியிடப்பட்டது. நாடக நடிகரும், எழுத்தாளருமான விசுவாசம் ஜெகநாதன் அவர்களை 2020.09.30 அன்று நேரில் சந்தித்து கலாமணி பரணீதரன் அவர்களால் நேர்காணல் செய்யப்பட்டது. இவ் வாய்மொழி வரலாற்றை தில்லைநாதன் கோபிநாத் மற்றும் கலாமணி பரணீதரன் ஆகியோர் இணைந்து தொகுத்து நூல் வடிவமாக்கியுள்ளனர்.

ஒவ்வொரு வாய்மொழி வரலாறும் ஒரு மனிதனின் நினைவோடு ஓடும் காலப்பயணம் என்பது போல் இவ்வாய்மொழி வரலாறு ஜெகநாதன் அவர்களுடைய பிறப்பு, அவருடைய குடும்ப நிலை, கல்விக் காலம் ஆகியவற்றை பதிவு செய்துள்ளதோடு சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான ஞானப்பிரகாசர் தலைமையிலான மத மாற்றம் போன்ற சமூக உண்மைகளையும் நமக்கு அறிமுகப்படுத்துகிறது. குறிப்பாக சாதி ஒடுக்குமுறை போராட்டத்திற்கு பின்னரான நிலை, சாதிய ஒடுக்குமுறையில் அவர்கள் எதிர்கொண்ட துன்பங்கள், சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான ஞானப்பிரகாசரின் பங்களிப்பு போன்ற வரலாற்றுப் பதிவுகளையும் வெளிப்படுத்துகிறது.

இந் நூல் இவருடைய நாடகப்பயணம் பற்றிய விரிவான தகவல்களையும் கொண்டுள்ளது. குறிப்பாக ஆரம்ப நாட்களில் நாடகத்தில் கொண்ட ஈடுபாடுகள், இவரால் நடிக்கப்பெற்ற நாடகங்கள், நடித்த கதாப்பாத்திரங்கள், அடிகளார் ஜெயசீலனுடன் இவர் கொண்ட தொடர்பு, சுவாமி ஞானப்பிரகாசர் நாடக மன்றத்தின் உருவாக்கம், இவ் நாடக மன்றங்கள் ஊடாக நெறியாள்கை செய்த நாடகங்கள், அதனூடாக பெற்றுக் கொண்ட அனுபங்கள், யாழ்ப்பாணம் தவிர்ந்த வெளி மாவட்டங்களில் நாடகம் சார்ந்த பணிகள், திருமறைக் கலாமன்றத்தில் இவருடைய நாடகப் பங்களிப்புக்கள், இவரால் எழுதப்பட்ட நாடகங்கள் மற்றும் மற்றும் நாடகங்களின் தொகுப்பு நூல்கள், நூல் வெளியீட்டில் எதிர்கொண்ட சிக்கல்க்ள், சமூக மாற்றத்தை ஏற்படுத்த நாடகங்களை பயன்படுத்திய விதம், திருகோணமலையில் வசித்த காலத்தில் மேற்கொண்ட சமூக மற்றும் இலக்கிய நாடகச் செயற்பாடுகள், இவற்றில் பெற்றுக் கொண்ட அனுபவப் பகிர்வுகள் ஆகியன இவருடைய வாய்மொழி வரலாற்றின் முக்கிய பகுதியாக அமைகின்றது.

இவருடைய இலக்கியப் படைப்புக்கள் பற்றிய பகுதி இவ் வாய்மொழி வரலாற்றை மேலும் செழுமைப் படுத்துகிறது. சிறுகதை எழுதுவதில் ஏற்பட்ட ஆர்வம், எழுதிய சிறுகதைகள், அவை வெளியீடு செய்யப்பட்ட பத்திரிகைகள், வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்புக்கள், சில சிறுகதைகளை பிரசுரிப்பதில் இருந்த பிரச்சினைகள் ஆகியன விபரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இவரது "அழுகைக் குரல்" என்ற முதல் நாவலை எழுதத் தூண்டிய பின்னணி, கிடைத்த பாராட்டுக்கள், இந் நாவலில் சுட்டிக் காட்டப்பட்ட முக்கிய பிரச்சினைகள் பற்றியும் இதில் பேசப்பட்டுள்ளது இவரால் எழுதப்பட்ட ஏனைய நாவல்கள் மற்றும் கவிதை எழுதிய அனுபவங்கள், கவிதை நூல்கள் இதில் பதியப்பட்டுள்ளது.

சாதிய ஒடுக்குமுறை தொடர்பில் தொடர்பில் ஆராய்ந்து எழுதப்பட்ட "சாதி வலயங்களில் வாக்கு வங்கிகள்" என்ற நூல் உருவாக்கம், வெளியீடு தொடர்பான விடயங்கள் என்பன அவருடைய எழுத்தாளர் நிலைப்பாட்டை விளக்குகின்றது. இவை தவிர பெற்றுக் கொண்ட பட்டங்கள், விருதுகள் என்பன ஜெகநாதன் அவர்களுடைய கலை மற்றும் சமூக பங்களிப்பை வெளிப்படுத்துகின்றது.

ஜெகநாதனுடைய மதம் சார்ந்த கேள்விகள் மற்றும் சிந்தனைகள், உரும்பிராய் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வளர்ச்சி, இதன் வளர்ச்சியில் அதிபர் கெனத் மேரியின் பங்களிப்பு, உரும்பிராய் புனித மைக்கல் ஆலயத்தின் மத பண்பாட்டு நிகழ்வுகள், இவருடன் பணியாற்றிய ஏனைய நாடகக் கலைஞர்கள் மற்றும் நாடக ஆசிரியர்கள், போன்ற விடயங்கள் இவ் வாய்மொழி வரலாற்றில் கிடைக்கப் பெறுகின்றமையானது தில்லைநாதன் கோபிநாத் அவர்கள் பதிப்புரையில் குறிப்பிட்டது போன்று செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி மிக விரிவாக வாய்மொழி வலாற்றுச் சேகரங்களில தேடி ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடிய இன்றைய காலத்தில் முக்கிய பங்கு வகிக்கும் எனலாம்

எழுதப்படாத காலத்தின் உயிர்ச் சாட்சியமாக விளங்கும் வாய்மொழி வரலாறுகளில் விசுவாசம் ஜெகநாதன் அவர்களின் வாய்மொழி வரலாறு என்பது ஒரு மனிதனின் வாழ்க்கையை மட்டுமல்ல ஒரு காலத்தின் சாதி நிலை, நாடகப்புரட்சி சமூக மாற்றப் பயணம் ஆகியவற்றை உணர்த்தும் முக்கிய ஆவணமாகத் திகழ்கிறது. இவ் வாய்மொழி வரலாறு இக் காலத்தினருக்கும், வருங்கால ஆய்வாளர்களுக்கும் மதிப்பு மிக்க ஆதாரமாகத் திகழும். வாய்மொழி வரலாறுகள் நூல்வரிசையாக வெளிவருவது ஆய்வாளர்களின் ஆய்வுச் செயற்பாடுகளை மேலும் இலகுவாக்கும் என எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா பத்மானந்தன்

# இரு கப்பிகள் சிறுகதைத்தொகுப்பு ஒரு கதையாளனின் பார்வை




ஜீவநதி பதிப்பகம் இந்த ஆண்டு (2025) தேசிய வாசிப்பு மாதத்தில் தினமொன்றாக வெளியிட்ட முப்பத்தியொரு வெளியீடுகளில் ஒன்றாக இருகப்பிகள் சிறுகதையினைத் தலைப்பாகக்கொண்டு பாவிலுப் பிள்ளை வேதநாயகம் அவர்களது சிறுகதைத் தொகுப் பினை வெளியிட்டுள்ளது. பங்காளி, கிருமி, உழைக்கும் கைகள் இணைகின்றன, இரு கப்பிகள், தாதியத்தின் மகத்துவம், தேடல், தவிப்பு, நம்பர் 68, கனவுகளின் சமாதி, அயல் வீட்டுக்காணி என்ற பத்துச் சிறுகதைகள் இத் தொகுப்பில் அடங்கியுள்ளன.

பிரதேசமட்டத்தில் 2 ஆம் இடத்தினைபெற்ற (2025)பங்காளி என்ற சிறுகதையும், பிரதேசமட்டத்தில் 1 ஆம் இடத்தினைபெற்ற (2025)கிருமி என்ற சிறுகதை யும், மாவட்ட மட்டத்தில் 1ஆம் இடத்தினைபெற்ற (2017/2018) உழைக்கும் கைகள் இணைகின்றன என்ற சிறுகதையும் , பிரதேச மற்றும் மாகாண மட்டத்தில் 1 ஆம் இடத்தினைபெற்ற (2010) இரு கப்பிகள் என்ற சிறு கதையும், மாவட்ட மட்டத்தில் 1 ஆம் இடத்தினை பெற்ற (2010/2011)தாதியத்தின் மகத்துவம் என்ற சிறு கதையும், பிரதேசமட்டத்தில் 1 ஆம் இடத்தினைபெற்ற தவிப்பு என்ற சிறு கதையும், பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் 1 ஆம் இடத்தினைபெற்ற(2013) கனவு களின் சமாதி என்ற சிறுகதையும், உதயன் சிறுகதைப் போட்டியில் 3 ஆம் இடத்தினைபெற்ற அயல் வீட்டுக் காணி என்ற சிறுகதையுமாக எட்டு பரிசு பெற்ற சிறு கதைகள் இந்தத் தொகுப்பில் இடம்பெற்றிருப்பது ஒரு சிறப்பியல்பாகும்.

தன்னை எழுதுவிப்பவன் இறைவனே எல்லாப் புகழும் அவனுக்கே என சிலாகிக்கும் எழுத்தாளர் நாங்கள் வாழத் தங்களையே உருக்கி தெய்வங்களாகி விட்ட எமது பெற்றோரானஅமரர் அண்ணாவியார் திரு பர்னாந்து பாவிலுப்பிள்ளை அமரர் திருமதி பாவிலுப் பிள்ளை திரேசம்மா ஆகிய எமது கண்கண்ட தெய்வங் களுக்கு இந்நூல் சமர்ப்பணம் என்று தனது இந்த நூலைத் தனது பெற்றோர்களுக்கு அர்ப்பணித்துள்ளார். எனக்குத் தமிழில் ஒருவித பற்று இருந்து வந்தது. அதனால் தமிழை யும், இலக்கியங்களையும் கற்றுணர அமரர் க.யோ. ஆசிநாதர் என்ற பண்டிதர் ஏணிப்படியானார் என்று தனக்குத் தமிழ் படிப்பித்த ஆசிரியரை நினைவு கூரும் எழுத்தாளர் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற தமிழர் களின் வாழ்வியலின் அடிப்படைத் தத்துவத்தை இன்றைய இளையோருக்கு ஞாபகமூட்டுகிறார்.

விதவைத்தாய் சரசினால் பல சிரமங்களுக்கு மத்தியில் வளர்க்கப்பட்ட படிப்பிக்கப்பட்ட வேலை யில்லாப் பட்டதாரியான கணேஷ் காதலித்துக் கைப் பிடித்த மனையாளையும், தாயையும், தங்கைகளையும் காப்பாற்றக் கையில் கிடைத்த வேலைகள் எல்லாவற்றை யும் செய்கிறான். அப்போது அறிமுகமான ஒருவனோடு பங்காளியாகச் சேர்ந்து போதைப்பொருள் வியாபாரத் தில் மெல்ல மெல்ல ஈடுபட்டு வசதி வாய்ப்புகளைத் தேடிக்கொள்கிறான். ஒருகட்டத்தில் அவனது தங்கை களையே போதையாளர்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி கொன்று விடுகிறார்கள். அத்தோடு கணேஷ் தனது குற்றங்களிற்காக மறுகி மறுகி மனமழிந்து போவதாகப் "பங்காளி" என்ற கதையில் ஆசிரியர் சொல்கிறார். கதை சொல்லும்போது போதை எவ்வளவு தூரம் சமூகத்தைச் சீரழிக்கிறது, போதை வியாபாரிகள் எவ்வாறு தங்கள் சுகபோகத்திற்காகச் சமூகத்தை சீரழிக் கிறார்கள் என்கின்ற எழுத்தாளர் போதைவியாபாரிகளே இந்த நாட்டின் அபாயக்குறிகள், உண்மையான பயங்கர வாதிகள், அவர்களுக்கு உச்ச பட்சத் தண்டனை வழங்க வேண்டும் என்ற கருத்தினை முன்வைக்கின்றார் . இந்தக் கதையில் இருக்கின்ற இன்னும் ஒரு முக்கிய கருத்து என்ன வென்றால் அநியாயம் செய்கின்ற ஒருவனை ஆண்டவன் ஏதோ ஒரு விதத்தில் தண்டிப்பான் என்பதாகும்.

கணவன் கைவிட்ட பெண் ஒருவரின் முறையற்ற பாலியல் தொடர்பு, சமூகப் பிறழ்வான போதையாளன் ஒருவனின் சமூக விரோதச் செயல்கள், தாயோடு முறை யற்ற பாலியல் தொடர்பு வைத்துள்ள போதையாள னாகிய காமுகன் எவ்வாறு வினோதினி என்ற சின்னஞ் சிறுமியை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினான் என்ற இன்று தமிழர் பிரதேசங்களில் பரவலாக நடைபெறும் சமூகப் பிறழ்வுகளை எழுத்தாளர் கிருமி என்ற கதையில் முன்வைக்கிறார். வினோதினியின் ஆசிரியராகிய கவிதா என்ற இளம் ஆசிரியர் துணிச்சலாக உண்மைகளை வெளிக்கொண்டு வந்து அந்தக் காமுகனுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கிறார் என்று சொல்லும் எழுத்தாளர் பாதிக்கப்பட்ட சமூகத்தில் இரண்டொருவர் துணிச்ச லோடு புறப்பட்டால் சமூக விரோதிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கலாம் என்ற கருத்தினை வலியுறுத்து கின்றார். கதையோடு கதையாக காவல்துறை எவ்வாறு இத்தகைய சமூக விரோதிகளோடு ஒத்து ஊதுகிறார்கள் என்பதனைச் சொல்லிச் செல்கிறார் எழுத்தாளர்.

பலவருட வெளிநாட்டு வாழ்க்கையின் சலிப்பில் ஊர் வந்த கண்ணன் சொத்துப்பத்து ஓரளவுக்கு இருந்தும் கறுப்பு என்பதனால் கலியாணம் கைகூடாமல் போன முதிர் கன்னியாகிய பூங்கோதையைக் கலியாணம் கட்டி திரும்பவும் வெளிநாட்டிற்குப் போகாமல் ஊரிலேயே வாழத்தொடங்கியதை "உழைக்கும் கைகள் இணை கின்றன" என்ற கதையில் சொல்கிறார் எழுத்தாளர். "தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசு, பொருள் பண்டம், தோட்டம் துரவெண்டு எல்லாம் நிறைவாய் இருக்குது. அவள் கறுப்பாம், உத்தியோகம் இல்லையாம் எண்டு வந்த பல கலியாணங்கள் தட்டுப் பட்டு போவிட்டுது".

"இதுக்கு மேலை வயது போவிட்டுதாம். அதால, மனுசி செத்தவங்கள், உழைப்பு பிழைப்பு இல்லாதவங் களுக்கு அவளைக் கட்டிக் குடுக்கிறதே. இதைவிட, நான் என்ன செய்யலாம் எண்டு சொல்லுங்கோ தம்பி" என்று பூங்கோதையின் தகப்பன் வடிவேலு கதறி அழுவதகாகக் கூறும் எழுத்தாளர் பெண் பிள்ளைகளைப் பெற்ற தந்தை மாரின் தவிப்பினையும் அங்கலாய்ப்பினையும் படம் பிடித்துக் காட்டுகிறார். மேலும் பெண் சகோதரங் களைக் கரை ஏற்றுவதற்காக கலியாண வயது கடந்தும் வெளிநாட்டில் தும்படித்துக் களைத்துப் போன ஆண் பிள்ளைகளின் துயரத்தை இக்கதையில் சொல்லிய ஆசிரியர் ஊரிலும் மண்ணைக் கிண்டிப் பொன்னைச் சம்பாதிக்கலாம் என்ற கருத்தை இக்கதையில் வலி யுறுத்துகின்றார்.

ஊருக்குப் பொதுவாக இருந்து எல்லா மக்களின தும் விடாய் தீர்த்த, கால்நடைகளின் விடாய் தீர்த்த பொதுக்கிணறு ஒன்று எப்படி பங்குக் கிணறாக மாறிச் சமூகச் சண்டையில் சிக்கிச் சீரளிஞ்சு பாழடைஞ்சு போனது என்பதனை மையமாகக் கொண்டு இரு கப்பிகள் என்ற கதையினை எழுத்தாளர் எழுதி உள்ளார். எவ்வாறு பெரியோர்கள் மூத்தோர்களின் வழிகாட்டுத லில் ஒற்றுமையாக பொதுநல நோக்குடன் மதிப்புடன் வாழ்ந்த ஒரு சமூகம் வசதி வாய்ப்புகளின் வருகையுடன் எவ்வாறு சுயநலமிக்கதாக பொறுப்பற்றதாக மாறியது என்பதனை கதையூடாகச் சொல்லிச் செல்கிறார் எழுத் தாளர். அழகான கிராம வாழ்கையைச் சொல்லும் எழுத்தாளர் பொதுநலச் சிந்தனை சுயநலச் சிந்தனையாக மாறிய போது அந்தச் சமூகம் எப்படிச் சிதைந்து போனது என்பதனைப் படம் பிடித்துக் காட்டுகிறார். "ஓலைக்குடிசைகள் எல்லாம் கல்வீடுகளாய் மாறி விட்டன. பொதுக்கிணறை கைவிட்டு வீட்டுக்கொரு கிணறு அமைத்தது போல வீட்டுக்கொரு கோவிலைக் கட்டி வைச்சிருக்கினம். இப்ப எல்லாரிடமும் நிறையப் பணம் உண்டு. ஆனால் அவர்களிடம் நல்ல குணமோ அமைதியோ கிடையாது". என்று கூறுவதன் மூலம் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார் எழுத்தாளர்.

தாதியத்தின் மேன்மை, தியாகம், அர்ப்பணிப்பு என்பவற்றை மையமாக வைத்து தாதியத்தின் மகத்துவம் என்ற கதையினை உருவாக்கிய எழுத்தாளர் அப்போதும் இப்போதும் புரையோடிப் போயிருக்கிற சாதியப் பிரச்சினையை அதன் மூல வேர்களை அது எவ்வாறு சமூகக் கட்டமைப்பை மாற்றி இருக்கிறது என்பதை ஆராய்கிறார். கடும் சாதிமானாகிய அதிபர் சுப்பிர மணியம் தனது ஒரே மகன் மணி சாதி குறைந்த மேகலை யைத் திருமணம் செய்த காரணத்தால் அவர்களை ஒதுக்கி வைக்கிறார். ஊரை விட்டு வெளியேறிய தாதிய சேவையைச் சேர்ந்த மணியும் மேகலையும் தங்கள் மனிதக் கடமைகளில் ஒன்றிப் போகிறார்கள்.

காலத்தின்போக்கில் அனாதையாகிய அதிபர் பார்க்க எடுக்க யாரும் இல்லாத நிலையில் ஊருக்கு மாற்றலாகி வந்த மேகலையின் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு அவளின் கையினால் மருந்தம் உணவும் உண்கிறார். மணி மேகலையை மணக்கப் போகிறேன் என்ற தனது விருப்பத்தைச் சொன்ன போது "எடமடையா!... எங்கட குலமென்ன கோத்திரமென்ன? ஏன்ரா...? உனக்கு வேறை பொம்பிளை கிடைக்க யில்லையே? நீ நாயடா... அந்தக் கீழ்சாதி சமைச்சா சாப்பிடுவாய். நான் சாப்பிடுவனே...? உனக்கு அவள் வேணு மெண்டா அவளோட நீ போய் இரு. என்னை மறந்திடு இஞ்சை மட்டும் வராதை." என்று குதித்தவர் இப்போது அதே மேகலையின் கையால் சாப்பிட விதி வழி வகுத்து இருந்தது.

மேகலையை இனம் கண்ட அதிபர் தன் பிழை உணர்ந்து அவளிடம் மன்னிப்பு கேட்க முனைகிறபோது அவள் இறந்து போகிறாள் என்று கதை முடிகிறது. உண்மையில் சாதியத்தை ஒழிப்பதற்காக அன்றிலிருந்து இன்றுவரை இனங்களும், மதங்களும் முயற்சி எடுத்த போதும் கூட கடும் போக்கு வாதிகளினால் சாதியம் மரிக்காது இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று எழுத்தாளர் ஆதங்கப்படுவது இன்றும் சாசுவதமாய் இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அது போன்று எத்தனை கோடி பணமிருந்தென்ன, பதவி பட்டம் இருந்தென்ன, மனிதத்தை மதியாத மனிதர்களின் இறுதி நிலைக்கு இவன் ஓர் எடுத்துக்காட்டு என்று அதிபர் ஆசுப்பத்திரியில் அனாதையாக அனுமதிக்கப் பட்ட போது எழுத்தாளர் கூறுவதும் உண்மையே.

தேடல் என்ற இன்னொரு கதையும் சாதியத்தை மையமாக வைத்து எழுதப்பட்டிருக்கிறது. சாதி மானாகிய மணியம் அன்னம் தம்பதிகளின் மகள் அமலா விற்கும் மோகன் என்ற மருத்துவ மாணவனுக்குமான படிப்புத் தொடர்பான நட்பினை தவறாகப் புரிந்து கொள்ளும் மணியம் மோகன் என்ன சாதி என்பதை அறிவதில் குறியாக இருக்கிறார். ஒருநாள் மோகன் வீட்டில் இருந்து வந்த அமலா தான் அங்கே மோகன் வீட்டில் சாப்பிட்டேன் என்றதும் மணியத்தார் "எடியே அழுகல் நாயே! அவை என்னென்ன சாதியோ தெரியாது. அங்கை நீ போய்... என்ரை வாயே கூசுது. நரகம் பிடிச்ச சனத்திட்டை வாங்கி நக்கிப்போட்டு வந்து நாகரீகம் வேறை பேசிறியோ?" என்று தனது சாதித்தடிப்பைக் காட்டுகிறார்.

என்றாலும் மோகன் தங்கள் சாதியாக் இருந்தால் மோகனுக்கு அமலாவைக் கட்டி வைக்கலாம் என்ற அவரது எண்ணம் மோகன் என்ன சாதி என்று கடைசி வரையும் அறிய முடியாத காரணத்தால் நிறைவேற வில்லை. மகளுக்கு மாப்பிளை தேடிக் களைத்த அன்னம் இப்பிடியே இனிமேலும் "சாதியளை சோதிக்கப் போனீங்களோ... உங்கட பிள்ளையளுக்கு நல்ல வரன் களை நீங்கள் தேடப்போறதில்லை..." ம்... சொல்லிப் போட்டன். என்று சலித்துக் கொள்கிறாள் என்ற எழுத்தாளர் மணியத்தாரின் மனம் செத்தாலும், அவர் தேடும் இனம் என்னும் பேய்க்குணம், என்றுமே சாவதில்லை என்று முடிக்கிறார்.

தவிப்பு என்ற இன்னொரு கதையும் ஸ்டீபன் லாவண்யா என்ற இருவேறுபட்ட சாதி மற்றும் சமயத்தைச் சேர்ந்த காதலர்களின் காதல் சாதி சமய வெறி காரணமாக தோல்வியடைந்ததைப் பற்றிப் பேசுகிறது. படிப்பு பணம் பண்பு இருந்தாலும் கூட சாதி சமய வெறி எவ்வாறு காதலைப் பிரிக்கிறது என்று இந்தக் கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்கிறது. சாதி சமய வெறியனான லாவண்யாவின் தந்தை லாவண்யாவை தனது மச்சானின் மகனிற்கு கடன் பட்டுச்சீதனம் கொடுத்துக் கட்டி வைக்கிறார். யாருக்கும் தெரியாமல் இரண்டாம் தாரமாக லாவண்யாவைக் கட்டிய அவனோ கொடுத்த நகை பணத்தோடு கம்பி நீட்டி விடுகிறான். அதனால் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் அந்தக் குடும்பம் தடுமாறுவதும் திருமலை ஒரு விபத்தில் தனது கால்களை இழப்பதும் லாவண்யா கடனை அடைக்கத் தனது ஒரு கிட்னியை விற்பதும் நடந்தேறுகிறது. இதற்கிடையில் வெளி நாட்டிற்குப் படிக்கப் போன ஸ்டீபன் ஊருக்கு வந்த போது லாவண்யாவின் குடும்பத்தின் நிலையைக் கண்டு கலங்கி அவர்களது கடனை அடைக்க முன்வருகிறான்.

"எங்கள் தமிழ் இனத்துக்குள்ளே, நான் பெரிசு நீ பெரிசு என்ற ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் போது பெரிய இனத்தவராகிய சிங்களவர் நமது சிறுபான்மை இனத்த வரை ஒதுக்குவதில் என்ன தவறு, நாங்கள் தமிழ் இனம், வடக்குக் கிழக்கைப் பிரியாதே என்று கோஷம் இடுவோர், அது எங்கட கோயில் நான் அங்கை வர மாட்டன் என்று சொல்வோர் மனித மாண்பை மதிக்கத் தவறிவிட்டு, சிங்களப் பெரு இனத்திடம் சமாதானத்தைத் தரும்படி கேட்பதில் என்ன நியாயம் இருக்கின்றது? இப்படி மட்டமான நம்மவர் கொண்ட கொள்கையாற் தானே பெரிய பிரச்சினையே உருவானது." என்று எழுத்தாளர் ஆதங்கப்படுவது ஞாயமாகும்.

நம்பர் 68 என்ற கதை வழக்கமாக எமது சில வைத்தியசாலைகளில் நடைபெறும் குளறுபடிகள், தட்டிக்களிப்புகள், எகத்தாளங்கள், முகமன் பார்த்தல், அவமரியாதைகள், புறக்கணிப்புகள், பின்கதவுச் சேவை கள், கவனிப்புக்கு உள்ளாகாத நோயாளரின் பரிதவிப்பு கள், துயரங்கள், துன்பங்களைச் சொல்லிச் செல்கிறது. "மனச்சாட்சியை தொலைத்துவிட்டு பலபேர் இங்க வருவாங்க, அவங்க எந்தச் சோப்பை போட்டு கழுவினா லும் திருந்தாங்க, அவங்க பண்பாடும் பாரம்பரியமும் என்றுமே மாறாது." என எழுத்தாளர் சொல்வது சில இடங்களிற்குச் சாலவும் பொருத்தமானது

இனமுறுகல், இடம்பெயர்வு, அகதிமுகாம் வாழ்வு, சொந்த இடங்களில் இருந்து விரட்டியடிப்பு, போராட்டத்தின் பெயரிலான அப்பாவிகளின் கொலை, காதல், கல்யாணம், காணி ஆக்கிரமிப்பு, கோயிலின் உடைப்பு என்று யுத்தமும் அதனோடு இணைந்த சூழலும் எவ்வாறு இருந்தது என்பதனைச் சொல்லிச் செல்கிறது கனவுகளின் சமாதி என்ற கதை. சொந்தக் காணியை ஆக்கிரமிப்புக்கு பறிகொடுத்தவனின் வலியும், வீணான சந்தேகத்தின் பேரில் கொல்லப்பட்டவரின் குடும்பத்தின் துயரமும் நெஞ்சில் ஒரு சோகத்தை விதைத்துச் செல்கிறது. "இஞ்சாருங்கோ இந்தக் காலத்தில் உங்கட வாயை சோறு தின்ன மட்டும் திறவுங்கோ.... நீதி ஞாயம் பேசப்போனா ஆரார், எங்கை, எப்ப, என்ன செய்வினம் எண்டு தெரியாது. நீங்கள் கண்டபடி உளறாமல் உங்கட வாத்தி தொழிலை மட்டும் ஒழுங்காய் செய்யுங்கோ" என்று அதிபர் முருகேசனின் மனைவி தேவிகா சொல்வ தாக எழுத்தாளர் சொல்வது போராட்ட காலங்களில் இருந்த யதார்த்த நிலமையை சரியாக விளக்குகிறது. தூய்மையான சிங்கள தமிழ் நட்பினைப் பிழையாக விளங்கி அதற்காக கணவனுக்கும் மனைவிக்கும் போராட்டத்தின் பெயரில் மரணதண்டனை வழங்கிய கொடுமையை எழுத்தாளர் சொல்லும்போது நெஞ்சம் கனக்கிறது.

அடுத்தவருக்கு அநியாயம் செய்பவருக்கு ஒரு கட்டத்தில் சரியான தண்டனை கிடைக்கும் என்று சொல்கின்ற அயல் வீட்டுக்காணி என்ற கதை உனக்குத் தீமை செய்பவனுக்கும் நன்மை செய் என்கின்ற தமிழரின் உண்மையான வாழ்வியல் பண்பையும் சொல்லிச் செல் கிறது. அடுத்த வீட்டில் இடம்பெயர்ந்து வந்து இருந்த அன்னம் குடும்பத்தின் சொத்தை அபகரிக்கத் திட்டம் போடும் துரைசாமியும் அவன் மனைவி பொன்னம்மா வும் எப்படியான இடைஞ்சல்களை அன்னம் குடும்பத் திற்கு கொடுத்த போதும் அவர்கள் அமைதியாக இருந்தனர். பின்னர் துரைசாமி விபத்தில் அகப்பட்டு கை கால் இழந்து ஊனமுற்றதால் அந்தக் குடும்பம் வறுமை யில் வாடியதும் அந்தக் குடும்பம் வெள்ளத்தில் மாட்டுப் பட்டு துன்பப்பட்ட போது அன்னம் குடும்பம் பெரு மனதோடு அவர்களுக்கு உதவியதும் கதையில் சொல்லப் படுகிறது.

பாவிலுப்பிள்ளை வேதநாயகம் அவர்களது கதைகளை வாசிக்கிறபோது கிராமிய மணம் தாராளமாக வீசுகிறது. சமூகத்தில் அங்கும் இங்கும் நாளாந்தம் நடந்த நடக்கும் விடயங்களைக் கருப்பொருளாக்கி இயல்பான சம்பவக் கட்டுகளினூடாக கதைகளை நகர்த்திச் செல்வ தால் வாசகன் சோர்வின்றிக் கதைகளோடு ஒன்றிப் போகக் கூடியதாக இருகின்றது. எளிய சொல்லாடல் களும் வசனங்களும் வாசிப்பில் சலிப்பை ஏற்படுத்தாத வண்ணம் வாசகனுக்கு உதவி செய்கின்றன. பாத்திரத் தேர்வுகளும் அவைகளினூடக எழுத்தாளர் சொல்ல வருகின்ற கருத்துக்களும் சில இடங்களில் அவர் பயன் படுத்துகின்ற படிமங்களூடாகச் சொல்ல வருகின்ற கருத்துக்களும் வாசகன் மனதில் எளிதில் பதிகின்றன. இந்த கதை சொல்லும் உத்திகளே அவரது பல கதை களைப் பரிசுக்குரியதாக மாற்றி இருக்கின்றன என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. சில இடங்களில் வர்ணனைகள் கொஞ்சம் அதிகமாகிப் போவதாக ஒரு எண்ணம் வந்தாலும் அவை ஒரு கவித்துவமான சூழ்நிலை யைச் சிருஸ்டிக்கின்றன என்பதனை மறுப்பதற்கில்லை. இறுதியில் இத்தகைய எழுத்தாளர்களின் படைப்புகளை பதிப்பித்து வெளிக்கொணரும் ஜீவநதி என்ற ஈழத்து இலக்கியக் கடலில் ஓய்வில்லாது பயணிக்கும் பதிப்புக் கப்பலுக்கும் அதன் மீகாமன் பரணிக்கும் பாராட்டுதல் களும் வாழ்த்துக்களும்..






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா.சிவசிதம்பரம்

# குழந்தை ம. சண்முகலிங்கத்தின்நேரகாலம் குறுநாடகங்கள் ஏழு



"ஈழத்துத் தமிழ் நாடக உலகின் "தாய்" எனக் குறிப்பிடப்படும் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் நூற்றிநாற்பத்திரண்டுக்கும் மேற்பட்ட சுய எழுத்துருக் களை நாடக உலகிற்கு "பிரசவித்து" அளித்துள்ளார். அவற்றுள் சிலவற்றையே நாடக உலகம் பெயர் அறிந்தும் பார்த்தும் படித்துணர்ந்தும் நயந்து நின்றது. ஏனை யவை பெயர் அறியப்பட்டவையாக மட்டுமே கிடப்பில் கிடந்தன. சில பெயர் அறியப்படாதவையாகவும் கிடப்பில் கரந்துறைந்தன. இன்னும் சில பெயர் அறியப் பட்டவையாக இருந்தாலும் "பிரதியுபகாரம்" புரியச் சென்று காணாமல் போய்க் காலமாகிப் போயின. அவ ரால் தத்தெடுக்கப்பட்ட மொழிபெயர்ப்புக் குழந்தை களும் மேற்போந்த வாறே இன்னலுற்றபோதும் அறுபது பெயர்கள் தேறியுள்ளன. இந்தவாறு காணப்படும் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் நாடகங் களுக்குள் மிகக் குறுகிய நாடக எழுத்துருக்களில் ஏழு இத் தொகுதியில் செம்மைப்படுத்தப்பட்டுப் பதிப்பிக்கப்படு கின்றன." எனத் தம் பதிப்புரையில் குறிப்பிடும் பதிப் பாசிரியர் நாகேந்திரம் நவராஜ் அவர்கள் மேலும் "இவ்வெழுத்துருக்களில் பேசப்பட்டிருக்கும் விடயம் ஆழ்ந்தகன்று நுண்ணியதாக இருப்பினும் அவற்றின் ஆற்றுகை நேரத்தையும் பாத்திரங்களின் எண்ணிக்கை யையும் கருத்தில் கொண்டே குறுநாடகங்கள் என்று வகைப்படுத்தியுள்ளோம்." எனக்குறிப்பிடுவதும் மனங் கொள்ளத் தக்கது. இவ்வாறு இந்நூலின் பொருளடக்கம் கூறும் சுப மங்களம், ஞானாக்கினி, ஒளிவளர் விளக்கே, நேர காலம், சூடக் கொடுத்த சுடர்க்கொடி, புஷ் பாஞ்சலி, நாட்டுப் பரியாரி நல்லகதை சொல்லவில்லை எனும் ஏழு நாடகங்களினதும் எனது வாசிப்பு அனுபவம் வருமாறு!

சுபமங்களம் - களம் பொது வைத்தியசாலை கதைமாந்தர். ஐவர் (ஆண்கள் மூவர், பெண்கள் இருவர்) - இவர்கள் கிளினிக் கில் காத்திருக்கும் பயனாளிகள். இவர்கள் தமக்குள் உரையாடுகின்ற அல்லது பேசுகின்ற மிகமுக்கியமான விடயமே இந்நாடகத்தின் கருவாகவும் உருவாகவும் எம்மைச் சிந்திக்கச் செய்கின்றன. "தம்பி அடிப்படையில் நல்லவை கெட்டவை எண்டு தனித் தனிய எவருமில்லை...! சந்தர்ப்ப சூழ்நிலை, விளங்காத் தனம், வழிவழி வந்த பழக்க தோசம், எதையும் நிண்டு நிதானிச்சு யோசியாத தன்மை - இதுகளாலைதான் சிலசில சமயங்களிலை பிழையளை விட்டிடுறம்" எனத் தொடங்கும் அவர்களது உரையடல் தொடர்ந்து "நாங்கள் ஒண்டத்தான் பணிவா எதிர்பார்க்கிறோம் - எங்களுக்கு மனநோய் இருக்குது அல்லது இருந்தது எண்டதுக்காக நாங்கள் பேசுற, செய்யிற எல்ல விஷயங் களையும், மனநோயின்ற இயல்பு அதின்ரை வெளிப் பாடு எண்டு பாராதையுங்கோ, தயவு செய்து.." எனத் தத்தம் மனவெளிப்பாடுகளாக அமையும் உரையாடல் முழுமை யுமாக எம்மிடம் கோரிநிற்பது எம்மைத் தனித்து விலக் காது, உங்களைப் போல் ஒரு மனிதராக எம்மையும் "விளங்கி" புரிந்து கொண்டு ஏற்று நடவுங்கள் என்பது தான்.

அடுத்து "ஞானக்கினி" மற்றும் "ஒளிவளர் விளக்கே" என்னும் இரு நாடகங்களும் ரவீந்திர நாத் தாகூரின் "பழம்பொறுக்குதல் (Fruit Gathering) என்ற கவிதைத் தொகுதியில் உள்ள 12 வது மற்றும் 19வது கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டவை. இரண்டுமே அடிப்படையில் ஆத்மிகம் சார்ந்த நல்ல கவிதை மொழி அனுபங்களை எமக்குத் தந்து நிற்பதோடு. இரண்டுமே தத்தம் அளவில் அழகியல் உணர்வு மற்றும் மெய்ப்பொருள் காண்பது அறிவு எனும் பொருள் விளக்கத்தினையும் தந்து நிற்கின்றன.

அடுத்து நேரகாலம் - இது "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக" அல்லது "வீட்டுக்கு வீடு வாசற்படியான" எமது இதயம் தொலைந்த - இயந்திர மான எம்வாழ்க்கை அவலங்களின், ஒரு நாட்பதிவு அல்லது பார்வையாக மட்டுமன்றி ஒரு வீட்டின் உரை யாடலின் ஊடாக சமூக உறவு, கல்வி, நிர்வாகம் தொடர் பான கவலைகளும் மனம் கொள்ளப்படுகின்றது, உதாரணமாக "ஜீ.எஸ் சிட்டை வேண்டி வந்த Form I நிரப்பி உடனடியாக கொடுக்க வேணும்... அதுக்கு முதலிலை காணி உறுதியைக் கண்டுபிடிக்க வேணும். இந்த அவசரத்துக்கை... சின்னவள் நிர்மலி யின்ரை ஸ்கூல் அட்மிஷனுக்கான டொனேஷன் காசு நாளைக்கு.. கட்டாயம் கட்ட வேணும்." இவ்வாறு எம் சினத்தை அடக்கி வைக்கும் சீவியம்... ஓர் வகையில் சிரிப்பாகவும் அதே வேளையில் சிரிப்பையும் மிஞ்சிய என் சிந்தனையாகவும் முன்வைக்கப்படுகின்றது. எங்களின் திருத்தத்திற்காக!

அடுத்து சூடக்கொடுத்த சுடர்க்கொடி மற்றும் புஷ்பாஞ்சலி எனும் இரு நாடகங்கள் இவை - முற்கூறிய ஒளிவளர்விளக்கே எனும் நாடகமும் - மலரை மையப் படுத்தி உள்ளமை ஓர் சிறப்பு. இவற்றினூடு - ஈசன் உவக்கும் இன் மலர் மூன்று ஆக, சுவாமி விபுலானந்தரும் மனம் கொள்ளப்படுகின்றார். மேலும் - சூடக்கொடுத்த சுடர்க்கொடியில் ஓர் ஆரம்பப் பாடசாலை முதலாம் வகுப்பு மாணவி மற்றும் மாணவ முதல்வி, அதிபர் - என "ஓர் மனிதம்" காட்சியாகவும், நல்ல "கல்வி" யாகவும் அமைந்துள்ளது. இவ்வாறே "புஷ்பாஞ்சலி" இலும் ஓர் குடும்பத்து வீட்டு ஒரு நாள் - உரையாடலாக அமைந்தா லும் கூட அவற்றினூடு கோயிற் "திருவெம்பாப் பூசை முற்றம் மெழுகிக் கோலம் போடுதல் - பூந்தோட்டம்" என ஓர் இதமான பண்பாட்டு உணர்வு எம் உள்ளம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டு நிற்க ஓர் காலம் பேசும் கதையாக

"இந்தப் பூவையும் தாறீங்களோ அக்கா.. (திகைத்து) அந்தப் பூவையோ!!! ஆமக்கா, ராத்திரி ஆனையிறவிலை இருந்து ஒரு அக்காவின்ரை பொடி வந்திருக்கு!.. அதுக்கு வைக்க.." என்பதனூடு, இங்கு "புஷ்பாஞ்சலி" என்பது ஒரு பூவுக்கான அஞ்சலியாகவும் - இம் மண்ணை (எம் மண்ணை) மீளவும் எம் மனம் கொள்ளச் செய்கிறது.

இறுதியாக "நாட்டுப்பரியாரி நல்ல கதை சொல்லவில்லை" எனும் நாடகம். இது எமது நாட்டார் பாடலின் (ஒப்பாரி) வரிகளை வலிகளை எம்மனம் கொள்ளச் செய்யும் அதே நேரம் - இங்கு நாட்டுப் பரியாரி என்பது நாட்டு மக்களின் (ஊர்) நோய் - பிணி தீர்க்கும் வைத்தியன் என்பதற்கும் அப்பால் - அவ்விளக் கத்தினூடு, அதனைப் போல ஒரு நாட்டின் தேசிய பிரச்சினையான படித்த இளைஞர்களின் "வேலை யில்லாப்" பிரச்சினையை ஒரு நாட்டின் - சமூகத்தின் ஓர் நோயாக (ஆரோக்கியம் இன்மை/ நலன் இன்மை) சித்திரிப்பதும். அந்நோயைத் தீர்க்க வேண்டிய நாட்டுப் பரியாரியான அரசின் - ஒரு பேச்சு மூச்சற்ற செயலறு நிலையும் ஒரு செய்தியாக ஒரு நாடக அரங்கக் களப் பயிற்சியினூடு நிறைவு நாள் ஆற்றுகையாக பங்கு பற்றுநர் எல்லோரதும் சிந்தனை சொல் - செயலாக முழுமை பெற்றிருப்பதும் மனம் கொள்ளத்தக்கது.

நிறைவாக நல்லதோர் நாடகப் பயிலுகைக்கு ஏற்ற வகையில் (வாசிப்பு மற்றும் ஆற்றுகை) இத் தொகுப்பு முயற்சி பயன்மிக்கது. இன்னும் "வரப்புயர" என்னும் ஔவையின் வாழ்த்தாய்.. எம் ஆசானின் படைப்புக்கள் அனைவர் மனதினையும் சென்றடைய அப்பெருந்தகையின் பிறந்தநாளான இன்று (15.11.2025) எல்லோரையும் இயக்கும் இயற்கை இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

---

**தீரன் ஆர்.எம்.நௌஸாத்**

# அலியார் பீர் முகமது வாய்மொழி வரலாறு குறித்து ....

## ஆவணப்படுத்தல் ஊடாக மட்டுமே எழுத்தாளன் வரலாற்றில் முகம் காட்ட முடியும்




வரலாற்றை ஆவணமாக்குவது தலைமுறையின் தேவையாகும். இங்கு வாய்மொழி வரலாறு ஆவணமாக் கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

ஒரு எழுத்தாளனின் பவளவிழாவையும் மணிவிழாவையும் கொண்டாடி மகிழ்வதும் சிறப்பு மலர்களை வெளியிடுவதும் ஆவணமாக்கலின் சிறு புள்ளிதான். ஆனால் வாய்மொழி வரலாறு இவற்றிலிருந் தெல்லாம் புறம்பாகி ஒரு முழுமைத்துவமான எழுத்தாவணமாக மாறுகிறது

வாய்மொழி வரலாற்றை ஆவணமாக்கும் முயற்சியில் ஈடுபட்ட தன் மூலம் தமிழ் இலக்கியத் தளத்தில் பல அரிய சாதனைகளை நிகழ்த்தி வரும் ஜீவநதி மீண்டுமொரு புதுமையை நிகழ்த்தியுள்ளது.

கலை இலக்கிய மாத இதழான ஜீவநதி யின் இப்பணி தமிழின் புதிய இலக்கியத் தொழில்நுட்பம்.

அண்மையில் அலியார் பீர் முகமது அவர்களின் வாய்மொழி வரலாறு ஜீவநதி பதிப்பாக வெளி வந்துள்ளது. அத்தொடரில் அது 8வது நூல்.

ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர் ஒருவரின் வாய் மொழி வரலாறு நூலாகும் முதலாவது சந்தர்ப்பம் இது.

பிரபல எழுத்தாளுமையான பீர் முகமது அவர்களின் வாழ்க்கை வரலாறு 52 பக்கங்களுக்குள் அடக்கம். எழுபத்தைத்து ஆண்டு கால வரலாற்றை ஒரே மூச்சில் வாசித்து முடிக்க நல்ல வசதி. அட்டையும் தளக் கோலமும் அழகோ அழகு.

அரசரத்தினம் அனோஜன், தி. கோபிநாத் , க.பரணீதரன் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நூல் தனித்துவம் பெறுகிறது.

விபுலாநந்த அடிகளையும் முஸ்லிம்களையும் இணைத்துப் பார்க்கும் எண்ணம் எவ்வாறு உருவானது? எஸ். பொன்னுத்துரை மீதான ஈர்ப்பின் பின்னணி என்ன? திறனாய்வு என்ற சொல் காலாவதியாகி விட்டதான கருத்து போன்றவை தொடர்பான கேள்விகளும் பதில்களும் எம்மை எங்கோ அழைத்துச் செல்கின்றன.

க.பரணீதரனின் பின்னட்டைக் குறிப்பு இவ்வாறு பேசுகிறது.

"பீர் முகமது அவர்கள் பல்துறை ஆளுமையுள்ள படைப்பாளர். படைப்பாளர் என்பதற்கும் அப்பால் சிறந்ததொரு கல்வியியலாளர். இலக்கியப் பரம்பரையில் தோன்றியவர். ஆழ்ந்த தமிழ்ப் புலமை மிக்கவர். இரண்டாம் விசுவாமித்திரன் என்ற புனை பெயரிலும் எழுதி வருபவர்.

இரகசியமாக ஒரு விஷயத்தை சொல்ல வேண்டி இருக்கிறது. பீர் முகமது சேர் வெளிநாட்டுத் தூதுவர் அஸீஸ் மற்றும் நானும் இணைந்து மூவருமாக கல்முனையில் பாவலர் பண்ணை அமைத்து பஸீஸ் காரியப்பர் தொடர்பான பணிகளை முன்னெடுத்த விடய மும் இந்த வரலாற்றுக்குள் வந்து போகிறது.

கடந்த ஜனவரி (2024) இல் ஜீவநதி பீர்முகம்மது சேர் அவர்களின் ஆளுமைச்சிறப்பிதழை வெளியிட்டது.. அதில் பிரசுரமான நேர்காணல் பின்னிணைப்பாக இந் நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. அவரின் எழுத்தை மீண்டும் சுவைக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது.

இந்நூலின் ஊடாக பிரபல எழுத்தாளர் பீர் முகமது அவர்கள் வரலாற்றில் வாழ்கிறார். அவருக்கு எமது வாழ்த்துகள். ஜீவநதிக்கு நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சுனன்

# தேயிலைத் தேசத்தவளின் உணர்வெழுதும் தூரிகை




ஜீவநதியின் 474 ஆவது வெளியீடாக முனுசாமி நிதர்சினி (தேயிலை தேசத்தவள்) அவர்களின் "உணர் வெழுதும் தூரிகை" கவிதைத் தொகுதி வெளி வந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் 3 ஆம் வருட மாணவியாக நிதர்சினி கற்று வருகின்றார். தமிழை நேசிக்கின்ற கவிதாயினி அவர் களின் முதற் தொகுப்பாக இத்தொகுப்பு வெளி வரு கின்றது. ஜீவநதி இளம் படைப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்நூலை வெளியிட்டு மகிழ்ந்துள்ளது. புதியதொரு எழுத்தாளர் பரம்பரை உருவாக வேண்டும் என்ற நோக்கத்தோடு இளம் எழுத்தாளர்களது எழுத்துச் செயற்பாட்டை ஊக்குவித்து நூல்களை ஜீவநதி வெளியீடு செய்கின்றது.

மலையக மக்கள் அனுபவிக்கின்ற துன்பங்கள், அவர்களது சில பிரச்சினைகள் இங்கு கவிதையாக்கப் பெற்றுள்ளன. 42 கவிதைகள் இத்தொகுப்பில் பெரிய தும் சிறியதுமாக எழுதப் பெற்றுள்ளன. ஆரம்ப எழுத் தாளருக்கு உரிய சில குறைகள் தென்பட்டாலும் தேயிலை தேசத்தவளின் எதிர்கால எழுத்து சிறப்புடன் அமையும் என்பதற்கு சில கவிதைகள் சான்றாக அமை கின்றன.

"வறுமை" பற்றிய கவிதையில் வறுமையின் கொடுமையை கவிதாயினி பின்வருமாறு பாடுகின்றார்.

"வறுமைத் தீயில் ஏழையின் வயிறு
எரிகின்றது.
அணைக்க அரிசியுமில்லை
அரசியலுமில்லை...
ஏழைக்குழந்தைகளுக்கு எந்த பேயும்
காண்பித்து சோறு ஊட்டுவதில்லை
வறுமைப் பேயதைத் தவிர..."

"மறுமணம்" பற்றிய சிந்தனையை விதைக்கும் கவிதை, தமிழின் இனிமை பற்றிய கவிதை, இயற்கை பற்றிய கவிதைகள் என பல்வேறு கருப்பொருள்களில் கவிதைகள் பாடப்பட்டுள்ளன. தேயிலைத்தேசத்தவள் கவிதைகளில் மலையகப் பிரச்சினைகள் தொடர்பான பதிவுகள் மிகச் சொற்பமாக உள்ளன. எதிர்காலத்தில் அவற்றில் கவனத்தைக் குறிப்பது அவசியம். மேலும் நிதர்சினி தன் தேயிலைத்தேசத்து பிரச்சினைகளை சமூகத்தின் முன் கொண்டு வர வேண்டும். பிரச்சினை களை அனுபவிப்பவர்கள் வாயிலாக அவர்களது எழுத்துக்கள் வாயிலாக அவை வெளி வருகின்றபோது மிக வீச்சாக அமையும். நிதர்சினி எதிர்காலத்தில் குறிப் பிடத்தக்க படைப்பாளராக வளர வேண்டும், தொடர்ச்சி யாக படைப்புச் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும்.

அர்ச்சுனன்

# இந்ராவின் தென்றலின் சிறகுகள்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழை சிறப்புப் பாடமாக பயின்று கொண்டிருக்கும் "இந்ரா" என்னும் புனைபெயரை உடைய தமிழ்வாணி கணேச ரத்தினம் அவர்களின் முதல் கவிதைத்தொகுதியாக "தென்றலின் சிறகுகள்" சிறகு விரித்துள்ளது. யா/விக்ரோறியாக் கல்லூரியில் கல்வி பயின்று யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர். பல்கலைக் கழகத்தில் தமிழை விருப்புடன் கற்று வருவதுடன் பல்வேறு தமிழ் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுவ துடன், ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள் எழுதிய வருகின்றார். பெரிதும் சிறிதுமான 36 கவிதை களை உள்ளடக்கி இத்தொகுப்பு வெளி வந்துள்ளது. தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன், தமிழ் விரிவுரையாளர் த.அஜந்தகுமார், ஆசிரியர் செல்வக் குமார் வாழ்த்துரைகளுடன் வெளியாகிய இத்தொகுதி யில் உள்ள கவிதைகள், சமூகம், போர், பெண்ணியம், இயற்கை எனப் பல பாடு பொருள்களில் பாடப் பட்டுள்ளன. "பெண்மை" என்னும் கவிதையில் பெண்ணின் பெருமைகளை இதிகாசங்களை இணைத்து கவியாக்கி உள்ளார். "விழுப்பம்" கவிதை கற்பு தொடர் பான அருமையான கருத்தை சொல்லும் கவிதை.

"கற்பு என்ற கருத்து நிலையில்
காரிகையை கைது செய்தீர்

கணவனுக்காய் மதுரையை எரித்த
கண்ணகியிலும்
துச்சாதனர் மத்தியில் துகிலுரியப்பட்ட
திரௌபதியிலும்
துறவுப் பாதையைக் காட்டிய
மணிமேகலையிலும்
பெண்மையின் கற்பதனை
வகுத்துத் தொகுத்திட்டீர்
..................................
அவரவர் நிலையில் ஆளும்
மாட்சிமையின் விழுப்பமே கற்பு.

இந்ராவின் பல கவிதைகள் வாசகர்களுக்கு இன்பச் சுவையை அளிக்கின்றன. இருப்பினும் இந்ராவின் மொழிக்கையாளுகை, வாசிப்பு மேலும் அதிகரிக்கையில் சிறப்பு பெறும் என நம்புகிறோம். இன்று கவிதையின் தளம் விரிந்து செல்கின்றது. புதிய உத்திகள், மொழிக் கையாளுகை என்பவற்றின் மூலம் மேலும் நல்ல கவிதைகளை இந்ரா எதிர்காலத்தில் தருவார் என்று நம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குவல்லை கமால்

# என்.செல்வராஜாவின் “உருமாறும் பழமொழிகள்” – ஒரு பார்வை




பழமொழிகள் மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை. வாழ்வனுபவங்களே பழமொழிகளாக வெளிப்படுகின்றன என்று கூறுவர்.

பழமொழிகளை விளங்க வைப்பதற்கு பதவுரை, தெளிவுரை எல்லாம் அவசியமில்லை. சிக்கலில்லாமல் அதனை விளங்க வைக்கும்போது சிறுபிள்ளைகளுக்குக் கூட பரவசமேற்படுகிறது. இன்னுமின்னும் பல மொழி களை அறிந்து கொள்ள ஆசைப்படுகின்றனர்

சாதாரண மனிதர்கள் பேச்சுவழக்கிலே பழ மொழிகளைப் பிரயோகிக்கும்போது அவை பழமொழி களென்று அவர்கள் அறிவதில்லை. கேட்பவர்கள் அதன் மூலம் தெளிவு பெறுகின்றபோதும் அது பழமொழி என்ற வகைக்குள் அடங்குவதைப் புரிந்து கொள்வ தில்லை.

என். செல்வராஜா எழுதியுள்ள “உருமாறும் பழமொழிகள்”(2025) என்ற நூல் மூன்றாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

இதற்கு அணிந்துரை வழங்கியுள்ள கலாநிதி இ.பாலசுந்தரம் “மக்களின் அனுபவப் பிழிவாகவும், நீதி மொழிகளாகவும், வாழ்வின் பல்வேறு விடயங்களையும் சுட்டிக்காட்டி மக்களுக்கு அறிவு போதிப்பனவாகவும், மக்களின் மொழிநடையில் அமைந்தனவாகவும் உள்ள வாசகங்கள் ” என்று குறிப்பிட்டுள்ளார்.

பேச்சு வழக்கைப் போலவே எழுத்து வழக்கிலும் பழமொழிப் பிரயோகம் பரவலாக இடம்பெற்று வந்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு பழமொழி களைத் தலைப்பாகக் கொடுத்து கதை, கவிதை, கட்டுரைகள் எழுதுமாறு கேட்கப்படுவது வழக்கம். அதேபோன்று இலக்கியவாதிகளும் மண்வாசனை கொண்ட சிறுகதை, நாவல்கள் புனையும்போது, பழ மொழிகளையும் பொருத்தமாகச் சேர்த்து தம்படைப்பை மேலோங்கச் செய்கின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பழமொழிகளைத் தொகுத்துப் பதிப்பிக்கும்பணி ஆரம்பித்ததாகக் குறிப்பிடும் நூலாசிரியர், பழமொழி களும் புதுமைக் கருத்துக்களும், உருமாறும் பழமொழி கள், பழமொழிகளும் பெண்கள் நிலையும், பழமொழி களும் சமய போதனையும் என்ற தலைப்புகளின் கீழ் பொருத்தமான பழமொழிகளைத் தெரிவுசெய்து விபரிக்கின்றார்.

பழமொழிகள் புதுமையான கருத்துக்களைக் கொண்டிருப்பதை அறியாமல் பயன்படுத்தும் சந்தர்ப்பங் கள் நிறைய உண்டு.

“கல்லைக் கண்டால் நாயைக் காணோம். நாயைக் கண்டால் கல்லைக் காணோம், “நாய்க்கடிக்குச் செருப்படி” போன்ற பழமொழிகளை முன்னிறுத்தி விளக்கமளிப்பதன் மூலம் சிந்திக்க வைக்கிறார்.

உருமாறும் பழமொழிகளுக்கு உதாரணமாக “ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்” என்று சொல்லப்படுவது உண்மையில் “ஆயிரம் வேரைக் கண்டவன்...” என்றே வரவேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகிறார்.

பெண்கள் சம்பந்தமாக நிறையப் பழமொழிகள் வழக்கில் இருந்து வருகின்றன. அவை காலத்திற்குப் பொருத்தமாக இருக்கின்றதோ இல்லையோ,

“படி தாண்டாப் பத்தினி”,

“பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க”

“சேலை கட்டிய மாதரை நம்பாதே”

போன்ற பழமொழிகளை எடுத்தாள்கிறார்.

சமயக் கருத்துக்களைத் தாங்கி நிற்கும் பழ மொழிகள் நிறைய இருப்பதை எடுத்துரைக்கிறார். அவர் விளக்கமளித்தவற்றில்,

“இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்”,

“பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது”

போன்ற பழமொழிகளும் அடங்கும்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, பழ மொழிகள் சம்பந்தமான தேடலையும், ஆய்வு ஊக்கத்தை யும், புதுத் தலைப்புக்களில் பழமொழிகளைத் திரட்டக் கூடிய உணர்வையும், வாசகர் மனதில் எழுப்பக் கூடிய தாக நூல் அமைந்துள்ளது.

சகல தரத்திலான பாட சாலைகளும் கல்வி நிலையங்களும் தமது நூலகங்களில் இதனை வைத் திருத்தல் மிகுந்த நன்மை பயக்கும்.

ஜீவநதியும் அயோத்தி நூலக சேவையும் இணைந்து இந்நூலை வெளிக்கொணர்ந்துள்ளது.

விலை ஆக 300.00 ரூபாதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரைச்செல்வி

# மணம் கமழும் எமது முற்றத்து மலர்கள் இலக்கியப் படைப்பாளர் பற்றிய ஆவணம்



ஈழத்து இலக்கிய உலகில் தமது பங்களிப்பைச் செய்து வரும் எழுத்தாளர்களின் நூல்களை ஆவணப் படுத்தும் பாரிய பணியை மேற் கொண்டு வருபவர் நூலகர் என்.செல்வராஜா அவர்கள்.

நூல்களை மட்டுமின்றி அவற்றை எழுதிய எழுத்தாளர்கள் பற்றிய தகவல்களையும் ஆவணப் படுத்தும் முயற்சியிலும் தொடர்ச்சியாக அவர் ஈடுபடுவது வரவேற்கத்தக்க ஒன்றாகப் பார்க்கிறோம். இலக்கியத்தில் தங்களது பங்களிப்பை வழங்கி வரும் எழுத்தாளர் ஒவ்வொருவரினதும் வாழ்வையும் இலக்கியப் பணிகளையும் அறிமுகம் செய்யும் நோக்கோடு அவரால் எழுதப்பட்டு பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பாக வெளி வந்திருக்கும் "மணம் கமழும் எமது முற்றத்து மலர்கள்" எனும் இந்நூல் முக்கியத்துவம் வாய்ந்த ஆவணமாக கவனம் பெறக்கூடியது.

இந்நூலின் ஆசிரியர் தன் உரையில் குறிப்பிடும் விடயம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று.

"ஒரு படைப்பாளி வாழும் போதே அவரது பணிகளை விரிவாகவும், தெளிவாகவும், சரியாகவும் பதிந்து வைக்கப்பட வேண்டும். அப்படி கடந்த காலங் களில் செய்து வைப்பதில் அக்கறை காட்டப்படாதமை யால்தான் எமது முன்னோடி இலக்கியவாதிகள் பலரைப் பற்றிய பல்வேறு வரலாற்றுத் தகவல்களை இன்றும் பெற்றுக் கொள்ள முடியாமல் இலக்கிய ஆய்வாளர்கள் இருட்டறைக்குள் கருங்குயில்களைத் தேடி சலித்து விடுகிறார்கள்."

இக்கூற்று இந்நூலின் தேவையை பலமாக உரத்துச் சொல்கிறது. இந்நூலின் கனதியையும் உணர வைக்கிறது.

இந்நூலில் காப்பியக்கோ ஜின்னாஹ் ஷெரிபுத்தீன், வவுனியூர் இரா உதயணன், சந்திரவதனா செல்வகுமாரன், தம்பிஜயா தேவதாஸ், நயீமா சித்திக், குந்தவை, நடராஜா சிறிரஞ்சன், முல்லை அமுதன், சித்தாந்தன், குணா கவியழகன், ஆதிலட்சுமி சிவகுமாரன், தெட்சினாமூர்த்தி செல்வகுமாரன் ஆகிய பன்னிரண்டு இலக்கிய ஆளுமைகள் பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன.

சிறுகதை, நாவல், ஆய்வு, ஓவியம், என பலதுறைகளிலும் ஈடுபட்டு ஈழத்து இலக்கிய உலகிற்கு வளம் சேர்த்தவர்கள் இவர்கள். அவர்களின் நோக்கம், செயற்பாடுகள், சாதனைகள் என அனைத்தையும் அறிமுகம் செய்யும் இவரது ஒவ்வொரு கட்டுரையும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அத்தனையையும் தேடி எடுத்து தொகுத்தவகையில் நூலகரின் தேடலும் உழைப்பும் பிரமிப்பைத் தருகின்றன. இத்தகைய ஆவணப்படுத்தல்களே இலக்கிய உலகின் அடையாளங் கள். பின்வரும் சந்ததியினரும் எமது எழுத்தாளர்களின் ஆளுமைகளைப் புரிந்து கொள்ள வாய்ப்பினைத் தருவன.

ஒரு படைப்பாளி எழுத்துலகிற்கு வருவதற்கு பல காரணங்கள் இருக்கும். அவற்றுள் மிக முக்கியமான காரணமாக இருப்பது மனிதநேயம்.

அடுத்தவர் துயர் கண்டு பொறுக்க இயலாத தருணங்கள் ஏற்படும் போது ஒவ்வொரு படைப்பும் உருவாகிறது.

இந்நூலைப் படிப்பவர்கள் அவற்றை மிக நன்கு உணர்ந்து கொள்வார்கள். எழுத்துக்களோடு சேர்த்து படைப்பாளிகளையும் நேசிக்கக்கூடிய இலக்கிய வாசகர்களுக்கு அவர்களது ஆளுமைகள் பற்றிய அறிதல் கூடுதல் ஈர்ப்பைத் தரும்.

எழுத்தாளருக்கும் வாசகர்களுக்குமான ஒன்றிணைப்பைச் செய்யும் அருமையான பணியைச் செய்திருக்கும் நூலகர் என்.செல்வராஜா மிகவும் பாராட்டுக்குரியவர்.

படைப்பாளிகளைப் பற்றிய ஆய்வை மேற் கொள்ளும் ஆய்வாளர்களுக்கு இத்தகைய ஆவணப் படுத்தல்கள் பேருதவி செய்யும். அடுத்தடுத்த சந்ததி யினருக்கும் கையளிக்கப்படப் போகின்ற பொக்கிஷமாக இந்நூல் இருக்கப் போகிறது என்பதும் உண்மையே.

இப்படியான ஆவணப்படுத்தல்களை தனது ஜீவநதி பதிப்பகம் மூலம் வெளிக்கொண்டு வருவதில் க.பரணீதரனின் உழைப்பு போற்றுதற்குரியது. அவரின் சமூக அக்கறை பாராட்டுக்குரியது.

நூலகர் என்.செல்வராஜா அவர்களின் பணி மேலும் தொடர வாழ்த்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிலட்சுமி சிவகுமார்

# சிதம்பரப்பிள்ளை திருச்செந்திநாதன் வாய்மொழி வரலாற்று ஆவணம் குறித்த பார்வைப் பதிவு



இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்கள் ஈழத்தின் இலக்கியவரலாற்றில் தவிர்க்க முடியாத ஓர் ஆளுமையாக இருக்கின்றார். நாவல், சிறுகதை, நாடகம், விமர்சனம், இதழியல் எனப்பல்வேறு தளங்களில் இயங்கியவர். வாழ்வுக்காலம் முழுவதும் தன்னுடைய இலக்கியக் கொள்கையிலிருந்தும் அரசியல் நிலைப்பாட்டிலிருந்தும் வழுவாது வாழ்ந்து நிறைந்தவர்.

இவரிடமிருந்து வாய்மொழியாக நடராஜா பிரபாகர் உரையாடிப்பெற்ற வாய்மொழி வரலாறு திரு.க. பரணீதரனின் வடிவமைப்பில் ஜீவநதி வெளியீடாக வெளிவந்திருக்கிறது.

இந்தக் கையடக்கமான நூலில் தன்னுடைய தொடக்ககால வாழ்க்கை முதற்கொண்டு போர்க்கால வாழ்க்கை ஈறாக அனைத்தையும் பிரபாகருடன் பகிர்ந்து கொண்டிருக்கிறார் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள். தான் முதன்மையான இலக்கியப் படைப்பாளியாக இருந்து கொண்டு, நிறையப் படைப்பாளர்களை உற்சாகப் படுத்தி வழிகாட்டிவிட்டவர். இவரைச்சுற்றி எப்போதும் இளைய படைப்பாளிகள் இருந்ததை நானும் நேரில் பார்த்திருக்கின்றேன்.

தன்னுடைய "எழு கலை இலக்கியப் பேரவை" ஊடாகப் பல இளைய படைப்பாளிகளை இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்து, அவர்களையும் செல்நெறி வழுவாதவர்களாக உருவாக்கியவர் என்பதையும் நான் அறிவேன்.

யாழ்மாவட்டத்தின்பால் அமைந்துள்ள இணுவில் என்கின்ற ஊர், பல்வேறு கலைகளுக்கும் பெயர் பெற்ற ஊராகத் திகழ்கிறது. ஒப்பீட்டளவில் அதிகமான கல்விமான்களைக் கொண்ட ஊர். இங்கே தான் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களின் வேரும் ஆழப்பதிந்திருக்கின்றது. கலைமிகுந்த குடும்பப் பின்னணியில் தோன்றியவர் இவர்.

திரிபுகளும், மிகைப்படுத்தல்களும், இருட்டடிப்புகளும் வலுப்பெற்றுக் கொண்டிருக்கின்ற இன்றைய நிலையில் கலைஞர்கள் வாழுங்காலத்தில் அவர்களுடைய வாய்மொழியூடாகவே ஆவணப் படுத்தப்படுதல் என்பது காலத்தேவையாக உள்ளது. இதனை நன்குணர்ந்து, ஜீவநதி பதிப்பகம் சிறப்பு மலர்களையும் நூல்களையும் வரலாற்றுக்கடமையாக வெளிக்கொண்டுவருகின்றது.

இளைய தலைமுறையினரும் இளைய படைப்பாளிகளும் முன்னோடிகளை நுணுக்கமாக அறியக் கூடிய வகையில் இந்நூல் வடிவமைக்கப் பட்டிருக் கின்றதை பார்க்க முடிகிறது. இந்நூலில் தன்னுடைய சிறப்புகளை மட்டும் பேசாமல், தன்னோடு இயங்கியவர்களின் செயற்பாடுகளையும் பெருமனத் தோடு சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் தன் நினைவுகளுடாக பதிவுசெய்திருக்கின்றார்.

1970 களில் எழுத்துலகில் நுழைந்த எமதூரைச் சேர்ந்த இவரை, வாசித்து வாசித்து வியந்து போனவர்களில் நானும் ஒருத்தியாக இருக்கிறேன். பெண்கள் தொடர்பான நுணுக்கமான உணர்வுகளைக் கூடத் தன் கதைகளில் சிறப்பாக வெளிப்படுத்துகின்ற எழுத்து இவருடையது.

தன்னுடைய வாழ்க்கைத் துணையின் இழப்பின் பின்னராக "மருத்துவர்களின் மரணம்" என்றொரு நாவலையும் எழுதியிருந்தார். இவரது எழுத்துகள் வாசகர்களின் மனங்களில் அதிர்வை உண்டாக்க வல்லவை. இத்தனை பெருமைக்குரிய, எங்களுடன் வாழ்ந்த படைப்பாளியை 2018 ஒக்ரோபரில் நோய் அரவணைத்துச் சென்றது.

இவரது நேர்காணலைத்தாங்கிய இந்நூல் அவர் பற்றிய முழுமையான வரலாற்று ஆவணமாக இருக்கிறது. இதனை அனைவரும் பேணிப்பாதுகாத்து வைத்திருப்பது தேவையானதாகும். இதனைத் தொகுத்து, வெளியீடு செய்யும் ஜீவநதி பதிப்பகத்திற்கும், நேர்காணலைச் சிறப்பாகச் செய்த பிரபாகருக்கும், தொகுப்பில் முன்னின்ற திரு. தில்லையம்பலம் கோபிநாத்திற்கும் நன்றியும் வாழ்த்துகளும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ.இராஜேஸ்கண்ணன்**

# அநுபவத் தேட்டத்தின் சித்திரம் இராஜினிதேவி சிவலிங்கத்தின் மழைக்கால மேகம்



இராஜினிதேவி சிவலிங்கம் அவர்கள் ஒரு நல்லாசிரியர். ஆசிரியத் தொழிலை ஆழமாக நேசித்துத் தனது பணிக்காலத்திலும் அதன் பின்னரும் அந்தப் பணிக்கான மகத்துவத்துடன் வாழ்ந்து வருபவர். தான் எல்லோருக்கும் மதிப்பளித்து அன்பாகப் பழகுபவர். மாணவர்களை நல்வழிப்படுத்தும் ஆசிரியர் ஒருவருக்கு இருக்க வேண்டிய அதியுச்சமான இலட்சிய நோக்கும் விழுமியப் பண்பும் கொண்டவர். நிதானமான வாழ்வு முறையின் இயல்புநிலையால் மிகுந்த அமைதியும் அழகான தொடர்பாடல் அணுகுமுறையும் கொண்டவர். இராஜினிதேவி அவர்களின் இந்தப் பண்புகளே இந்த நூலுக்கான குறிப்பொன்றை எழுதும்படி அவர் முன் வைத்த கோரிக்கையை மனமுவந்து ஏற்றுக்கொள்ளக் காரணமானது.

இத்தகைய பண்புகள் கொண்ட ஒருவர் இலக்கியப் படைப்பாளியாக உருவெடுக்கும் நிலையில் அவரது எழுத்துக்கள் எவ்வாறு அமையும் என்பதை யாரும் துல்லியமாக புரிந்துகொள்ள இயலும். இந்தப் பண்புகளின் தூக்கலான வெளிப்பாடுகளை ஏற்கனவே வெளிவந்த அவரது சிறுகதைகளில் தெளிவாகக் கண்டு கொள்ளலாம். இவரது சிறுகதைகள் பற்றி "மானிட மேன்மை, மனித நேயம் என்பவற்றை வலியுறுத்தும் போதும், எப்போதும் இவைகள் இலட்சியம், வாழ்வின் சரிவுகளிலிருந்து மனிதனை மீட்டெடுத்தல் பற்றியே பேசுகின்றன" என்று மூத்த எழுத்தாளர் க. சட்டநாதன் குறிப்பிடுவதை எடுத்துக்காட்டலாம். இந்தப் பண்புகளின் தேட்டத்துக்குப் பின்புலமாக அமைந்த இவரது வாழ்வின் அநுபவங்களை சித்திரமாகத் தருவதே இப்போது வெளிவரும் இந்த நூலின் உள்ளடக்கம் என்று எடுத்த எடுப்பில் சொல்லிவிடலாம்.

இந்த நூலின் உள்ளடக்கம் ஒரு நேர்கோட்டுப் பாங்கிலான சித்திரமே! தனது கதையை தானே சொல்லும் ஒரு "தன்வரலாற்றுச் சித்திரம்" என்று சொல்லலாம். அவர் கதை சொல்லும் முறைமை அதனை தன்வரலாறாக விரியும் கதையாகவே காண்பிக்கிறது. உயர்தர வகுப்பில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு பட்டப்படிப்புக்காக தெரிவாகும் ரகுராமன், தமிழரசி எனும் இரண்டு பிரதான பாத்திரங்கள் வழியாக ஒரு நடைச்சித்திரம்போல கதை சொல்லப்படுகிறது. எளிமையான இலகுமொழி, சிக்கலற்ற சம்பவ விவரணம், ஒரே சீரான கதையோட்டம், உன்னத இலட்சியங்களோடு நகரும் கதாபாத்திரங்கள், மனதுக்கு ரம்மியமான சம்பவச் சேர்க்கை, அதிசிரத்தை மிக்க மனித ஊடாட்டங்கள் இவைதான் இந்தத் தன் வரலாற்று நடைச்சித்திரத்தின் முக்கிய பண்புகள்.

இந்தப் பண்புகளால் காலத்தோடு நகரும் முக்கியமான பல பதிவாக்கங்களும் ஆவணப்படுத்தல்களும் கதையில் வந்தமைந்து விடுகின்றன. யாழ்ப்பாணத்தின் சாதாரண விவசாயக் குடும்பங்களின் கூட்டு வாழ்க்கை முறை, கல்வி மற்றும் உத்தியோகத்தை மையமாகக் கொண்ட அவர்களின் இலட்சிய வேட்கை, பல்கலைக்கழக வாழ்வின் பரிமளிப்புகள், இலங்கையின் மலையகம் மற்றும் வன்னிப் பிரதேச பாடசாலைகளிலான ஆசிரிய சேவைக்கால அநுபவங்கள், கடந்து போய் விட்ட மாணவ-ஆசிரிய உறவின் பரஸ்பர அக்கறை, இளைய மனங்களில் நாகரிகமாக பூட்டிவைத்து அடைகாக்கப்படும் உணர்வு களின் பிரவாகம், குடும்ப வாழ்வில் அண்ணன்-தங்கை உறவின் வழியான தியாகம், போர்க்கால வாழ்வின் பதற்றங்கள், அச்சுறுத்தல் கள் மற்றும் கொடுமைகள், நம்பிக்கை தரும் நட்பு, கணவன்-மனைவி உறவின் அழகு போன்ற விடயங்களை இராஜினிதேவி அழகிய சித்திரமாக காண்பிக்கின்றார்; பதிவிடுகிறார். இதன் மூலம் ஒரு நாற்பது ஆண்டுகால நகர்வில் எங்கள் சமூகத்தில் இருப்பிலிருந்த நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், உறவின் செழுமைகள், சமுதாயப் பிரச்சினைகள் போன்றவை பதிவிடப்பட்டுள்ளன. எவை எவ்வாறு அமைந்தாலும் வாழ்வு சில நியமங்களோடும் விழுமியப் பண்பு களோடும் நகர்ந்தேயாக வேண்டும் என்பதைத் தன் எழுத்தின் அக்கறையாக வெளிப்படுத்தியுள்ளார். சமூக நோக்கில் அந்த அக்கறை மிக முக்கியமானது என்றே சொல்லவேண்டும்.

"மழைக்கால மேகம்" இராஜினிதேவியின் நாவல் எழுதும் முதல் எத்தனம். நாவலாக விரியவேண்டிய நல்ல அநுபவத்தேட்டம் அவரிடம் உள்ளது. அது அவரின் சித்திரிப்பில் நிறையவே உள்ளது. குறுநாவலாக மட்டுப் பட்டுப் போகாது விரியத்தக்க வாழ்வியல் விவரணங்கள் இவரது எழுத்துக்களில் தலைகாட்டுகின்றன. ஆயினும், அவற்றை நிதானத்துடன் திட்டமிட்டு எழுத்தில் கொண்டு வருவது அவசியமாகின்றது. ஒரு சிறுகதையில் வரும் விவரணத்தின் ஆழ, அகலம் நாவலில் விரிவுபெறும் விதம் நன்கு திட்மிடப்பட வேண்டியது. இதனாலேயே பல நல்ல எழுத்தாளர்கள் சிறுகதை எழுத்தாளர்களாகவே தங்களை மட்டுப்படுத்திக் கொண்டனர்! இராஜினிதேவி அவர்களிடம் கல்வியுலக அநுபவங்களை வெளிக் கொணரும் நல்ல சிறுகதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கான கருப்பொருள்கள் அதிகம் உள்ளன என்பது “நிலவும் சுடும்” எனும் அவரது சிறுகதைகளின் தொகுப்பின் வழியே அறியக்கிடக்கிறது.

இன்றைய நவீன இலக்கியப் பரப்பில் நாவலிலக்கியத்தின் விளைபயன் என்பது கதை சொல்வதோடு மட்டும் நின்றுவிடுவ தில்லை. அதன் பரிமாணம் மிக விரிந்தது. கதை என்பதற்கு அப்பால், ஒரு சமூகத்தின் அல்லது தெரிவு செய்யப்பட்ட காலத்தின் வாழ்வியலின் முழுமைக்கான தரிசனத்தை உலகப் பொதுவெளிக் கான அநுபவ விசாலமாக ஒரு நாவலாசிரியர் எப்படிக் கொண்டு வருகிறார் என்பது முக்கியமானது. இந்த நோக்கில் ஈழத்தில் பல நாவல்கள் வெளிவந்துள்ளன. ஈழத்திலிருந்து உலகின் பல்வேறு நாடுகளுக்குப் புலபெயர்ந்த மக்களின் வாழ்வநுபவங் களை பிரதி பலிக்கும் நல்ல நாவல்கள் பல புலம்பெயர் தேசங்களில் வாழும் எழுத்தாளர்களால் எழுதப் பட்டுள்ளன. இன்றைய ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி யானது தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலே மையங்கொண்டுள்ளது என்பதை சாதாரணமாக உணரலாம். அவை ஈழத்து வாழ்வின் தொடர்ச்சியாக தேசங்கடந்து விரியும் புதிய வாழ்வியல் அநுபவங்களால் திரட்சி பெறுகின்றன என்றே கருதமுடிகிறது. அவ்வாறு விரியவேண்டிய அநுபவங்கள் எங்கள் நிலத்திலும் ஏராளம் உள்ளன.

இந்த நூலில் உள்ளடங்கும் தன்வரலாற்றுச் சித்திரிப்பில் வரும் தமிழரசியிடம் அவளின் வாழ்வை “படர்க்கையில்” சொல்லிவிடவேண்டும் எனும் ஏக்கம் வந்துவிட்டது. அந்த ஏக்கம் “தன்மையில்” இராஜினி தேவி சிவலிங்கம் அவர்களுடையதே என்பதை தெளி வாக உணரமுடிகிறது. அந்த உணர்வுக்கு மதிப்பளிக்கும் அவசியம் வாசகர்களாகிய எங்களுக்கு உள்ளது. எனினும், இந்தச் சித்திரத்தில் வரும் சுதாகரன், சோபனா போன்ற மாணவர்கள் மீது இராஜினிதேவி எனும் நல்லாசிரியர் வெளிப் படுத்திய அக்கறையும் ஈடுபாடும் பெறுமதிமிக்க அநுபவங்கள். இராஜினிதேவி போன்றதொரு நல்லாசிரி யரின் இப்படியான கல்வியுலக அநுபவத் தேட்டங்கள் மீள ஞாபகப்படுத்தி தனித்து எழுதப்படும்போது அது இன்றைக்கான கல்வியுலகுக்கு நல்ல வழி காட்டியாக உருவெடுக்கும். அவற்றை எழுதித் தரவல்ல ஆன்ம பலமும் உடல்நலமும் அவருக்கு வாய்க்க வாழ்த்துவோம்.

---

அர்ச்சுனன்

# தமிழ்கவியின் “புயலுக்குப் பின்” நாவல்




ஈழத்து போராட்டம் தொடர்பான பல நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. 2009 இல் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக சொன்ன பின்னர் பல போராட்டம் தொடர்பான நூல்கள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன. குறிப்பாக கடைசிக்கட்டப் போர் தொடர்பான பல்வேறு எழுத்தாளர்கள் பதிவுகளை தரிசித்து வருகின்றோம். குறிப்பாக ஆதிலட்சுமி, யோகேந்திரநாதன் போன்றோரது நாவல்கள் கடைசியில் என்ன நடந்தது என்பதற்கான சான்றாதாரங்களாக அமைகின்றன. தமிழ்க்கவி அவர்கள் பேராட்டத்தில் இணைந்து செயற்பட்ட ஒருவர். தனது இரு பிள்ளைகளையும் போராட்டத்தில் பறி கொடுத்தவர். வன்னிப் பிரதேசம் பற்றிய மிகுந்த தெளிவுடையவர். போராட்டம் தொடர்பான பல பதிவுகளை எழுதி வருபவர். போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் “ஊழிக்காலம்” என்னும் நாவலை எழுதியிருந்தார். அதன் பின்னர் வன்னிக் காடுகளை மையப்படுத்தி “காடுலாவு காதை” நாவலை எழுதினார். அதற்கு தேசிய சாகித்திய விருதும் பெற்றுக் கொண்டார். போர் முடிவுக்கு வந்த பின்னரான “புனர்வாழ்வு முகாம் வாழ்வினை” புயலுக்குப் பின் என்ற இந்நாவல் வழியாக வாசகர்களுக்கு கொண்டு வந்துள்ளார். முகாமில் ஏற்படுத்தப்பட்ட துன்பங்கள், காட்டிக்கொடுப்புகள், பழக்க வழக்க சீர்கேடுகள், வன்முறைகள் எனப் பலதையும் தன் பாணியில் எழுதியுள்ளார். முகாமில் புலி உறுப்பினர்களில் முக்கிய புள்ளிகளாக இருந்தவர்கள் பட்ட அவஸ்தைகள் அவலங்கள் பற்றியும், பெண் பிள்ளைகள் அனுபவித்த துயரங்களையும் வாசகனது கண்ணீர் கசியும் வகையில் நாவலில் பதிவு செய்து உள்ளார். செய்யாத குற்றத்தை செய்ததாகக் கூறும் முகாமுக்கு பொறுப்பான பெண் இராணுவத்தினரின் அடாவடித்தனங்களும் ஆத்திரத்தை உண்டு பண்ணுகின்ற வேளை எங்கடை பெண்களின் வீராப்பு மனநிறைவைத் தருகின்றது. போராளியாக இருந்தவர்கள் முகாம்களில் அனுபவித்த கொடுமைகள் பற்றிய பதிவுகள் சரியான வகையில் வெளிவராத குறையை தமிழ்கவி அவர்கள் இந்நாவல் மூலம் வெளிப்படுத்தி உள்ளார். இடையிடையே ஈழப்போர், மக்களின் எதிர் பார்ப்பு, தலைமையின் கடைசி வரையான நம்பிக்கை என பலதையும் தொட்டுச் சென்றிருக்கிறார். நாவலில் தமிழ்கவி அவர்களும் ஒரு பாத்திரமாக வெளி வருகின்றார். அதன் ஊடாக பல் தகவல்களை அறியக் கிடைப்பதுடன், தமிழ்க்கவியின் சிங்கள மொழிப்புலமை பற்றியும் அறிய முடிகின்றது. பல இடங்களில் போராளிப் பெண்களைப் பாதுகாக்க புத்திசாலித் தனமாக தான் நடந்த விடங்களை சிறப்பாக பதிவு செய்துள்ளார். வரலாற்றில் நம் பெண்கள் அனுபவித்த துன்பத்தின் சாட்சியங்களில் இந்நாவலும் முக்கியமானதாகக் கொள்ள முடியும். நாவல் 208 பக்கங்களைக் கொண்ட இந் நாவல் ஆரம்பம் முதல் இறுதி வரை மிக நேர்த்தியாக நகர்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.சு.முரளிதரன்

# நனையாத நிழலாக நயாதீதச் சொற்கள்
## மீரா சிவகாமியினி
## காற்றுக்கும் வேர்த்தது



அனைத்தையும் விசாரணைக்குட்படுத்தி, அவற்றின் ஆழ்புல மெய்ம்மையினை அறிகின்ற வேணவா மிகுந்தவர் மீரா சிவகாமி!

அளவு கடந்த அவையடக்கத்தோடு முகிழ்க்கும் அவரது தர்க்க வினாக்கள், அவையினை அடக்கும் வலிமையோடு நிறைவுறும். மொழி மீது தீராத மோகம் கொண்டவர்.

நீரில் விழுந்தும் ஈரம் சுவறாத சொற்களின் நிழலாக சோபிதத்தோடு இவரது கவிதைகள் மிளர் கின்றன. புவிக்கவிதையின் ஆதிவாசமும், நவீன கவிதையும் இருண்மை வேஷமும் கலந்து புனையப் பட்டுள்ளன.

வெகுமக்கள் நயக்கும் கலைத்தளங்களோடு அதிக பரிச்சயமுடையவர். எனினும் தீவிர இலக்கிய வாசிப்பின் ஊடாகக் கவிதையினை வேறு புலத்திற்கு நகர்த்த முயன்றுள்ளார். புதிய அனுபவங்களையும், அர்த்தவெளியினை கட்டமைக்க எத்தனிக்கின்றார். எனினும் எல்லையற்ற சில சொற்களும் பொங்கலில் முந்திரி போல ஆங்காங்கோ தென் படுகின்றன. அடுத்து வரும் படைப்புகளில் சீர் செய்வார் என நம்புகின்றேன். சிங்கமும், யானையும் சங்கமித்த "யாளி" போல ஜனரஞ்சகமும் - தீவிரப்பண்பும் கலந்த இருமை ஈர்ப்புக் கவிதைகளாக இவை காணப்படுகின்றன. பகட்டில்லாத பண்பு வெகுவாக ஈர்க்கின்றது.

கவிதை புனைய காளிதேவி வந்து நாக்கிலே எழுதிவிடத் தேவையில்லை. கனதியான அனுபவ நெருக்குதலே போதுமானது.

ஈழப்போரின் அழுத்தத்தில் அவரது எண்ணத்தி லிருந்து புறப்பட்ட சொற்கள் வீரநடை போட்டு கம்பீரப் பவனியாகக் காட்சி தருகின்றன. அதிகார மையத்தை எதிர்த்து உயிர்ப்போடு போராடும் வார்த்தைகளின் வசீகரமான ஒழுங்கமைப் பாக மிளிர்கின்றன.

"தேசம் எங்கும்
மௌனப் போர்வை
இரவின் ஓரத்தில் பயத்தின் நிழல்கள்
***
வானம் உடைந்து உடைந்து
ஒழுகிக் கொண்டிருந்தது
ஊழியின் பெருமூச்சு
உயிர்க் கலங்களில்
சாட்டை கொண்டடித்தது
***
சுரண்டல்களின் சூக்குமங்களை
தன் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு
திரியும் தர்மவாதிகள்
***
சட்டெனவீசிச்சென்ற
காற்றினை
நான் வாசித்தேன்
உன் பெயர் அதில் பொறிக்கப்பட்டிருந்தது

இவ்வாறாக இத்தொகுப்பு முழுமையிலும் அர்த்தச் செறிவான சொற்களின் திருவிழாவையும் இனங்காண முடிகின்றது. மீரா சிவகாமிக்குள்ளே அற்புதமான கவித்துவம் புதைந்திருப்பதை இத்தகைய வரிகள் கட்டியங் கூறுகின்றன. தீராத தேடலும், தீவிர வாசிப்பும் தொடர்ந்தால் கவனக் குவிப்பிற்குரிய கவிஞராக மாறுவார் என்று நம்புகின்றேன்.

"தேடித்தேடிப் பார்க்கின்றேன்
வரலாறு காண முடியாத ஓர் வார்த்தை
உனக்கான ஓர் முகவுரை
ஒன்றினை எழுத"

என எழுதிச் செல்கையில் ஓர் - ஓர்- ஒன்று என்பன நெருடலாக அமைவதாக உணர்கிறேன். மீள் மொழி யாள்கையினைத் தவிர்த்திருந்தால் கட்டிறுக்கமாக அமைந்திருக்குமெனத் தோன்றியது. எனினும் சொற் களின் அமைவிடத்தைக் கவிதை தானே தேர்ந்தெடுக் கிறது. அது கவிஞரின் உரிமை. அதில் தலையிடும் சுதந்திரம் எவர்க்கும் கிடையாதென்ற தெளிவும் எனக்குண்டு. இப்படித்தான் எழுத வேண்டுமென்று ஒழுங்கு விதிகளை எவரும் திணிக்க முடியாது.

"காற்றுக்கும் வேர்த்தது" என்னும் இந்தத் தொகுப்பினூடாக ஈழத்துக்கு மற்றொரு பெண் படைப்பாளி கிடைக்கின்றார்.

அதிகாரங்களை விசாரணை செய்யும் மானுட நேசகரை பெருவிருப்போடு பாராட்டி வரவேற்கின்றேன்.

வாழ்த்துகள் சகோதரி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.இரவீந்திரன்

# உழைப்பின் வாயிலாகப் புற உலகை மாற்றுகின்ற மனித ஆற்றலே சமூக அவலங்களையும் துவம்சம் பண்ணும்



எந்தவொரு தனியாளும் தனக்கென ஒரு தத்துவத் தளத்திலேயே இயக்கம் கொள்கிறார்; அது எத்தகையது எனும் விசாரணையில் இறங்குவதை விடவும் இயங்கிச் சென்றாக வேண்டும் என்ற உந்துதல் காரணமாக அநேகர் தத்துவத்தை கைக்கொள்ளாமல் கடந்து சென்று விடுகிறோம். தமது எண்ணப் பதிவுகளைப் பலருக்கும் உரியதாக எழுத்தில் பரிமாற்றம் செய்கின்ற ஆர்வம் எல்லோருக்கும் ஏற்பட்டு விடுவதில்லை. எழுத எண்ணிய போதிலும் எவ்வாறு எழுதுவது எனும் தயக்கத்தால் பலரும் பின்வாங்கி விடுவதுண்டு. தமது அனுபவம் சார்ந்தும் ஏனையவர்கள் வாயிலாகக் கேட்டறிந்தவற்றைத் தொகுத்தும் உரையாடுகின்ற சிலர் அற்புதமான கதை சொல்லிகளாகத் திகழ்வதுண்டு. அவற்றை அப்படியே எழுதினால் அற்புதமான படைப்பாக முகிழும் என்று சொன்னால் கூட எழுத இயலாமல் இடர்படுவர். அடிப்படையில் தன்னில் இயங்கும் தத்துவத்தளம் குறித்த தெளிவு கைவரப் பெறாமையினால் எழுதத் தயக்கம் ஏற்படுத்துவதாகப் பலர் இருப்பர். (நேரகாலத்தை அதன் பொருட்டு ஒதுக்க இயலாத வாழ்வியல் நெருக்கடிகள் போன்ற பல காரணிகள் தடையை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.)

ஒரு படைப்பாளியாகத் தலைசிறந்த ஆக்கங்களை வழங்கி வருபவராக மு.அநாதரட்சகன் எழுதி ஜீவநதி வெளியீடாகக் கிடைத்துள்ள "உலகக் கலை - இலக்கியத் தத்துவவெளி ஒரு குறும்பயணம்" என்ற நூலைத் திரும்பத் திரும்பத் படித்து அதன் ஆழமான உள்ளடக்கத்தை முழு நிறைவாக உள்வாங்குகின்ற எந்தவொரு கதை சொல்லியும் அற்புதமான ஆக்க இலக்கிய கர்த்தாவாகப் பரிணமிப்பார் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. அத்தகைய ஒரு பாட நூலக இதனைப் வெளிப்படுத்தி உள்ளார் என்பது இதன் பொருளல்ல; இந்த நூல் தனது தலைப்பில் காட்டுமாறு உலகப்பெரும் கலை - இலக்கிய கர்த்தாக்கள் எத்தகைய தத்துவத் தளத்தில் காலூன்றி நின்று உலகையும் மனித சமூகத்தையும் தரிசித்துத் தமது ஆக்கங்களை வெளிப்படுத்தினார்கள் என்பதைச் சுட்டிக் காட்டும் குறிக்கோளைக் கொண்டுள்ளது. இந்த நூலில் கூறப்பட்டுள்ள படைப்புக்களை அறிந்தவர்கள் அல்லது அவற்றைத் தேடிச் சுவைப்பவர்கள் அவை எந்தத் தத்துவம் சார்ந்த வெளிப்பட்டன எனக் கண்டுணர்வதற்கு இந்த நூல் ஆற்றுப்படுத்துகின்றது.

தேசிய ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறும் துடிப்பில் மிகப்பெரிய தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் ஆகுதியாக்கிய எமது சமூகம் அவற்றினூடாக எதனைச் சாதித்தது, அடுத்த கட்டம் நோக்கி நகர்வதற்கு அந்த வரலாற்று அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் எவை என்பது குறித்து இன்றைய தலைமுறையினர் தெளிவை எட்டுவதற்கும் இந்த நூல் வழிகாட்டியாக அமையும். நூறு வருடங்களின் முன்னர் பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளால் சூறையாடப்பட்டவாறு இருந்த சீனத்தேசம் தனது விடுதலையை வென்றெடுக்கப் பயன்படுத்திய கருவிகளை அறிவது எமது பாதையைச் செப்பனிடுவதற்கு வழிகாட்டவல்லது. யுத்தத்தின் வெற்றி என்பது ஆயதங்களைக் காட்டிலும் அவற்றைக் கையாளும் மக்களை அதிகம் சார்ந்துள்ளது என்ற அடிப்படையில் மக்கள் மனங்களை அதற்கு அமைவாகக் கட்டமைக்கும் கலை இலக்கிய வலுவான பங்காளி என்பதில் சந்தேகம் இல்லை.

ஏகாதிபத்தியப் பிணைப்பை முற்றாகத் தகர்த்து விடுதலை பெற்ற மக்கள் சீனம் தனது வெற்றியில் செஞ்சேனைக்கும் சீனக்கொம்யூனிஸ்ட் கட்சிக்கும் எத்தகைய முக்கியத்துவம் உள்ளதோ அதேயளவுக்குக் கலை - இலக்கிய பண்பாட்டுத் தளத்துக்கும் உள்ளது என்பதனை வலியுறுத்தத் தவறுவதில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் புதிய பண்பாட்டு எழுச்சி உணர்வுடன் மக்கள் பங்கேற்க உகந்த படைப்பாக்கங்களை வழங்கிய லூசுன் தலைமைத்தள கர்த்தராக விடுதலை விரும்பிகளால் கொண்டாடப்படுகின்றார். "உலக கலை இலக்கிய தத்துவ வெளி ஒரு குறும் பயணம்" எனும் அநாதரட்சகனின் இந்த நூலின் முதல் கட்டுரை லூசுன் பற்றியதாகும்.

தேச விடுதலை வாயிலாகச் சோசலிசத்தை வென்றெடுப்பதற்கான புறநிலை யதார்த்தத்தை ஏற்படுத்தித் தந்தது ருஷ்யாவின் ஒக்ரோபர் (1917) புரட்சி வாயிலாக உதயமான "சோவியத் சோசலிசன் குடியரசுகளின் ஒன்றியம்" வலுவுடன் இருப்புக் கொண்டு வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து வந்தமையினால் ஆகும். அத்தகைய சமத்துவம் படைத்தலுக்கான புதிய சகாப்தத்தை ருஷ்யா தொடக்கி வைப்பதற்கான காலம் கனிந்து வருவதனை டால்ஸ்டாய் தொடங்கி வரிசை கட்டி வந்த பல படைப்பாளிகளது பங்களிப்புக்களை இந்த நூலில் ஆசிரியர் அடுக்கி வருவதனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் பெயர்களை உச்சரித்து மலைப்பை ஏற்படுத்துவதாக அல்லாமல் சமூக மாற்றச் செல்நெறி இயக்கத்தை அந்தப் படைப்பாளிகளின் உருவாக்கம் - பங்களிப்பு என்பவற்றினூடாக எடுத்தியம்பும் அநாதரட்சகனின் உத்தி விதந்துரைக்கத்தக்கது "பாதம் முதல் தலை வரை அடிமைகளைக் கொண்டிருக்கும் ஒரு நாடு ருஷ்யா" என்று செர்னிஷேஸ்ல்ஸ்கி ஆதங்கப்பட்டு, அதனைத் தகர்த்து விடுதலை உணர்வு பெறுவதற்கான தத்துவப் பரப்புரையை விதைத்து வந்தார். அவரது பங்களிப்பை லெனின் சிலாகித்துப் பேசியதுண்டு. ஒவ்வொரு அசைவியக்கத்துக்கான ஆளுமைகளைச் சிந்தாமல் சிதறாமல் எடுத்துக் காட்டி வந்த ஆசிரியர் செர்னிசேல்ஸ்கியைத் தவறவிட்டது மட்டும் இந்நூலில் இடம் பெற்ற ஒரு விடுபடல் எனக் கருதலாம்.

"மானுடம் வென்றதம்மா" எனக் குதூகலிக்கும் படியாக இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதி மக்கள் எழுச்சிகளின் வரலாறாக அமைந்தது. இரண்டாம் உலக மகா யுத்தம் ஏற்படுத்திய மன உளைச்சலில் இருந்து மீள இயலாத மனுக்குலம் சென்ற நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் தளம்பலுக்கு உள்ளானது. மக்கள் விடுதலை இயக்கம் பின்னடைவதில் இருந்து மீண்டெழுவதற்கு முசோலியின் சிறைக் கொட்டகையில் சிந்தனை முடக்கம் செய்யப்பட்ட கிராம்ஷியின் சிந்தனை வீச்சு உதவ இயலுமா என்ற தேடல் அண்மித்த இரண்டு, மூன்று தசாப்தங்களாக உலகெங்கும் மெலெழுந்து வந்தது. அவரது சிறைச் சுவர்களை ஊடுருவி வெளிப்பட்டுக் காலத்தையும் கடந்து தாக்கம் விளைவிக்கும் சிந்தனைக் கருவூலம் பற்றி இந்த நூல் சிறப்பாக எடுத்தியம்புகிறது.

புத்துலகம் படைக்க இயலும் என்ற நம்பிக்கை பொய்த்துப் போனதாகக் கூறியபடி மேலெழுந்த பின் நவீனத் துலச் சிந்தனைச் சூழல் கலைப்படைப்புக்களில் ஏற்படுத்திய சில விருத்திகள் குறித்தும் இந்நூல் பேசத் தவறவில்லை. சமூக மாற்றம் சாத்தியப்படுத்தப்படு வதற்குரிய தத்துவத் தளத்தை உறுதிப்பட இந்த நூல் எடுத்துக் காட்டுவதன் வாயிலாக பின் நவீனத்துவச் சூழல் ஏற்படுத்திய அவநம்பிக்கைக் கையறு நிலையைக் கடப்பதற்கு உதவுகிறது எனும் அம்சம் அழுத்தமாக வலியுறுத்தப்பட வேண்டும்.

மனிதருழைப்பை அபகரிக்கும் மனிதப் பதர்கள் சார்பாக வாதாடும் கருத்து முதல் வாதத் தத்துவப் பிரிவினர் மானுடம் எதிர்நோக்கும் இடர்பாடுகளுக்கு பிரபஞ்சம் கடந்த மேலான ஒரு சக்திதான் காரணம் எனக்காட்ட முற்படுகிறது. அந்த வகைப்பட்ட சிந்தனை முறையை நிராகரித்து பொருள் முதல் வாதம் எனும் கண்ணோட்டத்தையும் இயங்கியல் அணுகுமுறையையும் வெளிப்படுத்தி இருப்பது மார்க்சியம். மார்க்சியத்தை உள்வாங்கும் வாய்ப்புக் கைவரப்பெறாத படைப்பாளிகளில் சிலர் விவகாரங்களைப் புறநிலையாகப் பார்த்து நேர்மையாகத் தமது ஆக்கங்களை உருவாக்கிய போது மனுக்குலம் உய்யும் வகையிலான உன்னத படைப்புக்களை வழங்கியுள்ளனர். அத்தகைய இடர்கள் இந்த நூலிலும் காட்டப்பட்டுள்ளன. மனித சமூக வரலாற்று வளர்ச்சியை இயங்கியல் பொருள் முதல் வாத அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்திய மார்க்சியம் முன்வைக்கும் வரலாற்றுப் பொருள் முதல் வாதம் படைப்பாளிகளின் பார்வை அகலிப்புக்கு வழி சமைக்கும். அந்த விடயத்தைப் படிப்படியாக உணர்த்தி வந்த ஆசிரியரின் நூலில் இடம்பெற்றுள்ள இறுதி முத்தாய்ப்பான பந்தி இந்த நூலின் கனங்காத்திரத்தை விளங்கிக் கொள்ளப் போதுமானதாக அமையும்:

"மார்க்சிசம் ஒரு பொருள் முதல் வாதத் தத்துவம் என்கிற வகையில் அது பொருளை முதன்மையான கருத்தாக்கமாகக் கொள்கிறது. அது சமூக வாழ்க்கையை இயற்கையின் தொடர்ச்சியாகக் கருதுகிறது. சமூக வாழ்வின் இயற்கை அடிப்படையை நாம் முழுதாக மீறிச்செல்ல முடியாது. புனரமைக்கப்பட்ட வடிவிலான இயற்கை நம்முடன் வாழ்கிறது. மனித வாழ்வின் முன் நிபந்தனையாக சூழல் இயற்கை உள்ளது. அதே போல சமூக வாழ்வின் பொருள் முதல்வாத அடிப்படையாக மனிதர்களின் உழைப்பும் உற்பத்தியும் அமைந்துள்ளன. புறஉலகை உழைப்பின் மூலம் உருமாற்றுவது, நம்மை நாமே உழைப்பின் மூலம் உருமாற்றுவது, சமூக வாழ்வை நாம் மாற்றியமைப்பது ஆகியவை மனித வாழ்வின் பொருள் முதல் வாதத்தின் அடிப்படைகளாக உள்ளன!"









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஞ்ஜனி சுப்ரமணியம்

# நூலகர் என். செல்வராஜா அவர்களின் "மணம் கமழும் எமது முற்றத்து மலர்கள்" பாகம் இரண்டினை முன்னிறுத்திய பார்வை




"இந்த உலகத்திலே உங்களுக்கு ஒரு வேலைதான் உண்டு. அது என்னவென்று தேடிக் கண்டு பிடித்துச் செய்யுங்கள்" என்ற ஜோர்ஜ் பேர்ணாட் ஷோ அவர்களின் மேற்கோள் ஒன்றினை, "மணம் கமழும் எமது முற்றத்து மலர்கள் பாகம்-2" கட்டுரைத் தொகுப்பினில் காணக் கிடைக்கிறது.

பன்முக ஆளுமை கொண்ட நூலகர் திருவாளர் என்.செல்வராஜா அவர்களுக்காகவே அது கூறப் பட்டதோ என எண்ணும் அளவிற்குப் பயனுறு பணியினை ஆற்றி வருபவர் அவர். எழுத்தாளர், ஆய்வாளர், பதிப்பாளர், விமர்சகர், ஆவணக்காப்பாளர் என பல சிறப்புத் தகைமைகளின் சொந்தக்காரர்.

இத் தொகுப்பில் அவர், ஈழத்து தமிழ்ப் படைப்பாளிகள் பதின்மர் குறித்த வாழ்வும் பணிகளும் பற்றிய விரிவான தகவல்களைப் பகிர்ந்துள்ளார்.

ஜீவநதியின் 479 ஆவது வெளியீடான இந்நூல், 2025.10.21 அன்று பிரசுரம் கண்டது. ஐப்பசி - நூலக மாதத்தை முன்னிட்டு ஜீவநதி பதிப்பகம் 31 நாட்களும் நூல்களை வெளியீடு செய்து, எழுத்துலகில் அசுர சாதனை படைத்திருந்தது என்பதும் கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. ஜீவநதி மாதாந்த சஞ்சிகை மற்றும் ஏனைய சிறப்பு வெளியீடுகள் மூலம் இலக்கியத்திற்கான தனது சேவையை ஆற்றி வரும் கலாமணி பரணீதரன் அவர்களின் ஆவணப் பணிகளும் பாராட்டப்பட வேண்டியவை.

நூலகர் செல்வராஜாவின் உன்னதமான பணியாக அமைவது, இலங்கையிலும் பிறநாடுகளிலும் வெளிவந்த ஈழத்து தமிழ் நூல்கள், மற்றும் ஈழம் தொடர்பான நூல்கள் ஆகியவற்றின் விபரங்களைத் திரட்டி ஆவணப்படுத்திய "நூல் தேட்டம்" பதிப்புப் பணியாகும்.

1990ம் ஆண்டு முதல், ஒவ்வொன்றும் ஆயிரம் நூல்களின் குறிப்புரையுடன் கூடிய 18 பிரமாண்ட தொகுதிகளை வெளியிட்டு எதிர்காலத்திற்கான ஆவணமாகப் பாதுகாத்தமை மிகப் பெரும்பணி.

அத்துடன் எழுத்தாளர்களையும் ஆவணப் படுத்தி வருகிறார். அதற்கு மற்றுமொரு சான்றாக இந்நூல்.

இதில் புத்தூரின் மைந்தன் பொ. கருணாகர மூர்த்தியின் வெளியீட்டு உலகம், உலகத் தமிழாராய்ச்சியில் விருபா குமரேசனின் பங்களிப்பு, வெற்றிமணியின் வெளியீட்டுப் பாரம்பரியம் : மு.க. சுப்ரமணியம் முதல் மு. க.சு.சிவகுமாரன் வரை, சூரிச் படைப்பாளினி கமலினி கதிரின் படைப்புலகம், க. சட்டநாதனின் படைப்புலகம், ஈழத்தின் போருழல் காதையை பதிவாக்கும் அலெக்ஸ் பரந்தாமனின் எழுத்துலகு, அமரர் ஆ.மு.சி.வேலழகனின் படைப்புலகம், நூற்றாண்டு நினைவுகளில் வித்துவான் சா.இ. கமலநாதன் (27.04.1925 - 25.4.2012), வேலணையூர் பொன்னண்ணாவின் வாழ்வும் பணிகளும் ஆகிய தலைப்புகளின் கீழ் பெறுமதியான கட்டுரைகள் அடங்கியுள்ளன.

இப்பதின்மரில், ஆவணப்படுத்தலை முதன்மைப் பணியாக கொண்டோர் தலைமுறை தாண்டியும் இலக்கியப் பணிகளை மேற்கொள்வோர் போராட்டகால வாழ்வினை எழுதியோர் ஈழத்திலும் புலம்பெயர்ந்தும் தமிழ்வாழத் தம் பணி செய்யும் எழுத்தாளர்கள், கவிஞர்கள் அறிவியலாளர்கள் என பல் வகைமை கொண்ட இலக்கியவாதிகள் உளர். இவர்களது கலை இலக்கிய சமூகப் பணிகள் பற்றியும், நூல்கள் பற்றியும் இதுதொகுப்பில் விதந்து உரைக்கப் பட்டுள்ளது.

நூலகர் செல்வராஜாவின் ஏனைய சிறப்புப் பணிகளில் முக்கியமானது, ஐரோப்பிய தமிழ் ஆவணப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி மையம் (ETDRC). இவ்வமைப்பு நூலகர் செல்வராஜாவால் 2009 ம் ஆண்டு இங்கிலாந்தில் நிறுவப்பட்ட ஒரு தொண்டு நிறுவனமாகும். இந்த மையம் இலங்கைத் தமிழர்கள், அவர்களின் கலாச்சாரம், வரலாறு, அரசியல் மற்றும் தமிழ் மொழி தொடர்பான புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆவணங்களை, ஆராய்ச்சி நோக்கங்களுக்காக சேகரித்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவர் பெயரையும் புகழையும் விளம்பரத்தையும் விரும்பாதவரெனினும், தனது பணிகளுக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார், அவற்றில் 2017 ஆம் ஆண்டில் பிரித்தானியா வழங்கிய IPRA( International Public Relations Association) பொதுமக்கள் தொடர்புக்கான விருது முக்கியமானது. இவ்வாறான விருதினைப் பெற்ற முதலாவது இலங்கையர் மற்றும் ஆசிய இனத்தவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

யாழ்ப்பாண பொது நூலகத்தின் ஆலோசகராகவும் வேறும் பல சமூகநல அமைப்புகளில் பங்கேற்பாளராகவும் தன்னலமற்ற சேவை புரிபவர் நூலகர் என். செல்வராஜா.

நூலாசிரியர் தமது உரையில் கூறியுள்ளமைக்கு அமைய, எதிர்கால இலக்கிய ஆய்வாளர்கள் யாரும் "இருட்டறையில் கருங்குயில்களை" தேடாதவாறு, வரலாற்றுத் தகவல்களை ஆவணப்படுத்தி வரும் நூலகரின் சேவைகளும் சிறப்புப் பணிகளும் மேலோங்க நல்வாழ்த்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலசிங்கம் வசீகரன்

# "படைப்பியல் நோக்கில் பார்வையும் விமர்சனங்களும்" ஒரு பார்வை



மதிப்புரை அல்லது விமர்சனம் என்று வருகின்ற போது குறைகள் மட்டும் சுட்டிக்காட்டி எழுத்தாளனை சோர்வடையவைக்கும் வகையிலும், தனிப்பட்ட வகையில் எழுத்தாளனை தாக்கும் வகையிலும் முதிர்ச்சி யற்ற விமர்சனங்கள் / மதிப்புரைகள் சமூக வலைத் தளங்கள் ஊடாக எழுதப்பட்டுவரும் இந்தக் காலத்தில் அநாதரட்சகன் அவர்கள் தனது பதிப்புரைகளின் ஊடாக காத்திரமான விமர்சனப்பணியினை முன்னெடுத்து வருகிறார் என்றே கூறவேண்டும்.

தனது மதிப்புரைகள் குறித்து முன்னுரையில் "நான் ஒரு வாசகனாக இருந்து, படைப்புக்களின் சாரத்தைத் தேடுவதில் செயற்பட்டுள்ளேன் என எண்ணு கிறேன். இன்னொன்று, படைப்புக்கள் மூலம் படைப் பாளிகள் இனங்காணப்படும் போதுதான், அவர்களின் படைப்பாளுமை கூர்தீட்டப்படுகிறது என்பது எனது நம்பிக்கை, அதனாலே எனது மதிப்புரைகள் எழுத்தாளர் களை ஊக்குவிக்கும்படியும் தொடர்ந்து பயணிக்க வைக்க உதவும்படியும் எழுதியுள்ளேன்" எனக் குறிப்பிடு கிறார்.

இந்தப் புத்தகத்தில் பதினெட்டு படைப்புக் களைப்பற்றிய தனது மதிப்புரைகளை தொகுத்துள்ளார். ஒரு சிறுகதைத்தொகுப்பை அல்லது நாவலை முன் னிறுத்தி அவரது மதிப்புரைகள் எழுதப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு உரையிலும் எழுத்தாளரைப்பற்றிய ஒட்டு மொத்தப் பார்வையாக சில குறிப்புக்களை அவர் கூறியிருப்பார், அந்தக் குறிப்புக்களில் சிலவற்றை இங்கு தொகுத்திருக்கிறேன்,

புலம்பெயர்ந்த தேசத்திலிருந்து படைப்புக் களைத் தந்துகொண்டிருக்கும் அகில் அவர்களின் "கூடுகள் சிதைந்த பொழுது... என்னும் சிறுகதைத் தொகுப்பை பற்றிய உரையில், "அகிலின் கதைகளில் பெண்களின் துயரங்கள், மனவியல் நெருக்கீடுகள், சுமைகள், இயந்திர வாழ்வின் சுழற்சி மனிதத்தைக் கீழ்நிலைக்கு தள்ளிவிடல், கடந்து போன வாழ்க்கை மீதான ஏக்கம், முதுமையின் பரிதவிப்பு, பண்பாட்டுச் சிதைவுகள், சாதிய உணர்வின் நெகிழ்வு எனக் கதையில் உலாவரும் பாத்திரங்களின் மன அடுக்குகளில் அவை தத்தம் குணாதிசயங்களோடு படைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது" எனக் கூறுகிறார்.

மலையகத்தை சேர்ந்த மொழி வரதன் அவர் களின் "கண்ணாடிச் சுவர்களும், சில காகித மனிதர்களும்" சிறுகதைத் தொகுப்பை பற்றிய மதிப்புரையில் மொழி வரதன் "எழுத்து என்பது சமூக மாற்றத்துக்கான ஓர் ஆயுதம் என்பதில் நம்பிக்கை கொண்டு பயணிப்பவர்" என்று குறிப்பிடுகிறார்.

கவிஞர் ஷெல்லிதாசன் அவர்களின் முதலாவது சிறுகதைத் தொகுப்பான "எங்களில் ஒருத்தி" பற்றிய மதிப்புரையில், "நம்மைச்சுற்றி இருக்கும் மனிதர்களின் உள் முரண்கள், சாதியம், மூடநம்பிக்கை, போலித்தனம், சுரண்டல்கள், அடக்குமுறைகள், பெண்கள் மீதான வன்கொடுமைகள் எனப் பல விடயங்களை இவரது கதைகள் உள்ளீடாகக் கொண்டுள்ளன, சக மனிதர்கள் மீதான அக்கறைதான் ஷெல்லிதாசனை இப்படி யெல்லாம் எழுத வைத்துள்ளது" எனக் குறிப்பிடுகின்றார்.

க. நவம் அவர்களின் "பரதேசம் போனவர்கள்" சிறுகதைத் தொகுப்பை பதிப்பாய்வு செய்கையில், "தான் பார்த்து அனுபவித்த, ரசித்த, கோட்டைவிட்ட, ஏமாந்த சமாசாரங்கள் பலவற்றை க. நவம் தனது கதைகளில் பதிவு செய்கிறார் எனத் தெரிவிக்கிறார்.

நம்மைச்சுற்றியிருக்கும் மனிதர்களின் உள் முரண்பாடுகள், போலித்தனங்கள், மேலாதிக்கப் போக்கு, சாதியம், அடக்குமுறைகள் எனப் பல விடயங்களை உள்ளீடாகக் கொண்டவையே க. சின்னராஜனின் எழுத்துக்கள், அந்த வகையில் இவருடைய தண்ணீர் சிறு கதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகளும் க. சின்ன ராஜனின் மனிதநேயத்தை பேசுகின்றவையாக அமைகின்றன.

"கே. ஆர். டேவிட்டின் "பாடுகள்" சிறுகதைத் தொகுப்பில் *1978* முதல் *2002* வரை எழுதப்பட்ட பன்னி ரண்டு கதைகள் இடம்பெற்றுள்ளன. இவரது தனித்துவ மான கதை சொல்லும் பாணியே இவரது அடையாளம்" எனக் குறிப்பிடுகிறார்.

இ. இராஜேஸ்கண்ணன் உடைய எழுத்துக்கள் "காலம் கொன்ற நினைவுகளை மீட்கும் எழுத்து என அவரது "கிராமத்து மனிதர்கள்" கதைத் தொகுப்பின் மதிப்புரையில் குறிப்பிடுகிறார், மேலும் "வாசகனிடத்தில் நேரடியாக உரையாடுவது போன்ற நெருக்கத்தை உணர வைப்பது அவரது எழுத்தின் பலம்" எனக் குறிப்பிடு கிறார்.

*1962*இல் எழுதத்தொடங்கிய ஈழத்தின் மூத்த படைப்பாளியான மு. சிவலிங்கம் அவர்களுடைய "ஒரு விதை நெல்" சிறுகதைத் தொகுப்பை பற்றிய மதிப்புரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் "இந்தக் கதைகளில் வலிகளைச் சுமந்து திரிகின்ற உழைக்கும் மக்களின் ஆன்மாவை தரிசிக்க முடிகிறது" என்கிறார்.

சிவ. ஆரூரனின் "பூமாஞ்சோலை" சிறுகதைத் தொகுப்பை பற்றிய உரையில் சிவ ஆரூரனைப் பற்றி சிறைச் சுவர்களுக்கும் அப்பால் தெரிகின்ற உலகை, மனிதர்களை, சமூகத்தை, அவற்றில் எழுகின்ற பிரச்சினைகளையெல்லாம் தன் மனத்தில் பதித்து அவற்றை எமக்கு நாவல்களாகவும் சிறுகதைகளாகவும் தந்து கொண்டிருப்பவர் எனக் குறிப்பிடுகிறார்.

மூதூர் மொகமட் ராபியின் "இலுப்பம் பூக்கள்" பற்றிய விமர்சனக்குறிப்பில் "எழுத்தாளருக்கு எளிதாக கைகூடி வருகின்ற ஆசிரியத் தொழில், பாடசாலை, நிர்வாகம், அதிபர்களின் ஊழல், மோசடிகள், மேலதிகாரிகளது மேலாண்மைப் போக்குகள், அலைக்கழிப்புகள், மனித உறவுகளில் எழுகின்ற சிக்கல்கள், முரண்கள் என்ற யதார்த்தங்களின் அனுபவ வெளிப்பாடுகளை கதைகளில் தரிசிக்க முடிகிறது" எனக் கூறுகிறார்.

மலைமகளின் "புதிய கதைகள்" தொகுப்பின் மதிப்புரையில் மலைமகளைப்பற்றி "பெண் போராளியாக நின்று தன்னைப் பாதித்த களமுனை அனுபவங்களுக்கு ஒரு இலக்கிய அந்தஸ்த்தினை வழங்கி, வீறார்ந்த போர்க்கள நிலைமைகளை காட்சிப்படுத்தும் இளம் படைப்பாளியாக மட்டுமன்றி, மிக நுட்பமான மனவியலாளராக. தன்நல மறுப்புலவராக, வீரமிக்க போராளியாக, விசுவாசமான பெண்ணியலாளராக, அனைத்துக்கும் மேலாக ஒரு மானிட நேசிப்பாளராக தன்னை இத்தொகுப்பில் இனம்காட்டியுள்ளார்" எனக் குறிப்பிடுகிறார்.

1975ஆம் ஆண்டு வெளிவந்த நெல்லைக் க. பேரனின் "ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள்" என்ற தொகுப்பை பற்றிய உரையில் "இவரது கதைகளில் யதார்த்தம் என்பது ஒரு இழையாகவும், கிராமிய வாழ்வின் நெருக்கடிகள் இன்னொரு இலையாகவும் ஓடுகிறது" என்கிறார்.

"பணி நிலையில் மருத்துவராக இருந்த போதிலும் இலக்கியம், கலைகள், கலாசாரம் சமூகம் ஆகிய தளங்களில் மிகுந்த பிரக்ஞையுடன் செயற்பட்டு வருபவர்" என ச. முருகானந்தன் குறித்து அவரது "கோடை மழை" சிறுகதைத் தொகுப்பைப் பற்றிய தனது மதிப்புரையில் குறிப்பிடுகிறார்.

கே. டானியலின் "கானல்" நாவல் பற்றிய விமர்சன உரையில் ஒடுக்கப்பட்ட மக்களின் வலிகளை எழுத்தில் வடித்த இலக்கியவாதி, முற்போக்கு மக்கள் எழுத்தாளன் என பன்முக ஆளுமைக்குரியவர் டானியல் எனக் கூறுகிறார்.

"மனித மனங்களைப் பகுப்பாய்வுசெய்து, அதன் பரிமாணங்களைத் தன் படைப்புக்களில் வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றவர் கோகிலா மகேந்திரன்" என அவரது "சந்தனச் சிதறல்கள்" நாவலை முன்வைத்து எழுகியுள்ள உரையில் குறிப்பிடுகிறார்.

தான் படித்துச் சுவைத்த சங்கத் தமிழிலக்கியச் செய்தி பிறரும் வாசித்து அனுபவிக்க வேண்டும் என்ற ஆவலுடன் "சோபனத்தில் சொப்ன சுந்தரி" நாவலை எஸ். புஷ்பராஜன் எழுதியுள்ளார் என அந்த நாவல் குறித்த தனது மதிப்புரையில் குறிப்பிடுகிறார்.

1977ல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்த நந்தியின் "தங்கச்சியம்மா" பற்றிய உரையில், நந்தியிடமுள்ள மனிதாபிமானமே இந்த நாவல் முழுவதும் இழையோடுகிறது என்கிறார்.

அறுபதுகளில் இருந்து இன்று வரை எழுதிக் கொண்டிருக்கும் ஐ. சாந்தனின் "சித்தன் சரிதம்" நாவல் பற்றிய விமர்சன உரையில் எந்த இடத்திலும் வார்த்தைக்களைக் கொட்டிக் குவித்து வாசகனுக்கு சலிப்பை ஏற்படுத்தாது எழுதுவதும், அதிகம் சொல்லாமல் விட்டிருப்பது இவரது எழுத்தின் பண்பு எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறாக படைப்புக்களை பற்றிய தனது மதிப்புரைகளில் படைப்பாளிகளைப்பற்றிய ஒரு படிமத்தை கண்டறிந்து குறிப்பிடுவது இவரது மதிப்புரைகளில் உள்ள சிறப்பம்சம். அநாதரட்சகனின் இந்த "படைப்பியல் நோக்கில் பார்வையும் விமர்சனங்களும்" என்னும் இந்த விமர்சனத் தொகுப்பு படைப்பாளிகளுக்கு தம்மைப்பற்றிய விம்பமொன்றை காணும் வாய்ப்பையும் வாசகனுக்கு ஒவ்வொரு படைப்பையும் வாசிக்க தூண்டும் வகையிலும் அமைந்துள்ளது சிறப்பு.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்குவல்லை கமாலின் சிறுகதைப் பிரபஞ்சம் அதிகாரம், அடையாளம், மற்றும் அறவியலின் நவீன வாசிப்பு




திக்குவல்லை கமால் (முகம்மது ஜமால்தீன் முகம்மது கமால் 1950) எனக்கு பிடித்தமான எழுத்தாளர். ஒரே வேகத்தோடு தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருப்பவர். வாழ்வியலின் அச்சொட்டான படப்பிடிப்பு அவரது படைப்புக்கள். குறிப்பாக அவரது சிறுகதைகள் நிஜவாழ்வின் குறும்படங்கள். 2025 ஐப்பசி இல் ஜீவநதி (கலையகம், அல்வாய்) சாதனை நூல் வரிசையில் (ஒரு மாதத்தில் 31 நூல்கள்) வெளிக்கொணர்ந்திருக்கும் சிறுகதைத் தொகுப்பு "மாடி வீடும் ஒரு தென்னை மரமும்". க.பரணீதரன் நேர்த்தியாக வடிமைத்திருக்கும் இப்பிரதியின் பக்கங்கள் 68. இத்தொகுப்பில் 12 சிறுகதைகள் இருக்கின்றன. உயிர்பான இந்த பன்னிரண்டு உரைப்படைபுகளும் மிக விரிவாக விமர்சன பகுப்பாய்வுக்கு உட்படத்தக்கது. அதனை இன்னொரு ஆய்வுக்கு வைத்துவிட்டு, ஒரு சுருக்க நவீன வாசிப்பு இங்கு முன்வைக்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழ்ச் சிறுகதை இலக்கியப் பரப்பில், திக்குவல்லை கமாலின் படைப்புகள், உள்ளூர் வாழ்வின் யதார்த்தங்களையும், இஸ்லாமியப் பண்பாட்டுக் குறியீடுகளையும் சுமந்து நிற்கும் தனித்துவமான இலக்கிய வெளியைக் கட்டமைக்கின்றன. "மாடி வீடும் ஒரு தென்னை மரமும்" என்ற 12 கதைகளின் தொகுப்பாய்வு, இந்த இலக்கிய வெளியில் புதைந்துள்ள அதிகாரம், வர்க்கம், இன அடையாளம், மற்றும் தனிமனித அறவியல் ஆகியவற்றின் சிக்கலான அடுக்குகளை வெளிக்கொண்டுவரும் நவீன தேடலாக அமைகிறது.

திக்குவல்லை கமாலின் சிறுகதைகள், இலங்கை முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியலைத் துல்லியமாகப் பதிவு செய்தாலும், அவற்றின் ஆழத்தில் அதிகாரம் (Power), சமூகக் கட்டமைப்பு (Social Structure), வர்க்கம் (Class), மற்றும் இன அடையாளம் (Ethnic Identity) ஆகிய நவீன கருத்தாக்கங்கள் பொதிந்துள்ளன.

1. நவீன ஆய்வுக் கண்ணோட்டத்தின் அவசியம்

கமாலின் படைப்புகளை வெறும் சமூக யதார்த்தப் பதிவுகளாகவோ (Social Realism) அல்லது வட்டார மொழிப் புனைவுகளாகவோ மட்டும் சுருக்கிவிட முடியாது. இந்தக் கதைகளுக்குள், பின்-கட்டமைப்புவாதம் (Post-Structuralism), பின்-காலனிய ஆய்வுகள் (Postcolonial Studies), மற்றும் பெண்ணியத் திறனாய்வு (Feminist Criticism) ஆகியவற்றின் துணைகொண்டு அணுக வேண்டிய பல குறியீட்டு மற்றும் கருத்தியல் முரண்பாடுகள் பொதிந்துள்ளன.

அதிகாரத்தின் மொழியியல் சிதைவு: அன்வர் ஹாஜியாரின் மனிதாபிமானம், ஃபாத்திமாவின் அதிகாரப் பெருமையையும், அப்துல்லா காக்காவின் பொறாமையையும் எப்படிச் சிதைக்கிறது என்பதைப் பகுப்பாய்வு செய்வது, அதிகாரப் பிரயோகத்தில் அறவியல் எப்படி மொழியியல் ரீதியாக முரண்பாட்டை ஏற்படுத்துகிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

அடையாளத்தின் அரசியல் சுமை: "முகவரிகள்" கதையில், யாழ்ப்பாணம் என்ற புவியியல் முகவரியானது, யுத்தத்தின் காரணமாகச் சுமத்தப்பட்ட "சந்தேகத்திற்குரிய பிரஜை" என்ற அரசியல் அடையாளமாக உருவெடுக்கிறது. இது, காலனியத்திற்குப் பிந்தைய தேசிய அரசுக் கட்டமைப்பில், இன அடையாளம் எவ்வாறு பொதுச் சேவையிலும் அன்றாட வாழ்விலும் பாகுபாட்டை ஏற்படுத்துகிறது என்பதை ஆராய்கிறது.

2. துயரம், மீள்திறன் மற்றும் அறவியல் அச்சு

கமாலின் மையப் பாத்திரங்கள், சமூகத்தின் ஒட்டுமொத்த அழுத்தங்களை (Gossip, Class Pride, Ethnic Suspicion) எதிர்த்து, தனிப்பட்ட அறவியலையும், உளவியல் சமநிலையையும் எவ்வாறு நிலைநாட்டுகின்றன என்பதை இந்தக் கதைகள் ஆய்வு செய்கின்றன.

கலங்காத குளம்: லெப்பும்மா மற்றும் நிஜாம் போன்ற பாத்திரங்கள், சமூகத்தின் வதந்தி அலைகள் மற்றும் துயரத்தின் அதிர்ச்சிகள் வந்தபோதும், தங்கள் மன உறுதி (Resilience) மற்றும் விதி மீதான நம்பிக்கை (Fate/ Naseeb) ஆகியவற்றின் மூலம் வாழ்க்கையின் போக்கை மாற்றியமைக்கிறார்கள். அவர்களின் அமைதியான செயல்பாடு, சமூகத்தின் ஆரவாரமான தீர்ப்புகளை வெல்லும் ஒரு மௌனப் புரட்சியின் குறியீடாக அமைகிறது.

பெண்களின் உளவியல் விடுதலை: சுலைஹா "லெப்பும்மா" வாகப் பரிணாமம் அடைவது, திருமண வாழ்க்கையில் நோய் காரணமாகப் புறக்கணிக்கப்படுவோம் என அஞ்சிய நிரோஷா நிஜாமின் அன்பினால் விடுதலை பெறுவது ஆகியவை, இஸ்லாமியச் சமூக அமைப்பிற்குள்ளேயே பெண்கள் தங்கள் சுய அதிகாரத்தையும் (Agency) உளவியல் சமநிலையையும் அடையும் வழிகளைச் சுட்டிக்காட்டுகின்றன.

3. உள்ளூர் வெளியின் உலகளாவிய எதிரொலி

திக்குவல்லை கமாலின் இந்தச் சிறுகதைத் தொகுப்பு மீதான விமர்சனபூர்வமான ஆய்வு, வெறும் உள்ளூர் வாழ்வின் சாளரமாக இல்லாமல், இன முரண்பாடு, வர்க்க ஏற்றத்தாழ்வு, மற்றும் அறவியல் சவால்கள் ஆகியவற்றைக் கையாளும் ஓர் உலகளாவிய மனித அனுபவத்தின் ஆவணமாகும். இந்த சிறு அறிமுகம், கமாலின் புனைவுலகில் உண்மையும் புனைவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Fact and Fiction), அதிகாரமும் மனிதாபிமானமும் (Power and Humanity) சந்திக்கும் நுட்பமான புள்ளிகளைப் புரிந்து கொள்ள வாசகனைத் தூண்டும் ஒரு விமர்சனப்பூர்வத் தேடலுக்கான தளத்தை அமைக்கிறது.

திக்குவல்லை கமாலின் “மாடி வீடும் ஒரு தென்னை மரமும்” என்ற தொகுப்பு, இலங்கை முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியலைப் பின்னணியாகக் கொண்டிருந்தாலும், அவை மனித உறவுகள், சமூக நீதி, மற்றும் மனோபலம் ஆகிய உலகளாவிய கருப்பொருட்களைத் தொட்டுச் செல்கின்றன. இந்தத் தொகுப்பு, கமால் அவர்கள் ஒரு சமூகப் பதிவாளராகவும், மனித மனதின் உளவியல் ஆய்வாளராகவும் திகழ்கிறார் என்பதை நிலை நிறுத்துகிறது.

கமாலின் இச்சிறுகதைகளைத் தொகுத்துப் பார்க்கும்போது, அவை ஒரு பொதுவான மெய்யியலை முன்வைக்கின்றன: சமூகத்தில் பொறாமை, வதந்தி, வர்க்கம், இனச்சந்தேகம் போன்ற “கற்கள்” வீசப்பட்டாலும், அன்பு, நம்பிக்கை, மற்றும் மன உறுதி என்ற அஸ்திவாரத்தின் மீது கட்டமைக்கப்படும் வாழ்க்கை, “கலங்காத குளம்” போல் அமைதியாகவும், நீடித்தும், “ஒரு வாழ்வு தொடர்கிறது...” போல் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும். திக்குவல்லை கமால், சவால்கள் நிறைந்த ஒரு சமூகத்தின் நுண்ணிய வாழ்வியல் முகவரிகளை இந்தப் புனைவுகள் மூலம் ஆழமாகவும், அறவியல் ரீதியாகவும் பதிவுசெய்துள்ளார் என்பதில் ஐயமில்லை.

# ஈழத்து இலக்கிய வரலாற்றில் முதல் விவாத நூல் “அவலை நினைத்துக் கொண்டு”

அர்ச்சுனன்



ஜீவநதி பல தொடர் வரிசை நூல்களை வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில் “அவலை நினைத்துக் கொண்டு” என்னும் மல்லிகை சஞ்சிகையில் 1984 ஆகஸ்ட் தொடக்கம் செப்ரெம்பர் 1985 வரை இடம் பெற்ற காரை செ.சுந்தரம்பிள்ளை, அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா, த. கலாமணி ஆகியோருக்கு இடைப்பட்ட 7 விவாதங்கள் கலாமணி பரணீதரனால் தொகுக்கப்பட்டுள்ளது. “இசை நாடகங்களும் சலுகை மறுக்கப்பட்ட மக்களும்” என்னும் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களது ஆரம்பக்கட்டுரையில் பல இசை நாடகக் கலைஞர்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு ஒரு சிலரை முக்கியத்துவப்படுத்தி எழுதப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டி எஸ் தம்பிஜயா அவர்களால் “ஈழத்து இசைத் தமிழ் நாடக வளர்ச்சி பற்றிய சில பயனுள்ள குறிப்புகள்“ என்னும் கட்டுரை எழுதப்பட்டது. அக்கட்டுரையில் மேலும் பல கலைஞர்கள் பற்றிய விவரங்களைத் தந்துள்ளதுடன், தனது நாடகப் பயணம் பற்றியும் எஸ்.தம்பிஜயா குறிப்பிட்டுள்ளார். அதற்கு நையாண்டித்தனமாக “இசை நாடக வளர்ச்சிக்கு வடமராட்சியின் பங்களிப்புப் பற்றிய மேலும் சில தகவல்கள்” என்னும் பதிலை காரை செ.சுந்தரம்பிள்ளை எழுதினார். அதில் தம்பிஜயா அவர்களின் இசை நாடகப் பணி ஏளனம் செய்யப்பட்டுள்ளதுடன், அவரை சாதாரண ஒரு கலைஞராக விழித்து அவருடைய நாடகப்பணி இழிவு படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இசை நாடக வளர்ச்சிக்கு காரணமான பல தகவல்களை உள்ளடக்கிய த. கலாமணி அவர்களின் 4 கட்டுரைகள் “அவலை நினைத்துக் கொண்டு” என்னும் தலைப்பில் தொடராக மல்லிகையின் 4 இதழ்களில் வெளியானது. அதில் எஸ்.தம்பிஜயாவின் நாடகப்பணி தொடக்கம், வடமராட்சியின் பல்வேறு கலைஞர்களது நாடகப்பணி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆதாரபூர்வமான தகவல்களை எடுத்துக்காட்டி த.கலாமணி தன் கட்டுரைகளை எழுதியுள்ளார். மூவரின் விவாதங்களும் இசை நாடகத்துடன் சம்பந்தப்பட்டவையாக அமைந்தமையால் இசை நாடகம் சம்பந்தப்பட்ட பல தகவல்கள் வெளி வந்தன. அண்ணாவியார் எஸஸ்.தம்பிஜயா அவர்கள் 2000 இ2கு மேற்பட்ட மேடைகளை அலகரித்தவர். அவரது பணிகள் சரியான வகையில் பேணும் விதமாக “ஈழத்து அசை நாடக வளர்ச்சியில் அண்ணாவியார் எஸ்.தம்பிஜயாவின் பணிகள்” என்னும் நூல் திருமதி குயின் ஜெசிலி கலாமணி அவர்களால் அண்மையில் வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவ்விவாதம் அக்காலத்தில் மிகுந்த சுவாரஸ்யம் மிக்கதாக வாசகர்களுக்கு அமைந்தது. ஈழத்து இசை நாடக வரலாற்றின் பல்வேறு கலைஞர்கள் பற்றி அறிவதற்கு இவ்விவாதம் மிக பயனுடையதாக அமைந்துள்ளதுடன் மல்லிகையில் இது தொடர்பான பல கடிதங்களும் கூட பிரசுரமானது. அக்காலத்தில் இடம் பெற்ற இவ்விவாதம் இசை நாடகம், இசை நாடகக் கலைஞர்கள் தொடர்பான தொடர்ச்சியான ஆய்வுக்கு ஓர் ஆரம்ப புள்ளியாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. காலம் கடந்தும் இந்த நூல் இன்று வெளியாகி இருப்பது ஆவணப்படுத்தலின் முக்கியத்துவம் கருதி என பரணீதரன் குறிப்பிட்டு இருப்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# ஈழ மண்ணில் இந்திய இராணுவம்: கோரமிக்க ஆக்கிரமிப்பு நாட்களின் வரலாற்றை பதிவிடும் படைப்புகள் !



ஊடகம் என்பது மக்கள் ஜனநாயகத்தின் முக்கிய தூண். மக்களுக்கும், அரசாங்கத்துக்கும் உள்ள இடைவேளையில் கண்ணாடி போல நின்று அனைத்து செய்திகளையும் உலகிற்குச் சொல்லும் மிகப்பெரிய சாதனம் இந்த ஊடகங்களே.

இந்தியா என்கிற மிகப்பெரிய ஜனநாயக நாடு, உலகின் நான்காம் இராணுவத்தை கொண்ட நாடு, மக்கள் தொகையில் இரண்டாம் இடம் கொண்டுள்ள நாடு. அத்தகைய நாட்டில் ஊடகம் எத்தகைய செயல்பாடுகள் செய்ய வேண்டுமோ, அதற்கு சற்றும் தொடர்பில்லாத செயல்பாடுகளை இந்தியா ஈழத்தில் செய்தது.

அதற்கு சான்றாக நூலகர் என். செல்வராஜா அவர்களின் "ஈழ மண்ணில் இந்திய இராணுவம் நூல் வழிப் பதிவுகள்" நூல் வெளியிடப்பட்டுள்ளது. ஈழத்தில் இந்திய இராணுவ ஆதிக்க காலத்தைப் பிரதிபலித்து வந்து நூல்கள் பற்றிய விரிவான விளக்கத்தை தருவதுடன், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களையும் அறிந்து கொள்ள இந்த நூல் உதவுகிறது.

ஈழத்தில் ஊடகம் என்பது தமிழரின் அரசியல் போராட்ட நிலைப்பாட்டு உண்மைகளை முடக்கும் முகமானதாகவும், உண்மை நிலைக்கு மாறான பரப்புரைகளை நிகழ்த்துவோருக்கு சுதந்திரமானதாகவுமே நீண்ட காலமாக இருக்கின்றது. அத்துடன் உண்மைச் செய்திகளைத் திரட்டி வெளியிட மறுப்பதை அல்லது தடுப்பதை ஊடக முடக்கம் எனலாம். ஊடக முடக்கம் செய்யப்படும் போது ஊடகச் சுதந்திரமும் அந்நாட்டில் அற்றுப் போய் விடுகின்றது என்பதும் உண்மையே.

எனவே ஊடக சுதந்திரத்தை மீறிய இந்தியாவை தாய் நாடு என்றும், இலங்கையினை சேய் நாடு என்றும் அழைத்து வந்த காலங்கள் இந்தியப் படையினரின் இப்படிப்பட்ட அநாகரியமான செயலினால், இந்திய அரசின் சுயநல நோக்கத்திற்காக ஈழ மக்களினை பல துன்பியலுக்கு உட்படுத்தப்பட்டதனை எம் தமிழ் இனத்தின் சிந்தனையில் இருந்து ஒரு போதும் அழித்து விட முடியாது என்பதே நிதர்சன உண்மையாகும். இதனையே இந்த நூலும் சாட்சியப் படுத்தியுள்ளது.

இந்த நூலை எழுதியவர், நூலகவியல் துறையில் நல்ல அனுபவத்தைப் பெற்றுக் கொண்ட திரு.என்.செல்வராஜா அவர்கள் அதன் மூலம் தமிழ்ச் சமுதாயத்திற்குக் கல்வி தொடர்பாக அளப்பரிய சேவை ஆற்றி வருகின்றார்.

ஈழத்தின் நூல்களை ஆவணப்படுத்துவதில் முதன்நிலைச் செயற்பாட்டாளர்களில் ஒருவராக விளங்குபவர் நூலகர் என் செல்வராஜா. காலவோட்டத்தில் காணாமல் போகக்கூடிய பல நூல்களை தனது நூல் தேட்டம் வழி ஆவணப்படுத்தி வருகின்ற அருமையான சமூகப் பணியை பல்லாண்டுகளாக இந்த நூலாசிரியர் மேற்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. செல்வராஜா அவர்கள் தனது விருப்பத்திற்குரிய துறையாக நூலகத்துறையைத் தேர்ந்தவர். அத்துறையில் அவர்கொண்ட பற்றும் உறுதியுமே அவரை இன்றளவும் உலகத் தமிழர்களிடையே பிரசித்தி பெற்ற ஒரேயொரு ஈழத்தமிழ் நூலகவியலாளராக எம்மிடையே நிலைநிறுத்தியுள்ளது. தனது நூலகத்துறை அனுபவங்களையும் ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்டு தமிழ் இனத்தின் சுவடுகளாக நின்று நிலைக்கப் போகும் நூல்தேட்டம் என்ற பாரிய ஆவணப் பணியில் தன் சிந்தனைகளைக் குவித்துள்ளார்.

மேலும் எந்தவித அரசியல் கண்ணோட்டமுமின்றி நூலகத் துறையை வளர்த்துவருவதினால் தனிமதிப்போடு மக்கள் இவரை நோக்குகின்றனர். எந்த கடினமான நிலையிலும் தனது அடிப்படைக் கொள்கையிலிருந்து தவறாது செயற்படுபவர் இவர் என்ற எண்ணத்தைத் தன் செயல்களினூடாக மற்றவர்களுக்கு உணர்த்திவருபவர்.

ஈழத்தவர்களின் நூல்களை ஆவணப்படுத்த வேண்டும் என்ற அக்கறைகொண்ட இவர் நூல் தோட்டம் என்ற பெயரில் ஒரு பெரும்பணியை செய்து வருகிறார். அரசியல், சமயம், இலக்கியம், கலை, வரலாறு மற்றும் பல்வேறுதுறைகளில் எழுதப்பட்ட ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களின் சேர்க்கையே இந்த நூல் தேட்டமாகும். நீண்ட காலமாக ஒரு தனிமனிதனாக இந்த அளப்பரிய பணியை செய்து வருகிறார் என்பது பாராட்டத்தக்கது.

**இந்திய அமைதி படையின் ஊடகப் போர்:**

அமைதியை நிலைநாட்ட வருகின்றோம் என்ற போர்வையில் ஈழம் வந்த இந்திய இராணுவம் தமிழ் மக்களை கொன்று குவித்து கொடுமைப்படுத்தியது. அக்காலகட்டத்து பதிவுகளை எம்மவர்கள் பலர் நூல்களாக எழுதியிருக்கின்றார்கள். அவற்றை பற்றிய போதிய தகவல் போர்க்கால வாழ்வு காரணமாக கண்டறியப்படாமல் இருக்கின்றது. இதனை வெளிப்படுத்தவே இந்த நூல் தற்போது வெளியாகி உள்ளது.

ஜீவநதியின் *483* ஆவது வெளியீடாக ஈழ மண்ணில் இந்திய இராணுவம் நூல்வழிப் பதிவுகள் ஆறு முதன்மை கட்டுரைகளை தாங்கி வெளிவந்துள்ளது. முதல் அத்தியாயத்தில் ஆக்கிரமிப்பின் முன்னோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய குறிப்புகள் உள்ளன.

அத்தியாயம் இரண்டில் மெல்லெனச் சூழும் கருமேகங்கள், அடுத்த அத்தியாயத்தில் படைப்பிலக்கிய வழிப் பதிவுகள், நாவல்களில் இந்திய அமைதிப்படை, இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கால மரணங்களின் பதிவுகள் என ஆறு பகுதிகளாக அமைதிப்படையின் பிரசன்னம் பற்றிய ஆய்வுகளும் பின்னூட்டங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

1987 அக்டோபர் 10ஆம் அதிகாலை வேளை, தமிழர் பூமியை ஆக்கிரமித்திருந்த இந்திய இராணுவம், தமிழர்களின் குரலாக வெளிவந்து கொண்டிருந்த ஊடகங்கள் மீதான தனது எதேச்சாதிகார நடவடிக்கையை மேற்கொண்ட கரி நாளாகும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 ஜூலை 29இல் கைச்சானதின் பின்னர், ஈழத்தில் ஊடகத்துறையின் சுதந்திரத்தை முடக்கும் வகையில், நிதர்சனம், ஈழமுரசு, முரசொலி நிலையங்களின் தகர்ப்பு அழிப்பு நிகழ்ந்தது.

அத்துடன் ஈழமுரசு, முரசொலி, நிதர்சனம் போன்ற ஊடகங்களை தகர்த்தொழித்து தமிழர்கள் மீதான போர் பற்றிய செய்திகள் வெளியே வராமல் பார்த்துக் கொண்டது இந்திய அமைதிப் படை.

#### ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை:

ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற நூல் ஈழத்தில் போர்கள வரலாற்றுப் பதிவாகும். இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள், 1987 ஒக்ரோபர் முதல் 1990 பெப்ரவரி வரை இலங்கையிலிருந்த அமைதிப்படை பற்றி வாத விவாதங்கள் நிறைய உண்டு. வரலாற்றின் தவிர்க்க முடியாத குருதிக் குலைவுகளில் ஒன்றாக அது அமைந்து விட்டது.

பல தசாப்தத்தின் பின் மீளத் திரும்பிப் பார்க்கும் பொழுது இந்த நாடகத்தில் (இலங்கையின் இனக் குழும நெருக்கடி) இந்தியாவுக்கு ஒரு முக்கியமான வகிபாகம் உண்டு என்பது புறக்கணிக்கப்படக் கூடாத உண்மை என்பது புலனாக்கப்பட்டுள்ளது. இதை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும் என்கிறார் பேராசிரியர் சிவத்தம்பி.

1987களில் ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த வேளை இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டு 62 நாட்கள் சிறையில் இருந்த போது பெற்ற அனுபவம், அங்கு கண்டு கேட்டுப் பெற்றவைகளையே ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறையில் எழுதியிருக்கிறார்.

அமைதி காப்பதற்காகவும், ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பதற்காக வந்த இந்திய இராணுவம் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறையை அமைத்தது. இவ் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு இவ் சிறையில் அடைக்கப்பட்ட ஒரு பத்திரியாளரின் பதிப்பாக இது அமையப் பெற்றுள்ளது. இச்சிறையில் விடுதலைப் புலிகள் என சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கானவர்ளுடன், ஈழமுரசு, முரசொலி பத்திரிகையின் ஆசிரியரும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தனர்.

இந்திய அமைதிப் படைகளால் சிறைவைக்கப் பட்டிருந்த போது, எழுதிய இந்த சிறைக்குறிப்புகள், தமிழ்நாட்டில் ஜூனியர் விகடன் இதழில் "ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை" என்ற தலைப்பில் தொடராக வெளியாகி பெரும் பரபரப்பானது என்பதும் குறிப்பிடத்தக்கது. அமைதி காப்பதற்காகவும் , ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பதற்காக வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறிய பின் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை அமைந்தது. இவ் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு இச்சிறையில் அடைக்கப்பட்ட ஒரு பத்திரிகையாளரின் பதிவாக ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை எனும் நூல் அமையப்பெற்றுள்ளது.

#### அகிலனனின் மரணம் வாழ்வின் முடிவல்ல:

அமைதி காப்பதற்காகவும், ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பதற்காக வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறிய கோரமான காலத்தில் பலியான பல ஆளுமைகளின் திறமைசாலிகளில் ஒருவரான அகிலன் திருச்செல்வம். அவரது கவிதைகள் அன்றைய காலகட்டத்தில் மட்டுமல்ல எக்காலத்திலும் தமிழரின் போரின் வலியை சுமந்த வரிகளாய் வரலாற்றின் பக்கங்களில் மையங்கொள்கிறது. 1989 மே பத்தாம் நாள் தனது பத்தொன்பது வயதினில் ஈழ மண்ணில் அகிலன் விதையாக்கப்பட்ட நாளாகும்.

எண்பதுகளின் பிற்பகுதியில் எழுச்சிமிகு கவிதைகளை படைத்த ஈழத்தின் இளம் கவிஞர்களில் அகிலன் திருச்செல்வம் குறிப்பிடத்தக்கவர். அகிலன் திருச்செல்வம் கவிதைகள், போரின் வலியை சுமந்த வரிகளாய் பரிணமத்தன. எம் வாழ்வின் நிதர்சனத்தை மெய்ப்பிக்கும் கவிதைகளாக அவை இருக்கின்றன.

அகிலனின் முதலாவது ஆண்டு நினைவாக ஈழத்தில் வெளிவந்த "மரணம் வாழ்வின் முடிவல்ல" என்ற கவிதைத் தொகுப்பானது எம் வாழ்வின் நிதர்சனத்தை மெய்ப்பிக்கும் கவிதைகளாகும். பிணந் தின்னும் துப்பாக்கியைவிட வலிமை வாய்ந்ததாக எழுதுகோலை இயக்கியவன் அகிலன்.

1990 இல் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட "மரணம் வாழ்வின் முடிவல்ல" கவிதை தொகுப்பில் அடங்கிய அனைத்தும் எரிதழல் கவிதைகளாகும். படிப்பவர் நெஞ்சில் உணர்ச்சிப் புயலை எழுப்புகின்றன. ஈழத்தமிழரின் மானுட வாழ்வை தனித்து நின்று பார்க்காமல், போராடும் மக்கள் மத்தியில் நின்று, அவர்களின் துக்கங்களில் பங்கேற்று, அவர்களின் உறுதியும் தளராத நம்பிக்கை தரும் கவிதைகளாக ஒவ்வொரு வரியிலும் ஒளிர்கிறது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்மடம் அ.அஜந்தன்

# நா.யோகேந்திரநாதனின் வாய்மொழி வரலாறு சொல்லும் வாழ்வியல் வரலாறு



வாய்மொழி இலக்கியம் என்பது மிகவும் தொன்மையான இலக்கிய வடிவமாகும். வாய்மொழி வரலாறு எழுத்து உருவாகும் முன் இருந்த காலக் கலை என்பர். இவை கலாசாரச் சொத்துக்களைப் பாதுகாக்கும் வழிமுறையைக் கொண்டிருந்தது. காவியங்கள், புராணக் கதைகள், நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள், சாமிகள் பற்றிய வரலாறுகள் என்பவற்றை மக்களிடையே பரப்பும் ஒரு பணியாக அமைந்திருந்தது. வாய்மொழி வரலாறு என்பது வாய்மொழியினூடாகவும் நினைவுகளினூடாகவும் நபர்கள், சமூகங்கள், நிகழ்வுகள், விடயங்கள் பற்றிய வரலாற்றுத் தகவல்களைத் திரட்டுதல், பாதுகாத்தல், பகிர்தல், விளங்கிக்கொள்ளல் என்ற செயல் வடிவங்களினூடக ஆவணப்படுத்தலாகும். ஆரம்பத்தில் இவை எழுத்துருவில் இருக்கவில்லை அண்மைக் காலங்களில் அவை எழுத்துருப்பெற்றுள்ளது. இவ்வாறு எழுத்துருப் பெற்ற பெருமை ஜீவநதியையும் சாரும்.

நா.யோகேந்திரநாதனின் வாய்மொழி வரலாறு என்பது தனியே சுயசரிதம் அல்லது தன்னறம் சார்ந்த வரலாறாக அன்றி தான் வாழ்ந்த கரணவாய் என்ற கிரமத்தின் சமூகக் கட்டமைப்பு, வர்க்கவேறுபாடுகளும் அவற்றின் சமூகப் பொறுப்புக்களும், அடிமைத்தனங்கள், சடங்குகள், வர்க்க வேறுபாட்டை வகுத்த தொழில் முறைகள், வாழ்வாதார வளங்கள் என்பவற்றை இங்கு பதிவுசெய்கின்றது. காலப்போக்கில் அவற்றில் நிகழந்த சமூக மாற்றங்களும் நாகரீக வளர்ச்சியும் எப்படிப் புதிய சமூகத்தைக் கட்டியெழுப்புகின்றன என்பதையும் பதிவு செய்கின்றது. தனது இலக்கியப் பயணத்தில் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பார்த்த சாரதியின் பொன்விலங்கு ஆகிய நூல்கள் ஆற்றிய பங்கையும் பகிர்ந்துள்ளார்.

கரணவாயில் அமைந்திருந்த நாட்சார வீடுகளின் கட்டமைப்பும், வீட்டின் ஒவ்வொரு பகுதிக்குமான காரணப்பெயர்களும், மரங்கள், செடிகொடிகள் நாட்ட வேண்டிய இடங்களும் அவற்றின் நன்மைகளும் என்றெல்லாம் அந்தக் கிராமத்து மக்களின் வாழ்வியல் வரலாற்றினை வாய்மொழியாகப் பதிவிட்டுள்ளார். அன்றைய காலத்தில் இருந்து இன்றுவரை சில இடங்களில் அரங்கேறும் "காத்தவராயன்" கூத்தைப் பற்றிய அனுபவத்தில் மக்களும் அந்தக் கலைகளும் உணர்வு பூர்வமாக இணைந்திருந்ததை விளக்குகின்றது. கலை என்பது அவர்களின் வாழ்வில் ஒரு அங்கமாகவே விளங்கியிருந்தது. ஆலயத் திருவிழாக்கள், உணவுப் பழக்கங்கள், கல்வி முறைகள், விவசாய முறைகள், நாடகங்கள், அரசியல் ஈடுபாடு, தொழில் அனுபவங்கள், மாநாடும் போராட்டங்களும், இந்தியச் சினிமா மற்றும் சஞ்சிகைகளின் மீதான கட்டுப்பாடுகளும் ஈழத்துச் சஞ்சிகைகளின் எழுச்சியும் போன்ற தரவுகளை அடுத்த சந்ததிக்குப் பகிர்கின்றது.

நா.யோகேந்திரநாதனின் இலக்கியப் பிரவேசம் ஒரு காலத்தின் கட்டாயமாகிவிடுகின்றது. அவரது நாடகத் திறமையும் இலக்கிய ஆர்வமும் கல்வி அறிவும் ஈழத்தின் இலக்கியப் பரப்புக்கு பெரும் சொத்தாக விளங்கியுள்ளது. போராட்டங்கள்வாயிலாக உரிமைகளை வென்றெடுப்பதில் கலை இலக்கியத்தின் பங்கினை தாயக மக்கள் மறந்துவிடமுடியாது. ஒரு கட்டுக்கோப்பான சமூகத்தை கட்டியெழுப்பிய பெருமையும் இந்த கலை இலக்கியத்துக்கு உள்ளது. படைப்பாளர்கள் கடந்த காலங்களில் தமது படைப்புக்களின் தன்மைக்கேற்ப ஒன்றிற்கும் மேற்பட்ட புனைபெயர்களைக் கொண்டிருந்தனர். அண்மைக்காலங்களில் அவ்வாறான பல்துறை எழுத்தாற்றல் அருகிவருவதால் ஓரிரு புனைப் பெயர்களோடு நின்று விடுகின்றன.

ஈழப்போராட்டம் எப்படி வர்க்க வேறுபாடுகளைத் தகர்த்து ஒரு சமூக சமத்துவத்தைப் பேணியுள்ளது என்பதையும், ஈழப்போரின் முடிவில் தலைதூக்கும் வர்க்கவேற்றுமைகள் பற்றியும் இங்கு ஆராயப்பட்டுள்ளது. போராட்டங்கள் தமிழரின் ஒரு பண்புசார் செயலாக காலா காலமாக நடைபெறுகின்றது. அதன் வடிவங்கள் மாறினாலும் நோக்கம் உரிமை, சுயகௌரவம் என்பதை நோக்கியே உள்ளது. இப்போராட்டங்களிலும் கலை இலக்கியத்தின் பணி பெரும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. பாடல்களும் நாடகங்களும் மக்களைத் திரட்டுவதில் பெரும் பங்காற்றியுள்ளது.

க.பரணீதரனும், ந.பிரபாகர் அவர்களும் நன்கு கட்டமைக்கப்பட்ட வினாக்களைத் தொடுத்ததன் மூலம் இவ்வாறான தரவுகளை ஒரு சான்றாக வாய்மொழி மூலமாகப் பெற்றிருக்கின்றனர். இது இலக்கிய வரலாற்றுப் பணியில் ஒரு மைல்க்கல். மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் வரும் எமது கடந்தகால வரலாறுகளை ஆவணப்படுத்துவது என்பது இலக்கியப் பரப்பின் ஒரு பிரதான பணியாகத் திகழவேண்டும். க.பரணீதரன் பல சிரமத்தின் மத்தியிலும் தனது இலக்கியப் பணியில் பல பரிமாணங்களில் புதுமையைப் புகுத்தி வருகின்றார். அவற்றில் ஒன்றாகவே இந்த வாய்மொழி வராலாறு என்ற நூல்களின் வருகை வரலாற்று ஆவணமாக பதிவுசெய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌசி (ஜெர்மனி)

# சுடரியின் "அவளுக்கென்று... ஓர் உலகம்!




சுடரியின் "அவளுக்கென்று... ஓர் உலகம்" பெண்ணின் சுயத்தை உரக்கப் பேசிப் பெண்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் சிறுகதைத் தொகுப்பு.

"அவளுக்கென்று... ஓர் உலகம்!" என்பது இலங்கை எழுத்தாளர் சிவகௌரி (சுடரி) அவர்களின் இரண்டாவது படைப்பாக வெளிவந்துள்ள சிறுகதைத் தொகுப்பாகும். ஜீவநதி வெளியீட்டின் 485 ஆவது வெளியீடாக அக்டோபர் 2025 (ஐப்பசி) இல் 76 பக்கங்களில் இத்தொகுப்பு முதற்பதிப்பைக் கண்டுள்ளது.

## உள்ளடக்கம் மற்றும் கருப்பொருள்

இத்தொகுப்பில் மொத்தம் ஏழு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. அவை:

* தனி வளை
* அன்புக்கு என்ன பெயர்
* விதி விலக்குகள்
* காக்கை கூடு
* காலத்தின் கோலம்
* கௌரவக் கொலை
* அவளுக்கென்று ஓர் உலகம்

இந்தக் கதைகள் யாவும் பெண்களை முன்னிலைப்படுத்தி எழுதப்பட்ட சமூக நோக்கு மிக்க படைப்புகளாகும்.

பெண்களின் துன்பங்கள், அவர் களுக்கு இழைக்கப்படும் அநியாயங்கள், அவர்கள் மீது சுமத்தப்படும் சுமைகள், மற்றும் அடக்குமுறைகள் போன்றவற்றை இக்கதைகள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

ஆசிரியரின் "என்னுரை", இந்தத் தொகுப்பின் நோக்கத்தைத் தெளிவாக எடுத்துரைக்கிறது. போராடத் துணிந்துவிட்ட ஒவ்வொரு பெண்ணையும் "அக்கினி தேவதைகள்" என்று வர்ணிக்கும் ஆசிரியர், அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு பெண்ணுக்குப் பின்னாலும் அவளுக்கென்று ஒரு தனி உலகம், ஒரு கதை இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

அவளது கனவுகள், விருப்பங்கள், ஆசைகள், பிரச்சினைகள், வாழ்வியல் போராட்டங்கள் என எண்ணிலடங்கா விடயங்கள் அவளுக்குள் நிறைந்து கிடக்கின்றன.

ஆனால், பெரும்பாலான நேரங்களில் அவள் தனது உலகத்தை மறைத்து விட்டு, சமூகம் அமைத்து வைத்த உலகத்துள் வாழப் பழகி விட்டாள். தன் சுயம் தேடி வெளிவரத் துடிக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களையும், வாழ்வியல் போராட்டங்களையும் பேசுவதாகவே "அவளுக் கென்று... ஓர் உலகம்" என்ற இந்தச் சிறுகதைத் தொகுப்பு படைக்கப்பட்டுள்ளது.

நினைவுகளும், நிகழ்வுகளும், கற்பனையும் இணைந்து தான் சிறுகதைகளைக் கட்டமைக்கின்றன என்பதை எழுத்தாளர்களின் படைப்புக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

கதாசிரியர் கதைகளைச் சொல்லிவிட வேண்டும், வாழ்வியலை எடுத்துக்காட்டி விடவேண்டும் என்னும் நோக்கிலே கதையிலேயே தன்னுடைய முழுக்க கவனத்தையும் கொண்டு வந்திருக்கின்றார்.

காலங்கள் மாறினாலும் உலகம் எந்த அளவில் செயற்கை நுண்ணறிவு உலகத்திற்குள் இணைந்து விட்டாலும் இன்னும் மனங்களில் மாற்றத்தைக் கொண்டுவராத மக்கள் நிறைந்த உலகமாகவே தான் வாழும் சூழல் அமைந்திருப்பதை ஒவ்வொரு கதை களிலும் ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார்.

இக்கதாபாத்திரங்கள் எங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களே. அவர் களைப் பதிவு செய்ய வேண்டும் என்று நினைத்தமைக்குக் கதாசிரியாருக்குப் பாராட்டுக்கள். "கௌரவக் கொலை" என்னும் கதையிலுள்ள யோகம் என்னும் கதாபாத்திரம் நெஞ்சில் நிறைந்த கதாபாத்திரம்.

மனிதர்களின் கோபம், விட்டுக்கொடுக்காமை, மனங்களைப் புரிந்து கொள் ளாமை போன்ற பண்புகள் வாழ்க்கையில் அழிக்க முடியாத வலியைத் தரும் என்பதை எடுத்துக்காட்டுகின்ற ஒரு சிறப்பான கதையாக இந்நூலில் காணுகின்றேன்.

பெண்களின் நிலையை உயர்த்தவும், அவர் களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவசியமான ஒரு தொகுப்பாக இது திகழ்கிறது.

சமூகப் பார்வையும், துணிச்சலான கருப் பொருளும் கொண்ட இந்தத் தொகுப்பு, வாசகர் களுக்கு வாசிப்பின்பம் அளிப்பதுடன், சிந்தனை மாற்றத்தையும் ஏற்படுத்தும் ஒரு நல்லதொரு இலக்கியப் படைப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசோதரா சாந்தகுமார்

# குழந்தை ம. சண்முகலிங்கத்தின் இடுக்கண் வருங்கால்...




குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் எனது மானசீகக் குருக்களில் ஒருவர். அவர்களுடைய காலத்தில் நாம் வாழ்ந்ததும் அவருடன் கூடித்திரிந்து நாடக ஆற்றுகைகள் பலவற்றில் பங்கேற்றதையும் பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன். அக்காலங்களை மீள நினைத்து அவரை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

நாடகமும் அரங்கியலையும் பட்டப்படிப்பாகக் கொண்டு கற்றமையால் கருத்தரங்குகளிலும், களப் பயிற்சிகளிலும், நாடக ஒத்திகைகளிலும் அவருடன் பங்கேற்பது என்பது எமது பிரதான வேலையாக அமைந்திருந்தது. இந் நிகழ்வுகளில் நாம் மிகவும் விருப்பத்துடன் ஈடுபடுவோம். இந்தச் செயன்முறையின் அடிப்படையில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் இடுக்கண் வருங்கால் நாடகத்தில் நடிகராக இருந்த தோடு காட்சி விதானிப்பு, வேட உடை வடிவமைப்பு, ஒப்பனை பேன்ற பல்வேறு பொறுப்புகளையும் நான் ஏற்றுக கொண்டு இருந்தேன். அதனால் ஏற்பட்ட அனுபவங்கள் அளவற்றது.

குழந்தை. ம. சண்முகலிங்கம் அவர்களின் இடுக்கண் வருங்கால் சிறுவர் நாடகம் பதிப்பாசிரியர் நாகேந்திரம் நவராஜ் அவர்களின் முயற்சியால் நூலுருப் பெற்று ஜீவநதி வெளியீடாக எம் கைகளில் தவழ் கின்றது. அட்டைப்படத்தினை எடுத்துக் கொண்டால் அட்டையின் வர்ணம் அதனுள் அமைந்திருக்கும் உருவம் என்பன நிறைவைத் தருகின்றது. பாத்திரம் கதை சொல்லும் என்ற வகையில் சிக்கல்கள் நிறைந்த வேட உடை அணிந்த பெண் ஒருத்தி ஒரு வெளியில் அசைவ தாக சித்திரிக்கப்பட்டுள்ள குறியீட்டுப் படமாகக் காணப்படுகிறது. வெளி கரடுமுரடானதாக இருப்பினும் ஒர் நம்பிக்கையும்இ விடிவு வரும் என்ற எண்ணத்துடன் அசைவதாக அதன் வர்ணப் பிரயோகங்கள் பூசப் பட்டுள்ளதும் மனதைக் கவர்ந்திருக்கின்றது. எனினும் நாடகத் தலைப்பானது "இடுக்கண் வருங்கால்.." என்று தொக்கு நிற்பதாக அமைந்தால் என் அளவில் நல்லதாக இருந்திருக்கும் என எண்ணத் தோன்றுகின்றது.

இடுக்கண்வருங்கால்... என்ற சிறுவர் நாட எழுத்துருவை எடுத்துநோக்குவோம் ஆயின் இது சிறுவர்களுக்காக எழுதப்பட்ட நாடகமாக அமைந் திருந்த போதும் வளர்ந்தவர்களும் சிறுவர்களும் இணைந்து ஆற்றுகை செய்யும் வகையிலேயே இதன் எழுத்துரு எழுதப்பட்டுள்ளது.

போரின் விளைவால் "குடும்பங்கள்" சின்னா பின்னமாக்கப்படுகின்றன. குடும்ப அமைப்புகள் கேள்விக் குட்படுத்தப்படுகின்றன. இதனால் முதியவராக இருப்போர் பிள்ளைகளைப் பிரிந்து வாழவேண்டிய நிர்ப்பந்தம். அதனால் ஏற்படும் ஏக்கம் இந்த நாடகத்தின் ஆரம்பத்தில் இழையோடிக் காணப்படுகின்றது.

பாட்டன்: ஜனனியை பார்த்தால் எங்கள் பேத்தி போல இருக்கிறாள்...

பாட்டி :அதுதான் ஒருக்கால் தொட்டுப் பார்க்க, ஆசையாக இருக்கிறது

சுந்தரி : பாவம் ஜனனி தாய் தகப்பனை இழந்தவள்.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் பிள்ளைகளின் உரையாடலில்

பிள்ளை1: பேரழிவின் பேரழிவு.

பிள்ளை1: புரிகிறதுஇஎனினும் யாரிடம் சொல்லி அழுவது.

இந்த உரையாடலின் தொடர்ச்சியாக ஆனந்தி என்ற பாத்திரம் கூறும்போது "தன்கையே தனக்குதவி" என்பது போல "குட்டி யானைக்கு தன் தும்பிக்கையில் நம்பிக்கை வைத்து துணிவோடு வாழத்தூண்டிய நாடகம்" என்று கூறி பிள்ளைகளின் உரையாடல் மூலம் அக்கதையை எடுத்துச் சொல்லி குழந்தைகளுக்கான உத்திகளை கையாண்டு சிறுவர்களுக்கான உளவியல் நாடக வகைக்குள் இட்டு செல்கிறார் நாடக ஆசிரியர். குழந்தைகள் வாழ்வின் அத்திவாரம் அல்லவா?...

பதிப்பாசிரியர் நாடகம் எழுந்த வரலாற்றை மிக அழகாகப் பதிவிட்டுள்ளார். 1995 இல் நடந்த பாரிய இடப் பெயர்வின் பின்னர் யாழ்ப்பாணத்து மக்கள் 1996 களில் யாழ்பாணத்தில் மீளக்குடியமர்ந்து வாழ்வியலைத் தொடங்கும் காலத்தில் நாடக அரங்கக் கல்லூரியால் கருத்தரங்கும் அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் களப்பயிற்சியும் இந்நாடகத்திற்கான அடித்தளமாக அமைந்ததும், இக்காலத்தினை அண்டிய காலப் பகுதியில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவிற்காக தே.தேவானந்தின் துணிவு நாடக ஆற்றுகையும் பின்புலங்களாக அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

நடிப்பு என்பதும் அதனை அவர் கற்றுத் தருவதும் ஒரு தனி ரகம் எமக்குள்ளே காணப்படும் உணர்வுகளை மெருகூட்டி அப் பாத்திரங்களைக் கட்டி எழுப்புவர். நான் ஜனனியின் பாட்டியாக நடித் திருந்தேன் எனது தங்கை பிள்ளையாக நடித்திருந்தார். நாடகத்தை நடித்தவர்களில் பலர் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் நாடகப் பாடத்தை ஒரு பாடமாக எடுத்து பட்டப்படிப்பை மேற்கொண்டவர்கள். சிலர் உயர்தர மாணவர்கள். சிறுவர்கள் சைவ பிரகாச வித்யாசாலை மாணவர்கள். இந்நாடகத்திற்கான இசை றொபோட் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அவர் நாடகத்திற்கு புதியவர் இந்த நாடகத்திற்கு பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை சேரின் நாடகங்கள் பலவற்றிற்கு இசை யமைத்து நாடக வரலாற்றில் தனது தடத்தைப் பதிக்கும் நிலைக்கு உயர்ந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இடுக்கண் வருங்கால் என்ற இந்நூலின் இறுதிப் பகுதியில் "நாடகம் என்பது ஆற்றுகைக் கலை" என்ற வகையில் ஆற்றுகையின் போது பார்வையாளராக இரசித்தவர்களது குறிப்புகள் இந்நூலின் பின்னே இணைக்கப்பட்டுள்ளமை சிறப்பாக உள்ளது. இது பதிப்பாசிரியர் ஆற்றுகை கலைகளின் மேல் கொண்டுள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்துவதாக அமை கின்றது. அவற்றுடன் மாஷாவும் கரடியின் கதை தமிழிலும் ஆங்கிலத்திலும் இணைக்கப்பட்டுள்ளது. இது பதிப்பாசிரியரின் பெருந்தன்மையைக் காட்டு கிறது. இன்று நாடகம் கல்வியாக வளர்ந்து விட்டது. இதில் குழந்தை ம.சண்முகலிங்கம் சேரின் முயற்சி பெரும் பங்கு உள்ளது என்பதை உணர்ந்ததாலோ...?. .எமக்கும் எமது மாணவர்களுக்கும் கதை ஒன்று எவ்வாறு நாடகமாக்கப்பட்டுள்ளது என்பதை படித்து அறிவதற்கு உதவுவதாக அதனை அவர் இங்கு பதிப்பித் துள்ளார். அத்துடன் பிற மொழிகளில் உள்ள கதைகள் மூலம் அவர்களுடைய அனுபவத்தை உணர்த்துவதகவும் அது எமக்கு அமைந்துள்ளதுடன் குழந்தை ம.சண்முக லிங்கம் அவர்களின் சிறுவர் நாடகங்கள் சிலவற்றை தொகுத்துப் பட்டியல் படுத்தியிருப்பதும் சிறப்பானது கற்றலுக்கு எம்ம வருக்கு உதவுவதுடன் வரலாற்று பதிவாகவும் இருக்கும். இறுதியில் சைவப்பிரகாச வித்தியாசாலை யில் ஆற்றுகை செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆற்றுகையின் செம்மையை உறுதிப்படுத்துவதாக உணர்கின்றேன். என்னால் சேகரிக்கப்பட்ட அவ் நாடகப்படங்களின் பயன்பாடு எனக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

புத்தகத்தின் பின் பக்க அட்டை படத்தில் உள்ள குழந்தை சேரின் தோற்றம் அவரை மீண்டும் ஒருமுறை பார்க்க இயலாதா என்ற மனப் பிரேமையை தருவதுடன் அவர் சிறுவர் நாடகம் பற்றி எழுதும்போது "நான் என்றும் எதற்கும் எவருக்கும் பிதாமகராக இருந்ததில்லை சிறுவர் நாடகம் சோமசுந்தரப் புலவர் காலத்திலேயே எம்மிடம் இருந்துள்ளது...அரங்கு பற்றிய அறிவு ஆசிரியர் களுக்கு கொடுக்க நாம் முயற்சிக்க வேண்டும்" என குழந்தை சேர் குறிப்பிடுவது நாடகத்தின் அவசியத்தையும் சிறப்பையும் உணர்த்துவதாகவும் தற்புகழ்ச்சியை விரும்பாமல் உள்ளதை உள்ளவாறு கூறுபவராக அவர் உள்ளார் என்பதை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இறுதியாக பதிப்பாசிரியரின் குறிப்புகள், நாடகம் பற்றிய சில தகவல்களையும், நாடகம் பற்றிய தெளிவையும் ஏற்படுத்த உதவுகின்றது. பதிப்பாசிரி யர், குழந்தை சேரின் மேற்கொண்டுள்ள மதிப்பால் இந்நூலை செம்மையாகத் தந்துள்ளமைக்காக மீண்டும் ஒருமுறை எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# புலோலியூர் ஆ.இரத்தினவேலோனின் நினைவழியா நூல்கள்




புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் நாடறிந்த விமர்சகராக வலம் வருகின்ற உன்னதமான படைப்பாளி. சிறந்ததொரு சிறுகதைப் படைப்பாளியாக விளங்கும் இரத்தினவேலோன் ஈழத்தில் இருந்து வெளி வருகின்ற பல நூல்களை பத்திரிகைகள் சஞ்சிகைகளில் விமர்சனக் கட்டுரைகளை எழுதி வாசகனுக்கு அறிமுகம் செய்து வைக்கின்ற அருமையான காரியத்தை நீண்ட காலமாக மேற் கொண்டு வருகின்றார். அந்த வகையில் புதிய சகத்திரப் புலர்வின் முன் ஈழத்துச் சிறுகதைகள், அண்மைக்கால அறுவடைகள் -1, 2, புலவொலி, அன்றலர்ந்த மலர்கள் ஆகிய நூல்கள் வரிசையில் இந்நூலும் அமைகின்றது. ஈழத்தின் 20 படைப்பாளர் களது நூல்கள் பற்றிய விமர்சன கட்டுரைகளை உள்ளடக்கி ஜீவநதியின் 481 ஆவது வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. நாவல், சிறுகதை, கட்டுரை, நாடகம், சிறுவர் பாடல், சிறுவர் கதை என பல்வகை சார்ந்த நூல்களையும் தன் பார்வைக்குட் படுத்தியுள்ளார். மூத்த எழுத்தாளர்கள் முதல் இளம் படைப்பாளர்கள் வரை அனைவரையும் மிகுந்த மரியாதையுடன் நடத்துபவர் இரத்தினவேலோன். அந்த வகையில் இந்நூலிலும் மூத்த படைப்பாளர்களது நூல்கள் பற்றியும் இளம் எழுத்தாளர்கள் நூல்கள் பற்றியும் விமர்சனங்கள் விரிக்கப்பட்டுள்ளன. இரத்தினவேலோன் மிகுந்த சிரத்தையுடன் நூல்களை முழுமையாக வாசித்து அதன் மையப் பொருளை கண்டுணர்ந்து ஆழமான விமர்சனத்தை முன் வைக்கும் திறன் படைத்தவர். இவரது விமர்சனங்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்து குறித்த நூல் பற்றிய தேடலை வாசகன் மேற்கொள்ள காரணமாக அமைகின்றது. படைப்பாளனை பாதிக்காத வகையில் இவரது விமர்சனம் அமைவதும், படைப் பாளனுக்கு ஒர் ஊக்கியாக இவரது விமர்சனம் அமைவதும் சிறப்பு. தாமரைச் செல்வியின் நாவலை விமர்சிக்கும் இவர் அதே வேளை பாலேந்திராவின் நாடக நூலையும் விமர்சிப்பார். இதற்கு காரணம் இவரது பல்துறை சார்ந்த வாசிப்பும் நூல்கள் மீதான பிரியமுமே. அதன் காரணமாகவே இவர் கொழும்பு மீரா பதிப்பகத்தினை நடாத்தி 108 நூல்களையும் வெளிக் கொணர்ந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. வாசகர் களுக்கு நினைவழியா நூல்கள் வழியாக கிடைக்கும் வாசிப்புச் சுவை மிக நேர்த்தியானது என்பதுடன் படைப்பாளர்களுக்கும் மகிழ்வைத்தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலமுனை பாறூக்

# சிறுவர் வாசிப்புக்குகந்த சிறந்த நாவல்



நிக்குவல்லைக் கமால் சிறுகதை, நாவல், கவிதை, சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று எழுதிக் குவித்து வரும் அசுர வேகப் படைப்பாளர். அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஈழத்து இலக்கிய உலகில் தடம்பதித்து வரும் முக்கிய இலக்கிய ஆளுமை. சிங்களப் பிரதேசங்களில் வாழ்ந்து கொண்டு தமிழ் வளர்த்து வரும் எழுத்தாளர்களில் மிக முக்கியமானவராகப் பார்க்கப்படும் அவர், தென்னிலங்கை முஸ்லிம் மக்களின் பேச்சுமொழியை தனது கதை களுக்குள் கொண்டு வந்த தனித்துவம் மிக்க படைப்பாளராகவும் பெரு மதிப்புப் பெற்றிருப்பவர். தமிழ் மொழி இலக்கிய வெளியில் மாத்திரமல்லாமல் சிங்கள மொழிபேசும் வாசகர் மத்தியிலும் தனது மொழிபெயர்ப்பு நூல்களி னால் பேசப்படுபவர். இற்றைவரை, 73க்கும் அதிகமான நூல்களைத் தந்திருக்கும் பன்னூலாசிரியரான அவரின் புதிய நூலாக - ஜீவநதி வெளியீடாக இப்போது மலர் கிறது "பூரித்த பொன்வனம்" சிறுவர் நாவல். சிறுவர்களின் மன உலகைப் புரிந்து கொண்டு, அவர்களுக்கு விருப்பமான மிருகங்களை பாத்திரங் களாக உலவ விட்டுக் கதை சொல்கிறார் நூலாசிரியர்.

சிங்கராசனை அரசனாகக் கொண்ட "பொன் வனம்", அரிய சிங்கத்தாரை தலைவராகக் கொண்ட ஆலோசனக்குழுவின் திட்டமிடலிலும், ஆலோசனை யிலும் வளம்பெற்று மிளிர்கிறது.

"நமது பரம்பரை ஆட்சியில் இப்படி நடக்க வில்லையே "என்று கவலைப்பட்டுப் பொறாமைப்படும் புலியாரும், கரடியாரும் சதித்திட்டம் தீட்டுகின்றனர். கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிங்கராசனை தங்கள் வலைக்குள் வீழவைத்து விளையாட்டு மைதானம் அமைப்பதிலும், பூங்காவனம் அமைப்பதிலும் ஏனைய பொழுது போக்கு இடங்களை நிறுவுவதிலும் அவரை உற்சாகப் படுத்துகின்றனர். பொன் வனத்தின் மரங்கள் வெட்டப்படுகின்றன. இயற்கை வளங்கள அழிக்கப்படு கின்றன. "பொன்வனம்" வறுமையில் வீழ்கிறது. இதனால் மனம் வருந்தும் சிங்கராசன் உண்மை நிலையை அறிந்து மீளவும் அரிய சிங்கம் குழுவினரை நாடுகின்றார். புதிய திட்டமிடலாலும், நடவடிக்கைகளாலும் வளம் பெற்றுப் பூரித்துப் போகிறது பொன்வனம்.

இதுதான் நாவலின் கதைச் சுருக்கம். ஆனால், இந்தச் சின்னஞ்சிறு கதையை சிறுவர் உள்ளங்களைக் கவரும் வகையில், சிக்கலற்ற சிறு,சிறு வாக்கியங்களில் தெளிந்த நீரோடையாக நாவ லாக்கித் தருகிறார் திக்கு வல்லைக் கமால். நாவலினூடாக சிறுவர் நெஞ்சங்களில் நல்ல கருத்துகள் விதைக்கப்படுகின்றன.

"மரங்கள் வெட்டப்படக் கூடாது"

"இயற்கை வளங்கள் அழிக்கப்படுதலாகாது"

"பொறாமை கொள்ளக் கூடாது"

இதுபோல, விளையாட்டின் முக்கியத்துவம் பூங்காக்கள், பொழுது போக்கு என்பவை பற்றி யெல்லாம் நாவல் பேசுகிறது. வர்ணனைகள், படங்கள் கதைக்குச் சுவை சேர்க்கும் சந்த, கும்மிப் பாடல்கள் என்பன சிறுவர் இலக்கியத்தில் நூலாசிரியருக்கு இருக்கும் ஆழ்ந்த புலமையையும் அனுபவத்தையும் வெளிப்படுத்துகின்றது. சிறுவர் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் வகையில் அமைந்த சிறந்த நாவலாக மலர்ந்திருக்கிறது "பூரித்த பொன்வனம்". நூலாசிரி யருக்கு நமது வாழ்த்துகள்.

மாத்தளை சோமு

# இலக்கிய உலா தேடலைத்தரும் கட்டுரைகள்



சிட்னியில் வாழும் வழக்கறிஞர் முற்போக்கு செயற்பாட்டாளர் பகவதாஸ் ஸ்ரீஸ்கந்ததாஸ் படுகொலை தொடர்பான சட்ட ஆய்வுகளுடன் கூடிய ஒரு நூலை ஆங்கிலத்தில் எழுதி அதிர்வலைகளை உண்டாக்கியவர். இலக்கிய உலாவிலும் எழுத்து இலக்கிய உலகில் அதிர்வலையை உண்டாக்கியிருக்கிறார் என்பதற்கு "சிவ வாக்கியார் சிந்தனையில் புதுமையும் புரட்சி யும், அநீதிகளைக் கண்டிக்க மேடையேறிய வேதவல்லி குறித்த கட்டுரைகளும் அடை யாளங்களாகும்.

பீஜீ தீவுக்கு சென்று அங்குள்ள தமிழர்கள் குறித்தும் தமிழ்க்கவிதைகள் குறித்தும் பீஜித் தீவில் தமிழ்க்கவிதைகள் என்ற நூலை வெளியிட்டவர். இதற்காக அரச காப்பகம் சென்று பழைய தமிழ் இதழ்களின் தொகுப்புகளைப் பிரதி செய்து வந்துள்ளார். பீஜிக்கு எத்தனையோ தமிழர் பயணம் போகிறார்கள். ஆனால் இவரோ தமிழைத் தேடி போய் சிலவற்றைத்தேடிக் கொண்டு வந்திருக்கிறார். அதேபோல் நியூசிலாந்து போன இவர் நியூசிலாந்தில் பழம் பொருள் காப்பகத்தில் இருக்கும் கப்பல் தமிழி மணியைப் பற்றி கட்டுரை எழுதி தமிழி உலகுக்கு கொண்டு போனார் இவரிடம் பேச்சிலும் எழுத்திலும் தேடல் இருக்கிறது. இவரது தேடல் தமிழின் சிறப்பையும் ஆழத்தையும் காட்டுகிறது. இலக்கிய உலாவில் கட்டுரைகள் மேல் எழுந்த வாரியாகப் பார்க்கிற போது தெரி யும். ஆனால் அவற்றை வாசிக்கும் போது பகவதாஸ் ஸ்ரீஸ்கந்ததாஸின் தேடலைச் சுவைத்து அறிய முடியும். இந்நூலில் உள்ள பன்னிரண்டு கட்டுரைகளும் பன்னிரண்டு விதமானவை. ஒன்றோடு ஒன்று தொடர் பில்லாதவை. பலரும் அறிய வேண்டியதைச் செல்பவை. ஆசிரியரைப் பொறுத்தவரை யில் மனிதர்களே அவர்கள். எங்கு வாழ்ந்தா லும் முக்கியமானவர்கள் அவர்களை அடை யாளம் கண்டு கட்டுரைகளை எழுதியுள் ளார். வாசிப்பவருக்கு புதிய அனுபவம் ஏற்படும். இவற்றை நூலாக வெளியிட்ட ஜீவநதி பாராட்டிற்குரியது அடுத்த தலை முறையினரின் அறிவுத் தேடலுக்கும் கடந்த கால மொழியை அறியவும் படிப்போரை ஆற்றல் கொண்டவராய் மாற்றும் வல்லமை கட்டுரைத் தொகுதிக்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலியூர் வேல்நந்தகுமார்

# பா.வேதநாயகத்தின் “பல்வித கவிதைச் சோலை”




ஜீவநதி பதிப்பகம் அண்மையில் வாசிப்பு மாதத்தையொட்டி முப்பத்தொரு நாளும் வெளியிட்ட முப்பத்தொரு புத்தகங்கள் வரிசையில் தும்பளையூர் கலையரசு பாவிலுப்பிள்ளை வேதநாயகம் என்ற மூத்த கலைஞரது “பல்வித கவிதைச் சோலை” என்ற இக்கவிதைத் தொகுப்பும் ஒன்றாக அமைகிறது. இதனைவிட இவரது “இரு கப்பிகள்” என்ற சிறுகதைத் தொகுப்பும் இம் முப்பத்தொரு நூல் வரிசைக்குள் இடம்பெற்றுள்ளது.

வேதநாயகம் ஐயா அவர்கள் அடிப்படையில் ஒரு மரபுவழி கூத்துக் கலைஞர். அதனை பயிற்றும் அண்ணாவியார். வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையுடன் அன்றில் இருந்து இன்று வரை தொடர்ந்து இயங்கி வருபவர். பல்துறை ஆற்றலாளர்; கலை இலக்கியப் போட்டிகளில் பங்கு கொண்டு அவர் எழுதிய பல கவிதை சார் சிறுகதைகள் பல விருதுகளை வென்றிருக்கின்றன. அவ்வகையில் இவரால் அவ்வப் போது எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பாக “பல்வித கவிதைச்சோலை” என்ற இந்நூல் மலரந்துள்ளது. இக் கவிதைகள் அவரால் 1987க்கு பின்னர் எழுதப்பட்டவை. பெரும்பாலும் இவை மரபுக் கவிதைகள். பண்டிதர் ஆசிநாதன், சில்லையூர் செல்வராசன், மரியாம்பிள்ளைப் புலவர் போன்றோரிடம் கற்ற கல்வி தன்னை மரபில் வழிப்படுத்தியதாக குறிப்பிடுகிறார். தனது மறைந்த தம்பி, தங்கைக்கு இந்நூலை சமர்ப்பித்துள்ளார். பல கவிதைகள் நீண்ட கவிதைகளாய் அமைந்துள்ளன.

பல வடிவ சகர்மங்கள் என்ற கவிதையில் போரையும், பொருட்களின் விலையேற்றத்தையும் சாட்டி திருடும் கூட்டத்தை எடுத்துக் காட்டுகிறார்.

தாதியத்தின் மகத்துவம் பற்றி கூறுகையில்

“சோதியதை சொரிகின்ற சூரியனாய்
- பேதமற சேவையாற்றும்
தாதித்து தனித்துவமோ மகத்துவமோ
- தரணியிலே முடியாது”

என்கிறார்.

நிறைவான தேசமாய் யாழ் மண்ணைப் படைப்பீர் என்ற கவிதையில்,

“சித்தமதைக் கலக்குகின்ற கத்திவாள்
-வெட்டுதனைச் சிலரே செய்ய
உத்தரவை இடுவதற்கு தத் தி வந்த
- போதைப்பொருள் உதவுதம்மா”

என்ற வரிகள் சமகாலத்துக்கும் பொருத்தமாய் அமை கின்றன. வயலை நம்பி என்ற கவிதை ஒரு பாடல் அமைப்பிலே பல்லவி சரணங்களோடு அமைந்துள்ளது.

“ஏர்முனையோர் கூர் கொண்ட
நெஞ்சமே இல்லை அதை
ஏற்றுக் கொண்டால் வாழ்விலே
பஞ்சமே இல்லை

என்ற இசைச்சிறப்பு மிகு பல்லவியோடு தொடங்கும் இப்பாடல்,

“அயலை நம்பி நின்றாலே
அழுகை வரும் தன்னாலே
வயலை நம்பி முன்னாலே
வருமே பயன் பின்னாலே”

என்ற சரணத்தோடு முடிகிறது. நவீன கடவுள் என்ற கவிதையில் மரபுவாழ்வோடு ஒப்பிட்டு நவீன மாற்ற வாழ்வை சாடுகிறார்.

மனுநெறி வெண்பா என்ற கவிதை வெண்பா யாப்பிலே எழுதப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

“காலத்தில் கடந்திட்ட ஞாலத்தில் மானிடர்
கோலமே மாறி முதிர்வடைவள் - ஓராட்டும்
நியமும் சடலமும் ஆலமும் என்றுமே
காலத்தால் முதிர்வுறா காண்”

என்ற வெண்பாவை குறிப்பிடலாம். இதே போல நெறிவழி புரி, நன்னெறி போன்ற கவிதைகள் எளிமையாய் கட்டிறுக்கமாய் அமைந்து அறிவுரை சொல்கின்றன.

வெற்றி எதிலே, உயிர்ப்பித்தல் கடமை செத்த வாழ்வு, வெற்றியின் அமைதி போன்ற தலைப்புகளில் அமையும் நீண்ட கவிதைகள் யுத்த வெற்றியின் அவலங்களை பேசி மானிட நேசிப்பை வலியுறுத்து கின்றன.

இவ்வாறு தோடர்ந்து வரும் கவிதைகளும் பண்பாட்டின் மீதான சமூக வழிப்புணர்வை வலியுறுத்தி எம்மை சிந்திக்க வைக்கின்ற காலம் பிந்தி வந்தாலும் இவரது பல்விதமான கவிமுக தரிசனத்தை ஞாலத்துக்கு வெளிப்படுத்திய ஜீவநதிக்கும், படைப்பாளிக்கும் வாழ்த்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

























இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

noolaham.org | aavanaham.org